
ஓம்
சக்தி

# காந்தக்குரலோன்

திருவாளர்

## சோம சச்சிதானந்தன்

அவர்களின்




# மணிவிழா மலர்

23-09-2017 | Toronto

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேசப்பற்றும் இனப்பற்றும் கிராமப்பற்றும் காந்தியப்பற்றும் கொண்ட ஒருவரை தந்தையாகவும் தாயாகவும் பெற்றதை எண்ணி நாளும் மகிழ்வதோடு அந்த உன்னதமான தந்தையின் உணர்ச்சிகள் தான் என்னையும் உணர்வுபெறச் செய்து தேசப்பணி, பொதுப்பணிக்கு ஆளாக்கியது. தமிழின உணர்வை ஊட்டி வளர்த்த தந்தையையும் தாயையும் மனங்களில் நினைந்து சுமந்திடும் அன்புமகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவினரின் வாழ்த்து

ஈழத்திருநாடாம் புங்குடுதீவுக் கிராமத்தில் புகழ்பூத்த குடும்பத்தில் பிறந்த உயர்திரு. சோம சச்சிதானந்தன் அவர்களுக்கு 2017-9-22 ஒரு பொன்னானநாள். அது தான் அவர் அறுபது வயதினை எட்டிப்பிடிக்கும் நாளாகும். மேற்படி கிராமத்தில் சமூகநலனில் பெரும்பங்கு கொண்ட உழைத்த அமரர் வே.க. சோமசுந்தரம் தம்பதியினருக்கு மூத்த ஆண்மகனாகப் பிறந்தவரே சோம சச்சிதானந்தன் அவர்கள். புங்குடுதீவு மகா வித்தியாலயம், வேலணை மத்திய கல்லூரி ஆகியவற்றில் ஆரம்ப இடைத்தரக் கல்வியைப் பயின்றவர். இளமையில் கல்வியில் சிறந்து விளங்கிய இவர் நாட்டுச் சூழ்நிலை காரணமாக பல்கலைக் கல்வியை இழந்தவர். தந்தையாரின் விருப்பப்படியே அரச சேவையில் இணைந்து ஆரம்பத்தில் விசேட தேவைகள் அதிகாரியாகவும் அதனைத் தொடர்ந்து கிராம அதிகாரியாகவும் பணிபுரியும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இளமையிலிருந்து தந்தை வழி நின்று சமூக நலனில் அக்கறை கொண்டு சமூகப்பணியில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். கிராம அதிகாரிகள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்பது அரசின் இறுக்கமான சட்டமாக இருந்து வருகிறது. அதுவும் யுத்தபூமியாக இருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றும் கிராமசேவையாளர்களின் கடமையானது மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருந்தது. நொந்த மக்களுக்கு உதவி செய்வதா அல்லது அரசினதும் பாதுகாப்பு படையினரின் கட்டளைக்கு அடிபணிவதா என்பதைப் பொறுத்தவரை கிராம அதிகாரிகள் திரிசங்கு நிலையில் வாழ்ந்தார்கள் என்றே கூறவேண்டும். இக்காலகட்டத்தில் பல கிராம அதிகாரிகள் உயிர்ஆபத்தினைக் கூட சந்திக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இவ்வாறான சூழலில் தான் திரு. சோம சச்சியும் தனது கடமையை செய்ய வேண்டி இருந்தது. அவரது அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்வதில் முன்னின்று உழைத்தவர்களில் இவரும் முக்கியமானவர் ஆவர். இதனால் பல்வேறு அசௌகரியங்களையும் அனுபவிக்க வேண்டியிருந்தது. இத்தகைய சூழலில் தம்மை பாதுகாக்கும் நோக்குடன் கனடா தேசத்திற்கு புலம்பெயர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்.

உயர்திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் தாயகத்தில் வாழ்ந்த போது இளைஞர் கழகம், விளையாட்டுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் போன்ற பல அமைப்புக்களில் பொறுப்பான பதவிகளிலிருந்து கிராம வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியவர். சிறுவயதிலிருந்து இயற்கையாக இசைஞானமும் குரல் வளமும் பெற்றவராக இருந்தமையால் ஈழத்திலே தலைசிறந்த இசைக்கலைஞராக தன்னை உயர்த்திக் கொண்டவர். மேலும் எவர் ஒருவருக்கு உதவிகள் தேவைப்படுமோ அவ்விடத்திற்குச் சென்று தன்னாலான பங்களிப்பினை நல்கும் நல்லமனம் கொண்டவராக அன்றும் இன்றும் காணப்படுகின்றார். குறிப்பாக பரந்த நிலப்பரப்பினைக் கொண்ட கனடாவில் வாகன வசதியின்றி பொதுப்போக்குவரத்தில் பயணம் செய்து இதனை சாதித்து வருவதை கண்கூடாக காணமுடிகிறது. இத்தகைய பின்புலத்தினைக் கொண்ட சோம சச்சிக்கு வயது அறுபதினை எட்டுவதை அறிந்த நண்பர்கள் அவரது சேவைகளைப் பாராட்டும் வகையில் மணிவிழாவினை கொண்டாடி மகிழ வேண்டுமெனத் தீர்மானித்ததன் விளைவாக இன்று கொண்டாடப்படுகின்றது.

மேற்குறித்த தீர்மானத்தினை அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தெரிவித்த போது ஆரம்பத்தில் அதனை விரும்பவில்லை. தொடர்ச்சியாக அவர்களுக்கு கொடுத்த அழுத்தத்தின் காரணமாக அவர்கள் தங்களது சம்மதத்தினைத் தெரிவித்தனர். மணிவிழாக்கான காலம், நேரம் என்பவற்றை மணிவிழாக் குழுவினர் தீர்மானித்ததன் பின்னர் விழா சிறக்க மணிவிழா மலர் ஒன்றினை வெளியிட வேண்டுமென்று எடுத்த தீர்மானித்தின் பிரகாரம் இவ்மலர் உங்கள் கைகளில் தவழ விடப்படுகிறது. மலர்குழு சார்பாக அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மலர்க்குழுவினர்:** பேராசிரியர் கா. குகபாலன், ஆ. செந்தில்வடிவேல்,
வை. இராஜேஸ்வரன், சோதி செல்லா, கென் கிருபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# றொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் வழங்கிய மணிவிழா நல்வாழ்த்து மடல்

"சமூக நற்பணித் தொண்டர்"

## திரு. சோம சச்சிதானந்தன்

தமிழ், சமய, கலை, கலாச்சார, சமூக நற்பணிகளை முன்னின்று ஏனையவருக்கு முன்னுதாரணமாக, சிறந்த தொண்டனாக வாழ்ந்துவரும் மணிவிழா நாயகன் திரு. சோம. சச்சிதானந்தன் அவர்களைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றோம். இலங்கை புங்குடுதீவின் மைந்தனாக இளவயதிலிருந்தே சமூக சேவையில் தனைஈடுபடுத்தி கிராமசேவகராக சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காகப் பல சமய, சமூக சேவைகளை முன்னின்று நடாத்தியவர். கனடா நாட்டில் கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக தமிழ் மக்களின் கலை விழாக்கள், பொது நிகழ்வுகள், என அனைத்து இன்ப துன்ப நிகழ்வுகளிலும் பங்கேற்று தன்னாலான அனைத்து உதவிகளையும் புரிபவர்.

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் முன்னைநாள் தலைவராக, உறுப்பினராக பல நற்பணிகளை தாயகத்திலும், கனடாவிலும் முன்னெடுப்பதற்கு வழிகாட்டியது மட்டுமன்றி தொடர்ந்தும் தொண்டாற்றி வருபவர். எடுத்த காரியத்தை மகிழ்வோடு அனைவரையும் ஒன்றிணைத்து செய்வதில் வல்லவர். இவர் சமயத் தொண்டுகள், ஆலயத் திருவிழாக்களில் தண்ணீர்ப்பந்தல் அமைப்பது போன்றதோடு தேவாரம், பண்ணிசை, பக்திப்பாடல்களைப் பாடுவதிலும் சிறப்பு வாய்ந்தவர். கனடா, ஐரோப்பா, இலங்கை ஆகிய நாடுகளில் தனது தேவார பண்ணிசை இசைத்தட்டை வெளியிட்டு பலரின் பாராட்டுதல்களையும் பெற்றவர் சச்சி அண்ணா அவர்கள். தமிழ், சமய, கலை, கலாச்சார, சமூக நற்பணிகளை புரிவதில் முன்னுதாரணமாக விளங்கும் திரு. சோம. சச்சிதானந்தம் அவர்களைப் பாராட்டி "சமூக நற்பணித் தொண்டர்" எனும் கௌரவப் பட்டம் 2006ம் ஆண்டு றொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தினால் வழங்கப்பட்டது.

கனடாவாழ் மக்கள் மனதில் சிறந்த சமூக நற்பணித் தொண்டராக இடம்பிடித்த புங்குடுதீவு சச்சி அண்ணா அவர்கள் புங்குடுதீவு கலட்டி வரசித்தி விநாயகர் அருளாலும், றொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் அருளாலும் நோய்நொடியின்றி தேகதிட ஆரோக்கியத்துடன் மேன்மேலும் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.



"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"

**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்**

ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை.

**SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO**
3025 KENNEDY RD. UNIT-10, SCARBOROUGH, ON. M1V 1S3 CANADA.
416.291.8500 facebook.com/vinaayagar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்கேஸ்வரம் ரொரன்றோ துர்க்காதேவி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவும், கனடா இந்து மத பீடாதிபதியுமாகிய சிவத்திரு. தியாகராஜா கணேசசுவாமிகள் வழங்கிய ஆசிச்செய்தி.

தெய்வ சக்தி கொண்ட திருமறைப் பாடல்களை பக்தி ததும்பும் வண்ணம் உருக்கமாகப் பாடும் ஆற்றல் மிக்க திரு. சோம சச்சிதானந்தன் அவர்களின் மணிவிழாக் காணும் நாள் அறிந்து அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அவர் துர்கேஸ்வரர் ஆலயத்திற்கு வருகின்ற சந்தர்பங்களில் தேவார திருமுறைப் பாடல்களை பாடும் போது மெய்மறந்து அந்தப் பாடல்களில் லயமாவது உண்டு. தேவாரங்களை இசைவடிவில் ஆக்கி இசைத்தட்டில் வெளியிட்டதும் என்றும் பெருமைக்குரியது. மேடையில் பேசினால் எல்லோரையும் வசீகரிக்கும் கம்பீரக் குரலும், திருமுறைப் பாடல்களை படிக்கும் போது பக்திரசம் கொண்ட வெண்கலக் குரலும் திரு. சோம சச்சிக்கு இறைவன் கொடுத்த வரம் எனலாம்.

சைவத்திலும் தமிழிலும் மிகுந்த நேசிப்பு கொண்ட இவர் கனடாவில் மட்டுமல்ல தாயகத்தில் வாழ்ந்த போதே ஒரு சமூகத் தொண்டராக, ஒரு கிராமத்தின் சேவையாளராக பணிபுரிந்து வந்திருக்கிறார்.

"இதனை இவனால் இவன் முடிக்கும் என்றாய்து
அதனை அவன் கண் விடல்"

என்பது திருக்குறள்.

ஒவ்வொரு செயற்பாட்டையும் நிறைவுற நிகழ்த்த உலகத்தில் ஆங்காங்கு உரியவர்கள் பிறக்கின்றனர். அவ்வாறு அவர்களை உருவாக்கி வைப்பவன் இறைவன். அந்த வகையில் இன்று மணிவிழாக் காணும் திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் அனைத்துச் செல்வங்களும் பெற்று இறையருளுடன் பல்வேறு பணிகளையும் நிறைவேற்றி என்றும் நீங்காப் புகழும் பெருமையும் பெற்று நீடுழி வாழ பேரருள் மிகு அன்னை துர்க்காதேவி அம்பாளை பிரார்த்தித்துக் கொண்டு என ஆசிகளை வழங்கிக் கொள்கிறேன்.

ஓம் துர்க்கா சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# Saratha Pedam
# சாரதா பீடம்

**Sivasri Srinivasa Kuganeswara Kurukkal**

"அரிது அரிது மானிடராதல் அரிது
மானிடராயினும் கூன் குருடு செவிடு பேடு
நீங்கிப் பிறத்தல் அரிது
கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தலரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செய்தலரிது
தானமும் தவமும் தான் செய்வாராயின்
வானவர் நாடு வழி பிறந்திடுமே..."

என்று மானிடப் பிறப்பின் மகத்துவத்தை ஔவையார் அழகாக எடுத்துரைக்கின்றார். இதற்கு இசைந்தால் போல் எங்கள் சச்சிதானந்தன் ஐயா வாழ்ந்து வருகின்றார் என்றால் மிகையாகாது. ஒவ்வொருவரின் பிறப்பும் இயற்கையின் நியதி ஆனால் அந்த நியதியை தனக்கு மட்டுமன்றி தன் குடும்பம், கிராமம், சமூகம், நாடு என்ற பரந்த நோக்கில் மிக உன்னதமான சேவையை செய்பவனே உண்மையான மனிதனாகின்றான்.

அதனால் தான் "மண்ணில் பிறந்த அனைவரும் மானிடரா? யார் சொன்னது? மனிதன் மனிதனாய் வாழும் வரை" என்பது கவிதை.

அத்தகையதொரு மனிதத்தன்மையோடு தான் பிறந்த ஊருக்கும், மக்களுக்கும், சமூகத்திற்கும், ஆன்மீகத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் சேவை புரிந்து வருகின்றார். அதனால் தான் இன்றும் அவரை நாம் எல்லோரும் சச்சி விதானையார் என்று அன்பாக அழைக்கின்றோம். எல்லோருக்கும் தெரியும் விதானையார் என்பவரின் பணி என்னவென்று. இன்றும் எமது தாய் மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து கனடா நாட்டில் வாழ்ந்து வந்தாலும் அவர்கள் தமது பணியினை தொடர்ந்து ஆற்றி வருகின்றார். அதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து செயலாற்றி வருவதோடு பாடசாலை அபிவிருத்தி மற்றும் கோயில் திருப்பணிகளுக்கும் தன்னாலியன்ற உதவியினை மேற்கொண்டு வருகின்றார். அத்தோடு நின்றுவிடாமல் வைத்தியசாலையில் நோயுற்று இருக்கின்ற நோயாளர்களை குணப்படுத்துவதற்காக நேரடியாகச் சென்று ஆறுதல் வார்த்தைகளை கூறுவதோடு, விசேட பிரார்த்தனைகளையும் செய்து வருகின்றார்.

சமயத்தோடும், ஆன்மீகத்தோடும் அவருக்குள்ள ஈடுபாட்டினை அவர் பாடி வெளியிட்ட பஜனை இசைத்தட்டுக்கள் நமக்கு பறைசாற்றி நிற்கின்றன. விழாக்காலங்களிலே ஆலயங்களில் பஜனை பாடுவதும், மற்றவர்களுக்கு அதனை சொல்லிக் கொடுப்பதிலிருந்தும் அவரது சிறந்த இசைஞானம் எமக்கு புலப்படுகின்றது. இத்தகைய சமய, சமூக, ஆன்மீக பணிகளை மேற்கொண்டு தனக்காவும், தன்னுடைய சமூகத்திற்காகவும் வாழ்ந்து வருகின்ற சச்சிதானந்தன் அவர்கள் எமது ஊருக்கே பெருமை சேர்க்கும் ஒருவராகத் திகழ்கின்றார். இன்று அவர் தனது அறுபதாம் பிறந்ததினநாளை கொண்டாடுகின்ற இந்த வேளை அவர் இன்னும் அறுபதாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து எமது சமுகத்திற்கு சேவையாற்ற வேண்டும் என ஆசீர்வதிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்
TORONTO THIRUCHENDUR MURUGAN TEMPLE

416-744-9568 | 647-748-7478
tmurugan6@outlook.com | tmurugan6.wix.com/toronto
2400 Finch Avenue, W. North York, ON. M9M 2C8

## மணிவிழாகாணும் உன்னத உறவுக்கோர் புகழ்மாலை

புங்கை மண்ணின் மைந்தனே புகழ்பூத்த தலையாய வம்சத்தின் தனையனே!
தரணி போற்றும் தாரள குணமும் குடும்பத்தின் கொள்கையாம் விருந்தோம்பல் பண்பை இன்றுவரை காத்திடும் வள்ளலே!
சைவத்தமிழிசையின் சான்றோனே பண்ணிசையின் பாடகனே. பாமாலை சூடும் பாவேந்தனே!
சொந்தவூர் தாண்டி சென்ற ஊர்கள் எல்லாம் சொந்தங்களை உனதாக்கிய உன்னத கலைஞனே!
கண்டவுடன் உறவுகள் என்று உரிமையுடன்உறவாடும் பாசத்தின் நேசனே!
பார்போற்றும் எங்களின் பல படைப்பாளிகளின் புகழுக்கு திரைமறைவில் வித்திட்ட பங்காளனே!
பார்த்த இடமெல்லாம் உன் வசனமும் வதனமும் வாஞ்சையுடன் எப்போதும் எங்களை வரவேற்கும் அழகே தனி.

உதவி என்று வந்தோரை உபசரித்து ஆதரவு கரம்கொடுத்து கருணைகாட்டும் வள்ளலே!
காலசுழற்சிகளில் காழ்ப்புணர்ச்சிக்காரர்களையும் நண்பர்கள் ஆக்கிய தார்மீகவாதியே!
துன்பம் துயர் என்று அறிந்தவுடன் முதலாளாய் ஓடோடி வந்து ஆறுதல் அழிக்கும் தூயவனே!
மங்கள நிகழ்வென்றால் குடும்பத்தில் ஒருவனாய் உற்ற தோழனாய் உலாவரும் சகோதரனே!
புங்குடுதீவு என்றால் சச்சியண்ணா என்ற அளவுக்கு சமூகசேவை செய்த கிராமசேவகனே!
ஆலயங்கள் போற்றி அந்தணப் பெருமக்கள், அனைத்து மதபோதகர்கள், சான்றோர்கள், பெரியவர்கள் அனைவரும் உன்னை அரவணைக்கும் விந்தை இன்றுவரை எமக்கு வியப்பே!!!
பவளவிழா வைரவிழா காணும் வரை சிறப்புற இன்னும் பல சேவைகளை செய்ய வேண்டி எல்லாம் வல்ல ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் துணை.

வாழ்க வளமுடன்

**ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்**

கனடா

23/09/2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி!

வறண்ட பூமிக்கு வான்மழை வந்தது போல் இருண்ட தேசத்தில் ஏற்றி வைத்த சுடராய் தெய்வ சக்தி கொண்ட திருமுறைப் பாடல்களையும் சிம்மக்குரலோன் என்று பேர்பெற்ற சச்சி அவர்கள் இன்று மணிவிழாக் காணும் நாளில் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ கணோச துர்க்கா தேவஸ்தானத்தில் சிவராத்திரி விழாவிற்கு வந்து சகல நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு பண்ணி தொகுத்து வழங்குவதில் மிக்கவல்லவார் வாழ்ந்துவரும் சச்சி அரங்கிற்கு அரங்கு நீ. ஆற்றலுக்கு பலம் மிக்கவன் நீ. உன்னுடைய தந்தையின் சேவையின் வள்ளலாய் நீ செயற்படுவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். எம் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் போது உங்கள் குடும்பத்தின் உபயங்கள் எமது ஆலயத்திற்கு கிடைப்பதும் அதன் மூலமாக அந்த ஆசிகள் உங்களிற்கு கிடைப்பதும் இன்னும் உங்களை வாழ வைக்கும்.

உங்கள் சேவை இன்னும் தொடரவும் நீண்ட ஆயுளோடு நூறாண்டுகளைக் கடந்து வாழவும் ஸ்ரீ கணேச துர்க்கா அம்பாளை வேண்டி சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்க பல்லாண்டு! வாழ்க நூறாண்டு!

**சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்**
ஸ்ரீவிஜயலெட்சுமி வாசா, சிவாகம கிரியா பூஷணம்
ஸ்ரீ கணேஷதுர்க்கா தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ontario

*On behalf of the Government of Ontario,*
*I am pleased to extend my congratulations to*

# SOMA SATCHITHANANDAN

*on the occasion of your*

## Sixtieth Birthday

*May you continue to enjoy*
*a rich measure of life's*
*many blessings.*

Legislative Building, Toronto
September 22, 2017

Kathleen Wynne

**Kathleen Wynne**
**Premier**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*A special message to*

## ***Soma Satchithanandan***

*I extend my sincere congratulations and best wishes on the occasion of your*

## ***60th Birthday***

*Thank you for your ceaseless commitment to our community.*
*I hope that the years to come are full of good health, boundless fortune and continued happiness.*

*Gary Anandasangaree*
*Member of Parliament*
*Scarborough – Rouge Park*

CANADA 150



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Soma Satchithanandan*

*On behalf of the Members of Council for*
*The Corporation of the City of Brampton*
*I wish to extend our sincerest congratulations*
*on the occasion of your*

## *60th Birthday*

## *September 23, 2017*

*Wishing you a day filled with happiness*
*and a year filled with joy!*



*Linda Jeffrey, Mayor*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TORONTO

# Councillor Neethan Shan

Ward 42, Scarborough-Rouge River

City Hall
100 Queen Street West, Suite B23
Toronto, Ontario M5H 2N2

Tel: 416-392-4078
Fax: 416-696-4159
Email: Councillor_Shan@toronto.ca

September 23rd, 2017



Dear Esteemed Guests:

I am pleased to offer my warmest greetings to everyone attending the Mani Vizha and 60th Birthday Celebration of Mr. Soma Satchithanandan.

I want to congratulate and thank Mr. Satchithanandan for his phenomenal dedication to positive community service throughout the course of his life. He has been a contributing and supportive member of the Tamil Canadian community, the Tamil community in Eelam, and broader Canadian society.

Mr. Satchithanandan has taken on a wide variety of responsibilities over the span of many years. In Sri Lanka, he was a teacher, a source of support and motivation for local artists, and an instrumental member of the Pungudutivu School Alumni Association, among other roles he has taken on.

In Toronto, Mr. Satchithanandan devoted 10 years of service at hospitals and clinics as part of a support program. He has gone on to receive recognition from the Sri Varasithi Vinayagar Hindu Temple of Toronto for 10 years of community service in Ontario. He has also been recognized by many other organizations for his work, including the Sri Ayyappa Samajam of Ontario and the Velanai Central College Old Student Association.

I am pleased to join in celebrating the ongoing sense of duty and service to the community which Mr. Soma Satchithanandan continues to display.

Please accept my wishes for an enjoyable event.

Sincerely,

Neethan Shan
Toronto City Councillor
Ward 42 - Scarborough Rouge River

311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*September 22nd, 2017*

*Soma Satchithanandan*

*In my capacity as the Member of Parliament for Scarborough-Guildwood, I am honoured to convey my most sincere congratulations on the occasion of your 60th birthday.*

*Yours truly,*

John McKay PC. M.P.

*The Honourable John McKay, P.C., M.P.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ontario

**Brad Duguid, MPP**

*and The Legislature of Ontario*
*extend warm congratulations to you,*

**Soma Satchithanandan**

*on the occasion of your*

***60th***
***Birthday***

*As you mark this special*
*milestone in your life and*
*reflect upon your accomplishments,*
*I wish you a most enjoyable day.*

*Legislative Assembly of Ontario, Toronto*
***September 22, 2017***

Brad Duguid

***Brad Duguid, MPP***
***Scarborough Centre***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BOB SAROYA, M.P.
## Markham-Unionville

As the Member of Parliament for Markham-Unionville &

On behalf of Her Majesty's Leader of the Opposition

Congratulations and Best Wishes to

## Somasuntharam

## Sathananthan

On the occasion of your 60th birthday

## September 23rd, 2017

Please continue the great community work you do in Canada and abroad. As you share this day with your family and friends, may you find happiness in the many memories of your moments spent together.

B. Saroya

Bob Saroya, MP
Markham-Unionville



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Councillor Michael Ford
would like to extend heartfelt congratulations to

# Soma Satchithanandan

on your 60th birthday.

Birthdays are joyous celebrations that provide a glimpse into the highlights of one's life. As each birthday passes, you can proudly reflect on many experiences and look with excitement to the promise of the year ahead.

As you celebrate with friends and family, I hope that the memories and relationships made throughout your years bring you much happiness.

I extend warm congratulations once again and wish you all the best in the years to come.

Councillor Michael Ford

City of Toronto

September 23rd, 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# පාර්ලිමේන්තුව
## பாராளுமன்றம்
## PARLIAMENT

### சோம. சச்சிதானந்தன் மணிவிழா மாண்புற மாவையின் வாழ்த்து

யாழ். மாவட்டத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் புங்குடுதீவு மண்ணில் உதித்தவர் அன்புத்தம்பி சச்சிதானந்தன். அவரது குடும்பத்தையும் உறவுகள் ஊரையும் ஐம்பதாண்டுகளுக்கு மேலாய் அறிந்திருக்கிறேன். இவர்கள் ஒரு தமிழரசுக் குடும்பத்தினர். சச்சியின் தந்தையார் சோமசுந்தரம் தந்தை செல்வநாயகத்தின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு தலைவனாகத் தீவகத்திலே மாண்புற்றிருந்தவர். இவர் மலாய நாட்டில் வாழ்ந்து வணிகத்தில் ஈடுபட்டுச் செல்வந்தராக விளங்கியவர் என அறிந்திருக்கிறேன். மலாய நாட்டிலிருந்து தம் சொந்த மண்ணுக்கு திரும்பி இலங்கை தமிழரசுக் கட்சியின் மக்கள் அறவழி ஜனநாயகப் போராட்டங்களிலும் ஈடுபாடு கொண்டு தமிழ் மக்களின் விடுதலைக்குத் தந்தையுடன் தளபதியாய் விளங்கியவர்.

தமிழரசுக்கட்சி மத்திய குழுவிலும், யாழ். மாவட்டசபை உறுப்பினராகவும் மக்களால் தெரிவு பெற்று மக்கள் சமூகத்தில் கொள்கைக் குன்றாம் இலட்சிய வேட்கை கொண்ட தளபதியாய், மிளிர்வதற்கு விருந்தோம்பலில் உழைத்து உயர்வதில், தமிழின விடுதலைக்கு அர்ப்பணிப்பதில் உதாரணமான மனிதர்களின் மாண்பு போற்றுதலுக்குரியவர் அமரர் வே.க. சோமசுந்தரம் அவர்கள்.

புங்குடுதீவு மக்கள் விருப்பிற்கு தந்தை செல்வாவின் மீது அபிமானம் கொண்டிருந்தது போலவே தளபதியாய், தலைவனாய் விளங்கிய அமிர்தலிங்கத்தின் மீதும் கட்சிக்குள் உண்மையற்ற விமர்சனங்களை சில மத்திய குழுவினரால் முன்னெடுத்த பொழுது அவர் எழுந்து பொய் உரைத்தவர்களுக்கு எதிராக வெகுண்டு, கடும் சொற்களால் பேசியதை நேரில் கண்டிருக்கிறேன். அவ்வழியில் தம்பி சோம. சச்சிதானந்தனும் அவர் மனங்கவர்ந்த மகனாய் தமிழரசு இலட்சியவாதியாய், மக்கள் தொண்டனாய் மதிப்புயர்ந்த இல்லத் தலைவனாக எம்முன் எழுந்து நிற்கின்றார்.

தம்பி சச்சிதானந்தன் கல்வியில் தேர்ந்தவராக மட்டுமல்ல, புங்கைநகர் பராசக்தி மகாவித்தியாலயத்தில் நல்லாசிரியராகவும் பின்னர் அரசுத்துறையில் புங்குடுதீவுப் பிரதேசத்தில் கிராமசேவையாளராகவும் கடமைபுரிந்து நற்பெயர் பெற்றிருந்தார். அவர் இசையில் வளமான குரலோனாய், ஆன்மீகத்தில் இளைத்தவராய், சைவத் திருமுறைப் பாடல்களை இதயம் நிறைய மக்களை ஈர்ப்புடன் ஈடுபடும் வகையில் தொண்டனாய், பாடகனாய், பக்திமானாய் கனடா நாடடுக்குப் புலம்பெயர்ந்த பின்னும் அதே வழியில் முதன்மை பெற்றிருக்கின்றார். அத்தோடு சைவத்திருமுறைப் பாடல்களை தனது இசையில் குரலில் "பாக்கியநாதம்" எனும் பெயரில் வெளியிட்டுப் பெருமை சேர்த்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சியின் குடும்பத்தில் அவரின் உடன்பிறப்பு பத்மா, மகள் மதுரா இசைத்துறையில், நாட்டியத்துறையில், ஆடற்கலையில் புகழ்பூத்த நாட்டிய நாடகங்கள், பரதநாட்டியத்தில் பெயர் பெற்றுக் கலைத்துறைக்கும் பெருமை சேர்த்து வருகின்றனர். அவர் மைத்துனர் தர்மாவும் அவர் குடும்பத்து உறவுகளும் செந்தமிழ்ச்சோலை எனும் அமைப்பை சுவிற்சர்லாந்து நாட்டில் உருவாக்கி இலங்கை தாயகத்து உறவுகளுக்கு, மாணவர்களுக்கு கல்வியில் உயரப் பல அர்ப்பணங்களை ஆண்டுதோறும் செய்து வருவது பாராட்டுக்குரியதாகும். மதுரா நாட்டிய தாரகையாய் இத்தகைய நிகழ்ச்சிகளில் குறிப்பாக "தாய் மண்ணை முத்தமிட்டால்" எனும் பாடலுக்கு எமையெல்லாம் கண்ணீர் மல்கும் வரையில் நாட்டியம் ஆடி ஆடற்கலைக்கு தமிழர், தாயக மண்ணுக்குப் பெருமையும் புதுமையும் சேர்த்து வருகிறார். அத்தகைய நிகழ்ச்சிகளில் நான் விருந்தினராகவிருந்து வாழ்த்தி இருக்கிறேன்.

சச்சியின் குடும்பத்து உறவுகள் தாயக விடுதலைக்குத் தம்மை ஆகுதியாக்கிய தியாகச்செம்மையுடையவர்காளாவர். கனடாவில் ரொரன்றோவிலும் சச்சியின் செயல்களும் தொண்டும் பாராட்டைப் பெற்றிருக்கின்றன. தாய் மண் வாசனையுடன் அம்மண்ணுக்கும் உதவிகள் பல புரிந்து வருகின்றார்.

மணிவிழா நாயகன் சச்சிதானந்தனுக்கு கனடா நாட்டிலே தமிழ் மக்களால் விழா எடுப்பதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.


அவர் சைவப் பணியும் தொண்டுள்ளமும் போற்றப்படுவது சாலச்சிறந்ததே. சச்சி பல்லாண்டு காலம் வளமுடன் வாழ்ந்து மக்கள் பணியாற்றி மாண்புற வேண்டுமென இதயம் நிறைந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் வழங்கி மகிழ்வடைகின்றேன்.

**மாவை. சோ. சேனாதிராசா**
பாராளுமன்ற உறுப்பினர்
தலைவர் – இலங்கை தமிழரசுக்கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனின் பணி தொடரட்டும்



அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய உயர்திரு. சோம சச்சிதானந்தன் அவர்களுக்கு அவரது உறவினர்கள், நண்பர்களினால் பெருமையுடன் நடாத்தப்படும் மணிவிழா நிகழ்வு சிறக்கவும், அதனையொட்டி வெளியிடப்படும் மலர் மணக்கவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கோளசுற்று வட்டத்திலும் மனித வாழ்வு வட்டத்திலும் அறுபது ஆண்டுகள் மிகவும் முக்கியமானதாக கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் புங்குடுதீவில் புகழ்பூத்த குடும்பமான தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், யாழ். மாவட்டசபை உறுப்பினருமாக இருந்தவருமான அமரர் வே.க.சோமசுந்தரம் அவர்களின் புத்திரரான "சச்சி" என்று அன்போடு அழைக்கப்படும் சோம சச்சிதானந்தன் அன்றும் இன்றும் தாயகத்திலும் புலம்பெயர் கனடாவிலும் மிக அறியப்பட்ட மனிதநேயம் மிக்கவராக வாழ்ந்து வருகின்றார். அவரது மனித நேயத்தையும் ஆற்றிவரும் சேவைகளையும் பாராட்டி அவரை கௌரவிக்கும் முகமாக மணிவிழாவொன்றினை தமிழர் சமூகம் எடுத்து மகிழ்வது காலத்தின் தேவையாகும்.

தம்பி சச்சி அவர்கள் இக்கட்டான கால கட்டத்தில் உயிர் அச்சுறுத்தலின் மத்தியில் தனது கிராமத்தில் கிராம அதிகாரியாகவிருந்து மக்கள் சேவை புரிந்தவர். அவர் புலம் பெயராது இருந்திருந்தால் தற்போது எம் மத்தியில் இருந்திருப்பாரோ தெரியாது. அத்தகைய சமூகத்தை நேசிக்கும் மனப்பான்மை கொண்ட இவர் கனடாவுக்கு புலம்பெயர்ந்த நிலையிலும் தனது கிராமத்தவர்களுக்கு மட்டுமல்லாது புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் அனைவருக்கும் தனது உச்ச மட்ட சமூக சேவைகளை வழங்கி வருகின்றார். அதாவது தமிழ் உறவுகளின் எந்த நிகழ்வானாலும் தனது பங்குபற்றலை உறுதி செய்து அவர்களின் தேவைகளை தனது மட்டத்தில் தொடர்ச்சியாக செய்து வருவதை நான் நேரில் காணும் வாய்ப்புக் கிடைத்து பெருமை கொண்டேன்.

ஆன்மீகத்தில் சிறந்த பற்றுக் கொண்டவராக விருப்பத்துடன் இயற்கையாக சிறந்த குரல் வளம் கொண்டவர். மிகச்சிறந்த மேடைப் பேச்சாளராக மட்டுமல்லாது முறைப்படி சங்கீதத்தினை கற்காதவிடத்தும் சிறந்த இசை ஞானியாகவும் திகழ்கின்றார். இதற்கு அவரால் வெளியிடப்பட்ட பல இறுவெட்டுக்கள் சான்று பகரும்.

திரு. சோம சச்சிதானந்தன் அவர்களின் நற்பண்புகளில் மிகவும் போற்றப்படுவது அவருக்கு கோபம் வந்ததை நான் கண்டதோ கேட்டதோ இல்லை. எதிர்வாதம் புரிவதைத் தவிர்ப்பவர். யாருக்காவது அறிவுரையினையோ, கருத்தினையோ தெரிவிக்கும் நிலை ஏற்படும் பட்சத்தில் அவர்கள் மனம் நோகாது சாதுரியமாக சொல்லும் நிலையினை நான் பல தடவைகள் அவதானித்திருக்கிறேன். இவை நான் இவரிடத்தில் கண்ட சிறப்பம்சமாகும்.

புலம்பெயர் தேசத்தில் பல்வேறு அழுத்தங்களுடன் வாழ்ந்துவரும் எம்மவரில் பலர் தானுண்டு தன் குடும்பமுண்டு என வாழ்ந்துவரும் நிலையில் சமூக, பண்பாட்டு விழுமியங்களுக்காக கணிசமான நேரத்தினை செலவிட்டு சமூக சேவையாற்றிவரும் திரு. சச்சி அவர்களுக்கு உறுதுணையாக இருந்துவரும் அவரின் அன்பு மனைவி, பிள்ளைகளை பாராட்டாமல் இருக்க முடியாது.

மணிவிழா நாயகன் அவர்களும் அவரது குடும்பத்தினரும் பல்லாண்டுகள் வாழ்ந்து நொந்து போயுள்ள தமிழ் உள்ளங்களுக்கு சமூகப் பணியாற்ற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**பேராசிரியர் கா. குகபாலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පුනරුත්ථාපන හා නැවත පදිංචි කිරීමේ රාජ්‍ය අමාත්‍යාංශය
மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சு
**State Ministry of Rehabilitation and Resettlement**

මගේ අංකය / எனது இலக்கம் / My Number – SMRR/SS//01    දිනය / திகதி / Date – 20.09.2017



## மணிவிழாவிற்கான வாழ்த்துச் செய்தி

சோமசச்சிதானந்தன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சிஅடைகின்றேன்.

நான் உதவிஅரசாங்க அதிபராக வேலணை, ஊர்காவற்துறை பிரதேசங்களில் இருந்த காலம் முதல் சோமசச்சிதானந்தன் அவர்களை நன்கு அறிவேன்.

இவர் கிராமசேவகராகப் பணியாற்றிய காலத்தில் தனது கிராமத்திற்கும், பிரதேசத்திற்கும், மாவட்டத்திற்கும் அளப்பரிய சேவை ஆற்றி உள்ளார். மக்கள் மனங்கவர்ந்த நாயகனாக, கிராமஅதிகாரியாக பல சமூகப் பணிகளை ஆற்றியமை கண்டுகூடு.

காலமாற்றத்தினாலும், சூழ்நிலையாலும் கனடாதேசத்திற்கு இடம் பெயர்ந்து சென்றாலும், அங்கும் இவரது சமூக, சமுதாயம்சார் பணிகள் தொடர்ந்தன. இவரது சேவை, ஆற்றல், ஆளுமையினைப் பாராட்டிப் பல விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

சைவத் திருமுறைப் பாடல்கள் அடங்கிய இசைத்தட்டுகளும் வெளியிட்டு தனது இசைஆற்றலையும் வெளிப்படுத்தி உள்ளமை பாராட்டிற்குரியது.

இத்தகைய பல்துறை ஆளுமைகளைக் கொண்டு எல்லோரின் அன்பையும், கௌரவத்தையும் பெற்று மணிவிழா கொண்டாடும் மணிவிழா நாயகனாகிய சோமசச்சிதானந்தன் அவர்களுக்கு எமது இனிய நல்வாழ்த்துக்கள்.

மணிவிழா ஒழுங்கினை மேற்கொண்டுள்ள மணிவிழாக் குழுவினருக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகள் உரித்தாகுக.

இன்னும் பல்லாண்டுகள் சீரும் சிறப்புடனும், நல் ஆரோக்கியத்துடனும் வாழ்ந்து பல சமூகநலோனோம்பு பணிகள் ஆற்றிட இறையருளை வேண்டுகின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்**
**செயலாளர்**
**மீள்குடியேற்றம்இ புனர்வாழ்வளிப்பு இராஜங்க அமைச்சு.**

356බි,කාල්විල්පෙදෙස,කොළඹ 3 356பி,கால்வில் பிரதேசம், கொழும்பு-3   356B, Carlwil Place, Colombo-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமசுந்தரனார் எனும் விடுதலைச் சுடரின் மைந்தனே வாழிய நூறு!

என் பாசத்திற்குரிய தம்பி சோம சச்சிதானந்தன் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட இருப்பதை அறிந்து எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டேன்.

தந்தை செல்வா அவர்களின் தலைமையில் அறப்போராட்டம் நடைபெற்ற 27 ஆண்டுகள் தமிழீழ வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க காலப்பகுதி ஆகும். களம் கண்ட பிரபாகரன் அவர்களின் போராட்டத்திற்கு வாய்பான தளம் கண்ட தலைவர் தந்தை செல்வா.
நிலத்தை உழுதார், பயிரை பிரபாகரன் வளர்த்தார். அறுவடை இன்னும் முடியவில்லை என்றாலும் இந்த இருபெரும் தலைவர்களின் முயற்சி எதிர்காலத்தில் விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சி ஆகி பெரும் பாய்ச்சலாய் சீலிர்த்து எழும் என்பதில் ஐயமில்லை.

எமது தாய் மண் விடுதலை படைக்கும் என்பதில் யாருக்கும் எந்த ஐயமும் எழ வேண்டியதில்லை. தந்தை செல்வாவின் அறப்போராட்ட காலத்தில் மதிப்பிற்குரிய சோமசுந்தரம் அவர்களின் அரும்பெரும் பங்களிப்பும் விடுதலைத் தாகமும் தமிழர் நெஞ்சில் என்றென்றும் அழியாது நிலைத்திருக்கும். ஓயாது அக்காலத்தில் ஓடோடி தமிழீழ விடுதலைப் பணியாற்றிய சோமசுந்தரம் அண்ணரின் திருமகனாய் அவர் பாதச் சுவடுகள் ஓர் தொடர்ச்சியாய் தம்பி சச்சிதானந்தன் அவர்களை நான் பார்க்கின்றேன். தமிழீழ விடுதலை உணர்வு கொஞ்சமும் தணியாத நெஞ்சினராய் தந்தையைப் போலவே தம்பி சச்சிதானந்தனும் வாழ்கிறார்.

இது எமது விடுதலைப் போராட்டத்தின் ஒரு சிறு அமைதி நிலவும் பொழுது எனினும் அவர் நெஞ்சின் அடித்தளத்தில் என்றும் அதே பழைய புயல் இருப்பதை அறிவேன்.

தம்பி சோம சச்சிதானந்தனின் பிறந்தநாள் விழா சிறப்போடு திகழ அவர் தொடர்ந்து தமிழீழ விடுதலை உணர்வோடு பயணம் தொடர பல்லாண்டு பல்லாண்டு தழைத்தோங்கி வாழ எம் இனிய வாழ்த்துக்களை தருகிறேன்.

அன்புடன்
உணர்ச்சிப்பாவலர்
**கவிஞர் காசி ஆனந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்

**புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா**
**OLD STUDENTS ASSOCIATION OF PUNGUDUTIVU - CANADA**


**போசகர்:**
சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்
திரு. செ. சபாரத்தினம்

**தலைவர்:**
திரு. துரை. இரவீந்திரன்

**செயலாளர்:**
திரு. தி. கருணாகரன்

**பொருளாளர்:**
திரு. நா. பகீரதன்

**உபதலைவர்:**
திரு. சோம சச்சிதானந்தன்

**உப செயலாளர்:**
திரு. சு. சுகுணன்

**உப பொருளாளர்:**
திரு. அ. பரநிருபன்

**நிர்வாகக் குழு:**
திரு. வி. கே. பரஞ்சோதி
திரு. கு. அனுராகரன்
திரு. குமார மனோகரன்
திரு. இ. விஜயகுமார்
திரு.ச. சந்திரகுமாரன்
திரு. நடா. உதயகுமார்
திரு. கருணாகரன் ஸ்ரீ
திரு. க. செந்தில்
திரு. க. உமாசங்கர்
திரு. செ. இரவீந்திரன்
திரு. கென். கிருபா
திரு. அ. குலசிங்கம்
திரு. அ. பகீரதன்
திரு. ந. இரட்ணசிங்கம்
திரு. கோ. தீபன்

**கண்பார்வையாளர்:**
திரு. இ.அரிகரன்


## வாழ்த்துரை



கோயில் மணியோசையும் கடலின் அலை ஓசையும்
தேவார திருவாசகம் கலந்த புங்கை மண்ணில்
சோமர் என்னும் அரசியல் தலைவரின் மகனாய்
அகவை அறுபதை காணும் நீ பல்லாண்டு வாழ்க...

உறவு தாண்டி, ஊர் தாண்டி புலம் பெயர் தமிழர்க்கு
போற்றுதலுக்கு உரிய பெரிய பொக்கிஷமாய் – நீ
வானவில்லை காற்று கலைத்துவிடலாம்
வைகறை சூரியனை கலைக்குமா? நீ சூரியன்

தோழர்களுக்கு உயிர்த்தோழனாய் நீ
சேவைபுரிவதில் உயர்ந்த தலைவனாய்
மேடையில் நீ பேசினால் உலகமே வியக்கும்
இனிய குரலினில் நீ பாடினால் மெய்மறக்கும்

ஓதுவாராய் நீ ஓதினால் உள்ளம் தெளியும்
வாழ்க்கையில் நீ நடித்ததில்லை ஆனால் நீ நடிகன்
நினைத்ததை சாதித்துக் காட்டுவதில் நீ நல்லதலைவன்
ஊரின் அடையாளமாக திகழ்பவனே நீ வாழ்க

புன்னகை என்பது பொதுமறை – உன்னிடம்
உறைந்தே இருக்கும் எப்போதும் – நீ வாழ்க
வாழ்த்த எங்களுக்கு வயதில்லை – உன்னை
வணங்கி நின்று வாழ்த்துகின்றோம் நீ வாழ்க

துரை. இரவீந்திரன்
தலைவர்


16.08.2017


27 Hot Spring Road, Brampton, Ontario, Canada. L6R 3H9
Tel: 416 834 4272, 416 315 4722, 647 885 2476




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதில் ஆன்மீகத் தொண்டர்
# திரு சச்சி அவர்கள்



புங்குடுதீவு மண்ணில் வாழையடி வாழையாக வாழ்ந்துவந்த தமிழ் மரபுக்கூட்டத்தில் அனுமார் குடும்பமும் ஒன்றாகும். தமிழ் தாங்குங் குடிப்பெருமை அதன் தனிப்பெருமை மட்டுமல்ல விருந்தோம்பலிலும் சிறந்து விளங்கிய பெருங்குடும்பம் என்றால் அது மிகையல்ல. இந்தப் பரம்பரை வழிவந்த வைரவிழுதுகளில் ஒருவர்தான் இன்று மணிவிழாக்காணும் என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஆன்மீகத் தொண்டரும் சமூக சேவையாளருமான திரு சோம சச்சி அவர்கள்.

இவர் தான்சார்ந்த எத்துறையிலும் முதல் எத்தனிப்பிலேயே வெகுசிறப்பாகத் தன்னை வெளிப்படுத்தி விடுவதைக் காணலாம். இதுவே அவரது வெற்றியும் எனலாம். இவற்றுக்கு ஆதாரம் கனடாப் புங்குடுதீவுப் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளேயாகும். இவர் வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் ஆரம்பகால நிர்வாகசபை உறுப்பினர்களில் ஒருவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வார்த்தையில் வித்தகர் சிலர் அதில் இவர் சிறந்தவர்.
பூக்களை ஏந்திப் போகும் புன்னகைக்கு சொந்தக்காரர்
மக்கள் மனங்களை கட்டி ஆளும் மகுடத்திற்குச் சொந்தக்காரர்
என்றும் மாறாதிருக்கும் மங்காப் புகழுக்குச் சொந்தக்காரர்

ஒரு மொழியில் வன்மையான சொற்களும் இனிமையான சொற்களும் கலந்தே காணப்படும். ஆயினும் மனித உறவுகளை மேம்படுத்த விருப்புவோரும் நல்ல விழுமியங்களை உடையோரும் இனிமையான சொற்களைத் தேர்ந்தெடுப்பர் என்பது தொன்று தொட்டு நிலவி வரும் கருத்து.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"
என்ற திருக்குறள் இதை உணர்த்தும்.

இனிமையாகப் பேசுவது என்பது ஒரு கொடைதான். ஆயினும் அக அமைதியும் உளச்சமநிலையும் உடையோர்க்கு மட்டுமே அது சாத்தியப்படும். இனிமையாகப் பேசுபவர்களிடம் ஏனைய மனிதர்கள் யாவரும் ஈர்க்கப்படுவது இயல்பு. இந்தவகையில் ஈர்க்கப்பட்டவர்களில் அடியேனும் ஒருவன். நீண்டகாலமாக நான் விரும்பிப் பாதுகாக்கும் அன்புள்ளங்களில் இவரும் ஒருவர். இவரது வாழ்க்கைப்பயணம் இன்றுபோல் என்றும் இன்பமாகவும் சிறப்பாகவும் அமைய எனது சார்பிலும் நான் சார்ந்திருக்கக்கூடிய வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் சார்பிலும் வாழ்த்துவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியுமடைகின்றேன்.

உள்ளம் அமைதியுறுக! விழைவது பெறுக! வெற்றி சூழ்க!

அன்புடன்
**சி. இளஞ்செழியன்**, B Sc (Sri Lanka), B. Eng (Canada)
தலைவர், வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்–கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (SARAVANAI SEVA MANTRAM – CANADA
# சரவணை சேவா மன்றம்

11 Malborough Road, Markham, ON. L6B 0E9
(Registered Non-Profit Organization-1603453)
Bank Account Branch No: 1438 Account No: 5013094

**Patrons**
Dr. Bala Sivakadacham
416-438-3946
R.Sundaramoorthy
647-955-8577

**President**
S.Shanmugarajan
905-554-3671


**Vice President**
S.Thiyageswaran
416-520-4070

**Secretary**
S.Jeyananthasothy
647-409-8966

**Treasurer**
S.Thayalan
416-716-7514

**Committee Members**
S.Thayananthasothy
K.Ahilan
P.Vigiharan
S.Ahileswaran
S.Thayananthan
Jeyanthy Ahilan
V.Maheswaran

## அறுபது நூறாய் வளரட்டும்...



தீவகம் செறிந்த அன்புள்ளம் கொண்ட சோமசுந்தரம் அவர்களின் மைந்தன் சங்கீதசாகரம், காந்தகத்தான் அண்ணன் சச்சிதானந்தனுக்கு அகவை அறுபதையெட்டுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

சரவணை சேவா மன்றத்தின் ஒன்றுகூடல் 19 ஆண்டுகளாக கனேடிய மண்ணிலே நடைபெறுகின்ற ஒரு விழா. இவ்விழாவில் தவறாமல் பங்குகொண்டு அனைத்து உதவிகளையும் அறிவித்தல்களையும் செய்து எங்கள் ஊர் மக்களின் உள்ளங்களில் நிறைந்தவராய் வாழ்ந்து கொண்டிருக்கும் சோம சச்சி அண்ணா அவர்களிற்கு மணிவிழா எடுக்கும் இந்நாள் பொன்னாளாய் மாறட்டும்.

புங்கை மண் தலைவருக்கு பெண் கொடுத்த மண். அந்த பெண்ணை ஈன்ற அன்னை சரவணையூரைச் சேர்ந்தவள். அது மட்டுமல்ல சரவணைக்கும் புங்குடுதீவுக்கும் நிறையவே உறவுமுறை திருமணங்கள் எல்லாம் கண்டிருக்கிறது. அந்த வழியில் சோம சச்சி அண்ணன் அவர்களின் தந்தை தீவுப்பகுதி மக்களின் பிரதிநிதியாய் விளங்கியது போல் இவரும் அங்கீகரிக்கப்படாத பிரதிநிதியாக வாழ்ந்து வருகின்றார். அவர் தொண்டும், அவர் வாழ்வும் நீடித்து நிலைத்திருக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம்.

**சோதி செல்லா**
சரவணை சேவா மன்ற செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pungudutivu Welfare Association (UK)
புங்குடுதீவு நலன்புரிச் சங்கம் (ஐ.இ)

Mr. T. Sivapalan
*President*
Mr. S Premarajeenth
*Vice President*

Mr. S. Yogilingam
**Secretary**
Mr. T. Thirugnanasambanthar
**Assistant Secretary**

Mr. V. Venukumar
**Treasurer**
Mr. A. Barathithasan
**Assistant Treasurer**

**Committee Members:**
Mr. P. Paranirathan
Mr. T. Sivapalan
Mr. K. Sivananthan
Mr. K. Sivatheeswaran
Mr. N. Tharmaseelan
Mr. S. Sivasurathan
Mr. S.K. Kunalan
Mr. S. Kathirgamanathan
Mr. R. Jeyakumar
Mr K. Murugathas
Mrs Gowry

**Youth Forum :**
Mr. S. Puvanendrajah
**President**

Mr. V. Ravindrakumar
Mr. T. Thiru gnanasampanthar
Mr. M Karunalingam
Ms. M. Karunalingam
Ms. T. Yogalingam

**Trustees & Founder Members**
Dr S Shanmugalingam
Mr. A Manmatharajah
Mr S Karunalingam
Mr S. Kirubananthavel
Mr. M. Selladurai
Mr. A Premananthan

## மணிவிழாக் காணும் மைந்தனை வாழ்த்துகிறோம்

புங்குடுதீவின் புகழ்பூத்த அரசியல் தலைவர், விடுதலைச்சுடர், தேசத்தொண்டன், சமாதான நீதவான் என்று பல்முகம் கொண்டவரும், தமிழரசுக் கட்சித் தொண்டர்களால் இரத்த திலகமிட்டு வரவேற்பினை பெற்ற தலைவர் திருவாளர் வே. க. சோமசுந்தரம் அவர்களது புதல்வன் திருவாளர் சோம சச்சிதானந்தன் அவர்கள் தந்தை வழியில் சிறந்த சைவத் தமிழ்த் தொண்டனாகவும், மக்கள் சேவகனாகவும், பக்திப் பரவசமூட்டும் பாடகராகவும், சிறந்த அறிவிப்பாளனாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக பெரியோர் முதல் சிறியோர் வரை இனிமையுடன் நோக்கி இன்சொல் பேசும் பெருந்தகையாளனாகவும் தனக்கே உரிய அடையாளங்களுடன் வாழ்ந்து வருகிறார்.

அவர் இன்று அகவை அறுபதை அடைகிறார், அதனை மணிவிழாவாக சிறப்பித்துக் கொண்டாடும் அவரது அன்புள்ளங்களுக்கு நன்றியினைத் தெரிவிப்பதோடு மணிவிழா நாயகனை மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து நம் மக்களுக்கும் மண்ணுக்குமான சேவையினைத் தொடர்ந்திட வேண்டும் என்று, பிரித்தானியா புங்குடுதீவு நலன்புரிச்ச சங்கத்தின் சார்பில் வாழ்த்துகிறோம்.

**புங்குடுதீவு நலன் புரிச் சங்கம்,**
**பிரித்தானியா**

99 DRAKE ROAD, HARROW, MIDDX. HA2 9DZ
Email: info@pungudutivu.org • www.pungudutivu.org

PWA UK is a registered charity in England and Wales - No. 1141097



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



கனடா வாழ் புங்குடுதீவு மண்ணின் மைந்தரான சோம சச்சிதானந்தன் அவர்களின் மணிவிழா நடைபெறுவது கண்டு மிக்க மகிழ்ச்சி அடைவதோடு திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் தாயகத்தில் வாழ்ந்த காலத்திலேயே அவரது தந்தை போன்று பிறந்த மண்ணின் மக்களுக்கு அளப்பரிய சமூக சேவைகள் செய்தவர்.

அத்தோடு கிராம சேவை அலுவலகராகவும், விசேடசேவை அலுவலராகவும் இருந்து புங்குடுதீவு மத்தி கிழக்குப் பகுதி மக்களின் அனைத்து தேவைகளையும் சிறப்பாக நிறைவேற்றி அனைவரின் உள்ளம் நிறைந்தவர். அவர் புலம்பெயர்ந்து கனடா தேசத்தில் வாழ்ந்தாலும் பிறந்த மண்ணையும் தாயகத்தையும் மக்களையும் மறவாது கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினுடைய தலைவராகவும், செயலாளராகவும் மற்றும் பல்வேறு பதவிகளை வகித்து சிறப்பான சேவையை செய்து வருவதையிட்டு நாம் மகிழ்வடைவதோடு மணி விழாக்காணும் நாயகரை புங்குடுதீவு சுவிஸ் ஒன்றியம் சார்பாகவும், சுவிஸ் வாழ் புங்குடுதீவு மக்கள் சார்பாகவும் வாழ்த்தி மகிழ்கிறோம்.

இவ்வண்ணம்...

**திரு. சொக்கலிங்கம் ரஞ்சன்,**

தலைவர்,

புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் சுவிஸ்லாந்து.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**"வைரமுத்து பிறப்பான் என்று வயிற்றில் நீ சுமந்ததில்லை.
வயிற்றில் நீ சுமந்ததொன்று வைரமுத்து ஆகிடிச்சு..."**



வைகறைப் பொழுதினிலே பட்சிகளின் இரைச்சலுடன் தென்றல் கலந்த காற்றுடன் வைரமான முத்தொன்று அகவை அறுபதை எட்டிப்பார்க்கின்றது. பனியாலும் பணியாலும் நனைந்த மொட்டிற்கு பூப்பூக்கும் வசந்த காலமும் வந்தாச்சு.
ஊரிலும் உலகிலும் உங்களைத் தெரியாத மனிதரென யாருமில்லை. அடக்கமான பண்பும், குறைவான பேச்சும் கண்ணியமான பார்வையும் கொண்ட உங்கள் உள்ளமானது இந்நாளிலே நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன். பொது நோக்குடனும் பொதுப்பார்வையுடனும் பொதுப்பணிகளை செவ்வனே செய்து மக்களின் நெஞ்சங்களிலே நீங்காத இடம் பிடித்த கதாநாயகன் காலம் எல்லாம் கலகலப்பாய் இருக்க இறைவனை வேண்டுகின்றேன்.

எந்தவொரு நிகழ்விலும் தோரணமாய் முன்னின்று உதவி புரியும் உத்தம புருஷர் குறிப்பாக மரணச்சடங்கு, சமூகச்சடங்கு என்றாலே எங்கள் அண்ணல் சச்சி அவர்களின் முகமே முதல் தரிசனமாகும். விருந்தோம்பும் பண்பும், கருத்தோம்பும் பண்பும் கொண்டு எம்மையும் மக்களையும் விருந்தாளியாக்கி புது உறவையும் நட்பையும் மனதிலே ஏற்படுத்திவிடும் சிறந்த அற்புத உறவு. இவற்றினை விட "கலைஞனுக்கு கலைஞனே ஈடு" என்பதற்கிணங்க ஓர் கலைஞனாக இருந்து இசை நிகழ்சிகளை நடாத்தியதோடு இசை, பண்ணிசை போன்ற வகுப்புக்களை நடாத்தி மாணவர்களை கலைத்துறையிலே விழிப்படையச் செய்த பெருமையும் உண்டெனலாம்.

அது மட்டுமன்றி கனடா பழைய மாணவர் சங்கத்திலே தலைவராக இருந்த காலத்தில் ஆலமரத்துப் பறவைகளில் ஒன்றாகி அங்கத்தவர்களுடன் இணைந்து பற்பல சேவைகளை ஆற்றிய பணியுள்ளத்தை இலகுவில் யாரும் மறந்து விட முடியாது. அவ்வாறு மறந்து போகும் அளவிற்கு அவர் முகமும் இல்லை. சச்சி... சச்சி... என்று செல்லப் பெயராலே அனைவரும் அழைத்து சத்திரங்கள் பலதிற்கும் சாஸ்திரங்கள் கருத்துரைத்து இன்று சரித்திர வரலாறு படைக்கின்ற சாதனை மன்னன் பற்பல சோதனைகளை கடந்தும் வேதனைகளைக் களைந்தும் கனிவான உலகிலே புதிதாய் அவதரிக்கும் நாளும் இன்று வந்தாச்சு. அவ்வேளையிலே அந்நாயகனை நாமும் மனதாலும் தினத்தாலும் வாழ்த்தி நிற்கின்றோம்.

உங்கள் பணியும் சேவை மனப்பாங்கும் திக்கெட்டும் பரவி உங்கள் கீர்த்தி விளங்கவும் இன்றைய சந்ததியுடனும் எதிர்கால சந்ததியுடனும் சிறப்பான வாழ்க்கை வாழ என்றும் இன்றும் என்றுமே இதய பூர்வமாக வாழ்த்தி யோகசுவாமிகளின் பாதார விந்தங்களை பணிந்து உங்கள் பணியானது ஊழி தோறுழியாக சிறக்க என்றுமே வாழ்த்தி நிற்கின்றேன்.

உங்கள் ஆலமரத்து சேவைப்பறவைகளில் ஒன்று
**பொ. ஜமுனாதேவி**
அறங்காவலர்
வட இலங்கை சர்வோதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரம் படைக்கும் சச்சிதானந்தன்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வாசகத்திற்கிணங்க மனிதனாக பிறந்த ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் கீர்த்திக்குட்படும் பொருட்டு உலகிற்கு நல்லது செய்து பெருமையடைகின்றனர். அந்த வழியிலே வந்து பிறந்தவர் தான் எனது இனிய உறவு சச்சிதானந்தம் அவர்கள்.

மகாத்மா காந்தியின் அகிம்சை எளிமை என்ற நற்குணங்கள் ஊடே உதயமான புதல்வன் இன்று அகவை அறுபதை பூர்த்தி செய்து உதவிடும் வைராக்கிய நெஞ்சுடன் வைரவிழாக் காண்கின்றான். வந்தாரை வாழ வைக்கும் உத்தம பண்பு கொண்ட புத்திரனை ஈன்ற அந்த தாய்ப்பசுவினை நினைக்கும் போது எனது உள்ளம் மட்டற்ற மகிழ்வுறுகின்றது.

எமது கிராமத்தில் 2010ல் இயங்கிய ஐந்து பாடசாலை மாணவர்களுக்கும் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக ஆதார உணவு வழங்கும் நோக்குடன் எம்மோடு இணைந்து கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருந்தவேளை பணிஸ் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டீர்கள்.


மேலும் கழுதைப்பிட்டி சந்தியிலிருந்து பெருங்காட்டுச்சந்தி வரை புதர்கள் பற்றைகள் மண்டியிருந்த பிரதான வீதியை துப்பரவு செய்ய வட இலங்கை சர்வோதயத்துடன் இணைந்து கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினூடாக ஆற்றிய சேவையை இன்று வரை நாம் மறைக்கவில்லை. இதன் வெளிப்பாடாக இன்று அந்த வீதியானது அரச நிதியில் செப்பனிடப்பட்டு தார் ஊற்றி மக்கள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளமையானது கிராமத்திற்கு எழில்மிகு வனப்பைக் கொடுத்து நிற்கின்றது.

நாடி வந்தோரையும் தேடி வந்தோரையும் நலிந்து வந்தோரையும் வலிந்து சென்று உதவிடும் உள்ளமதின் பண்புகளை ஓர் நாளிலே இவ்வெள்ளைத் தாளிலே வரைந்துவிட முடியாது. ஆயிரம் நிலாக்காணும் நட்சத்திரங்களைப் போல் உம் பணியில் திளைத்து நிற்கின்றனர் உமது அன்புக்கினிய உறவுகள். எத்தனை தடைகள் சவால்கள் வந்தாலும் மனந்தளராது சேவையாற்றி நிற்கும் தங்களை இவ் வைரவிழாவினைக் காணும் நன்நாளில் நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ் மெய்ஞ்ஞானம் ஓங்கி பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றேன்.

என்றும் தங்கள் அன்பிற்கினிய சகோதரி
**க. புஷ்பமணி**
நிலையப் பொறுப்பாளர்
வட இலங்கை சர்வோதயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பால் எமை ஆட்கொண்ட அண்ணனுக்கு
## எம் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்!



புங்கையூர் பெற்றெடுத்த புகழ்மிகு புதல்வன்
எங்கள் சோமசுந்தரனார் தான் பெற்ற தவப்புதல்வன்
அண்ணன் சோம. சச்சிதானந்தன் தன்
மணிவிழாவை இன்று அன்புமனையாளோடும்
அருமைப் புதல்வர்களோடும் தன் சுற்றம் சூழ
உற்றார் உறவினர் நண்பர்களோடு கூடி குலாவி
கொண்டாடி மகிழ்கின்ற இந்த மகிழ்வான வேளையில்
நாமும் எம் உள்ளம் நிறைந்து உளம் மகிழ்ந்து
இன்றுபோல் என்றென்றும்
இதே இளமையுடனும் இனிமையுடனும்
இன்னும் பல்லாண்டு பல்லாண்டு பார்போற்ற
வாழவேண்டுமென நாங்கள் வாயார உளமார
வாழ்த்துகின்றோம் வாழிய சகோதரனே வாழியவே!
உன்னைப்போல மற்றவரை உளமார நேசிக்கும்
உங்கள் பண்பு உங்களை இன்று சமுகத்தில்
உயர்த்தியே வைத்திருக்கிறது
அனைவரையும் அரவணைத்து அன்புகாட்டி
மற்றவர் மனம் அறிந்து மகிழ்வுடனே ஓடிவந்து
உதவி செய்ய உன்னைப்போல் ஒருவர் உலகிலில்லை
உந்தன் கார் வண்ண நிறத்தழகும்
கருணை சிந்தும் முகத்தழகும்
உந்தன் வெள்ளை உள்ளத்து வியத்தகு பேரழகும்
எண்ணியெண்ணி இறுமாந்து போகிறேன்
உங்கள் அமுதக் குரல் அழகும்
அன்புமொழி வார்த்தைகளும் எளிமையாய்
பழகும் இனிய பண்புகளும் உங்களுடன் பழகிய
அத்தனை பேரும் அறிந்த ஒரு விடயம்
அத்தனை பேரின் அன்பும் ஆசியுமே
இத்தனைகாலம் உங்களை
இளமையாய் வைத்திருக்கிறது


"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வள்ளுவனின் வாய் மொழிக்கேற்ப
வாசுகியாய் வாழ்ந்து வரும் இனிய துணையாலும்
ஈடில்லாப் பிள்ளைகளும் என்றென்றும்
இல்வாழ்க்கையில் சிறந்து இறையருளின் துணையோடு
இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டுமென
வாழ்த்துகிறோம் நாமின்று
வாழிய பல்லாண்டு பல்லாண்டு வாழியவே!

எனவாழ்த்தும்
**திரு. திருமதி. கிருஷ்ணகோபால் குடும்பத்தினர்**
(அம்மா பவுன் புரோக்கர்ஸ்)



Mama is someone that will always make you laugh and smile when you are with him. He has a gift of making others feel welcomed and appreciated wherever he goes. Mama devotedly gives back to our Tamil community through volunteer and supporting events in Toronto. Even though he's a busy man changing the world person by person with his kindness; he never misses our birthday parties or family functions. Mama's heart is made of kindness and love as it shines through his actions. Thank you Mama for inspiring us to be better people as we grow up. He is the reason we still believe in the goodness of people. We love you, Happy Birthday Mama!

-Love,

**Lamena, Trirsmiya, and Mishaa.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு

என் ஆற்றுள் சொல்லோ உலகு



கைம்மாறு கருதி மழை பொழிவதில்லை. மழையால் பயனடையும் மாந்தர் மழைக்கு நன்றி சொல்வதுமில்லை. கைம்மாறு கருதாது எந்த உதவியானாலும் செய்ய முந்தி நிற்கும் திரு சோம. சச்சிதானந்தன் அவர்கள் அந்த மழையைப் போன்றவர். மழையால் மண் செழிப்பதைப் போல் திரு. சச்சி போன்றவர்களால் சமூகம் செழிக்கும்.

எமது சமூகத்தவரின் எந்த ஒரு நிகழ்வாக இருந்தாலும் தவறாது அதில் கலந்து கொள்வதோடு தன்னாலான பங்களிப்பை அங்கு தரவும் திரு சோம சச்சிதானந்தம் அவர்கள் தயங்குவதில்லை. நூல் வெளியீட்டு விழாக்களாயினும் ஊரவர் சங்க ஒன்று கூடல்களாயினும் அவரது உழைப்பை அங்கே காணமுடியும். ஆன்மீக நிகழ்வுகளிலும் முதியோர் இல்லங்களிலும் இறுதிக்கிரிகைகளின் போதும் சச்சி அவர்களின் இன்னிசையில் ஒலிக்கும் பக்திப்பாடல்கள் மனத்தை உருக்கும். சுற்றம் தழால், பெரியோரைத் துணைக்கூடல் என்னும் வள்ளுவர் போற்றும் நற்பண்புகளுக்கு இலக்கணமாக உள்ளவர் திரு. சச்சிதானந்தன் அவர்கள்.

புங்குடுதீவில் இவரது தந்தையாரான வே. க. சோமசுந்தரம் அவர்கள் மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டபோது அதன் முதலாவது அங்கதவர்களுள் ஒருவராகப் பதவியேற்றவர். தந்தையின் சமூக சேவை மனப்பான்மை தனயனுக்கும் வந்ததில் வியப்பேதுமில்லை. பிறந்த மண்ணில் கிராம சேவையாளராகப் பணியாற்றியவர். இங்கே புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர். அறுபதாம் ஆண்டு விழாக் கொண்டாடும் இந்த நேரத்தில் அவரையும் அவர் துணைவியாரையும் நீடுழிகாலம் நிறைவோடு வாழ வாழ்த்துகின்றேன்.

**முனைவர் பால. சிவகடாட்சம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா காணும் நாயகன் சோம சச்சிதானந்தன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்!



"உலகிலுள்ள மொழிகளில் உயர் தத்துவங்களையும், பக்தி மார்கத்தினையும் கொண்ட தெய்வீக மொழி தமிழ்மொழி" என்பதனை உணர்ந்திருந்த சுப்பிரமணிய பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்..." எனப் பாடி வைத்துச் சென்றுள்ளார். அது மாத்திரமன்றி வையத்துள் வாழும் உயிரினங்களில் தமக்காக அன்றி பிற உயிர்களுக்கும் உதவும் வகையில் பொது நல மனப்பான்மையுடன் வாழ வேண்டும் என்பதனை உணர்ந்து செயற்படும் வகையில் ஆண்டவன் மனிதனை பகுத்தறிவுடன் படைத்துள்ளார். செய்யத் தக்கது யாது? செய்யத் தகாதது யாது? என்பதனைப் பகுத்து அறிந்து பிறருக்கு நன்மை பயக்கத்தக்கவற்றை மாத்திரம் செய்வதே மானிடப் பண்பாகும்.

இக்கருத்தினை தாமும் கடைப்பிடித்து, பிறரையும் கடைப் பிடிக்கச் செய்யும் வகையில் ஒரு உதாரண புருஷராக தொண்டாற்றி வரும் சிலருள் இங்கு கனடாவில் வாழ்ந்துவரும் திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் குறிப்பிடத்தக்க ஒருவராவார். அன்பு, பக்தி, பாசம், மனிதநேயம், சாந்தம் ஆகிய அருங்குணங்களுடன் பிறருக்கு தொண்டு செய்வதே தனது பிறவியின் பயன் என்பதனை உணர்ந்து பொது நல சேவையாற்றி வருபவர் இவர். புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும், முக்கிய உறுப்பினராகவும், தொண்டராகவும் இருந்து அன்புடனும், பொறுமையுடனும் சேவையாற்றிவரும் அருங்குணங்களைக் கொண்ட ஒரு உதாரண புருஷர் என்பது மிகையாகாது. இவை யாவற்றுக்கும் இவரிடத்தில் காணப்படும் இடையறாத இறைபக்தியே அடிப்படைக் காரணியாகும்.

தனக்கென வாழாது இவர் பிறருக்காக வாழ்ந்து பொதுப்பணியாற்றி வருவதைக் கனடா வாழ் தமிழ் மக்கள நன்கறிவர். வயோதிப நிலையை அடைந்து நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு மரணத்தின் விழிம்பிலுள்ள நம்மவர்களுக்கு இறை நம்பிக்கையையினையும், சாந்தியினையும் ஏற்படுத்தும் வகையில் அறிவுரைகளை வழங்கி, அமைதிப்படுத்தி வருவது இவரது அரும்பெரும் தொண்டாகும். தமது சொந்த நலன்களையே கவனித்துக் கொள்ள அவகாசம் இன்றி பறந்தடித்துக் கொண்டிருக்கும் நம்மவர்கள் மத்தியில் பிறர் நலனில் அக்கறை கொண்டு பொதுப் பணியாற்றி வரும் பண்பாளரான திரு. சோம சச்சிதானந்தன் ஒரு சிறந்த அவதார புருஷராவார் என்பது மிகையாகாது.

இத்தகைய அரும்பெரும் பண்புகளைக் கொண்ட திரு. சோம சச்சிதானந்தன் அறுபதாவது பராயத்தினை அடைவது எம் அனைவருக்குமே ஆனந்தத்தினை ஏற்படுத்துகின்றது. அவர் மேலும் பல்லாண்டு காலம் சுகதேகியாக வாழ்ந்து பிறரையும் நலமுடன் வாழ வைக்கும் தனது அரும்பெரும் தொண்டு சேவையினை தொடர வேண்டுமென நாம் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

அவருக்கு ஆண்டவனின் திருவருளும், சௌபாக்கியங்களும் கிட்ட வேண்டுமென வாழ்த்துவதில் நாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

அன்புடன்

**டாக்டர் தில்லைநாதன் யோகநாதன் தம்பதிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Windsor
Department of Sociology, Anthropology, and Criminology
401 Sunset Avenue
Windsor, Ontario, Canada N9B 3P4
T: 519-253-3000 ext. 2188 F: 519-971-3621
www.uwindsor.ca/sociology

**சச்சிக்கு என் வாழ்த்து**

இனிய நண்பர் சோம சச்சிதானந்தனுக்கு மணிவிழா வாழ்த்துத் தெரிவிப்பதில் மிக்க உவகை கொள்கின்றேன்.

அன்பும் அறமும் ஓய்வில்லா உழைப்பும் பணியும் தன் வாழ்வின் கடப்பாடு என்று கருதுபவர் சச்சி. திருமுறைப் பாடல்களை அவர் பாடுவதைக் கேட்கிறபோது இப்போது அருகிப் போய்விட்ட அற்புதமான நமது மரபான ஓதுவார் மரபு எனது நினைவில் எழும்.

மணிவிழாக்கள் கொண்டாடப்பட வேண்டியவைதானா என்ற கேள்வி பல காலமாக என்னிடம் இருந்தது. எனினும், வாழ்வைக் கொண்டாடுவதும் வாழ்தலைக் கொண்டாடுவதும் நீடூழி வாழ்வதை மிகையாகக் கொண்டாடுவதும் எமக்கு இன்றியமையாதது என்பதை இப்போது நன்கு உணர்கிறேன்.

தன்னேரில்லாத தமிழ் போல் சச்சியும் வாழ்க!

**சேரன்**


Dr. R. Cheran
Associate Professor
|Department of Sociology Anthropology and Criminology
University of Windsor
Email:cheran@uwindsor.ca

Senior Research Fellow (2017/18)
Project on Political Conflict, Gender and People's Rights
Centre for Race and Gender
University of California, Berkeley.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க ஈழத் தமிழகம்
# வாழ்க சச்சி வாழ்கவே!



நண்பர் சோம சச்சிதானந்தம் அவர்களை நினைக்கும் போதெல்லாம் என் மனப்பட்டறையில் அலைமோதுவது, "வாழ்க ஈழத் தமிழகம், வாழ்க இனிது வாழ்கவே! மலைநிகர்த் திவ்வுலகில் என்றும், தலை நிமிர்ந்து வாழ்கவே!" என்ற பண்தான்.

கவிஞர் பரமஹம்சதாசனால் இயற்றப்பட்ட இதுவே ஈழத்தமிழரின் விடுதலைக்கான ஆரம்பகால தாய்நாட்டு வணக்கப் பண்ணாக அமைந்திருந்தது.

தமிழர் தாயகத்தின் சகல பிரதேசங்களுடன் முகில்தொடு மலையகத்தையும் இணைத்து இயற்றப்பட்ட இப்பண், எங்கள் சுதந்திர மூச்சையும் விடுதலை வீச்சையும், தாயகம் – தேசியம் – தன்னாட்சி என்னும் முக்கொள்கைகளையும் உள்ளபடி உள்வாங்கி இருப்பது சிறப்பம்சம்.

தான்தோன்றிப் பாடகராகப் பிறந்து வளர்ந்து உயர்ந்து நிற்கும் சோம சச்சிதானந்தன் அவர்களின் எடுப்பான குரலும் மிடுக்கான தோற்றமும் இப்பண்ணுக்குரிய வலிமையை மேலும் முறுக்கேற்றுவது என்று சொன்னால் அது மிகைப்படுத்தலன்று.

சோம சச்சிதானந்தன் அவர்களை நான் கனடாவிலேயே முதன்முதலாகச் சந்தித்தேன். தமிழ்த் தேசியம் தொடர்பான பலவேறு நிகழ்வுகளில் அவரைக் காண நேர்ந்தது. அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஆரம்பத்தில் ஏற்படவில்லை. எட்ட இருந்து அவரின் ஆளுமைகளை அவதானிக்கும் வாய்ப்பே கிடைத்தது. அவரது இசைத்தட்டு வெளியீட்டு வைபவங்களில் பார்வையாளனாக கலந்து கொண்டுள்ளேன்.

தாம் பிறந்து கல்வி கற்று வளர்ந்த புங்குடுதீவு மண்மீது அவர் கொண்டிருந்த அளவற்ற பற்றை அவரது செயற்பாடுகள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்தது. பின்னர் தமிழர் தகவலின் அபிமான வாசகர்களில் ஒருவராகக் கண்டு கொண்டேன்.

முக்கியமாக, தமிழர் தகவல் ஆண்டு மலர்களை வாசித்த பின்னர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அதில் இடம்பெற்ற கட்டுரைகளின் சிறப்புகளை வியந்து கூறுவார். எங்காவது பொது நிகழ்ச்சிகளில் காணநேரின் அருகே ஓடிவந்து, "திரு அண்ணா — சுகமாக இருக்கிறீர்களா? அக்கா சுகமாக இருக்கிறாரா?" என்று மறவாது நலன் விசாரிப்பது இவரது வழக்கம். (இவர் அக்கா என்று விளிப்பது எனது மனைவியை என்று தெரிந்துகொள்ள எனக்குப் பல வருடங்கள் ஆயிற்று).

திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் ரொறன்ரோவிலுள்ள மருத்துவமனைகளிலும் நீண்டகால பராமரிப்பு நிலையங்களிலும் தங்கியிருக்கும் சைவத்தமிழ் மக்களுக்கு ஆன்மிக ஆதரவுச் சேவையாளராக பணியாற்றி வருவதாக பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் அவர்கள் சில வருடங்களுக்கு முன்னர் தெரிவித்தபோது நண்பர் சச்சி பற்றிய மதிப்பு மேலும் அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிர்நிலைப் பெற்றோரை மருத்துவமனையிலும் பாதுகாப்பு நிலையங்களிலும் சென்று பார்க்க பிள்ளைகளுக்கே நேரமில்லாதிருக்கும் புலம்பெயர் வாழ்வில், இப்படியும் ஒரு மனிதரா என மனம் வியப்பிலாழ்ந்தது.

தமிழருடைய வாழ்க்கை வட்டம் பஞ்சாங்கக் கணிப்பின் உட்பட்டது. ஒவ்வொரு வருடத்துக்கும் ஒவ்வொரு பெயர் கொடுத்து அறுபது வருடங்களை ஒரு சுற்றுவட்டமாக பஞ்சாங்கம் நேர்த்தியாக வகுத்துள்ளது. இதனால், ஒருவர் தாம் பிறந்த பெயருள்ள ஆண்டுக்குள் மீண்டும் நுழையும்போது அறுபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறார். அவ்வேளையில், பொதுவாழ்விலான அவரது அர்ப்பணிப்பு, தன்னலங்கருதாச் சேவை, சமூக — சமயப் பணி போன்றவைகளை கருத்தில் கொண்டு அவர் பாராட்டப்படுகிறார். இதுவே மணி விழாவின் தத்துவமாகும்.

,வ்வகையில் நண்பர் சோம சச்சிதானந்தன் அவர்களின் சேவை மனப்பான்மையை மதித்து வியந்து அவர் வாழும் சமூகம் அவருக்கு மணிவிழா எடுப்பது சாலப் பொருத்தமானது.

திரு. சோம சச்சிதானந்தன் அவர்களை இப்பூவுலகுக்கு அளித்த சோமசுந்தரம் – சின்னத்தங்கம் தம்பதியரை மனதிலிருத்தி, இவருக்கு என்றும் நற்றுணையாகவிருந்து பங்காற்றிவரும் மனைவி, பிள்ளைகளுக்கு நன்றி கூறுவதுடன், இவரது பணி இடையூறின்றி தொடர்ந்து பவள — வைர — நூற்றாண்டு விழாக்கள் காணும்வரை நோயற்ற வாழ்வை இறைவன் வழங்க பிரார்த்திக்கிறேன்.

**திரு எஸ். திருச்செல்வம்**
முதன்மை ஆசிரியர் – தமிழர் தகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறை வேந்தர் சச்சி அண்ணா



புங்குடுதீவில் அரசியலிலும் வியாபாரத்திலும் தன் பெயர் நிலைநாட்டிய திருவாளர் சோமசுந்தரம் அவர்களின் மகனாக பிறந்து அவர் தன் வழியில் தன் ஆரம்ப பணியை விஷேட சேவை உத்தியோகத்தராக ஆரம்பித்து, கிராம அதிகாரியாக உதவி பெற்று தான் பிறந்த மண்ணிற்கு தொண்டாற்றி பின்னர் புலம் பெயர்ந்து கனடா வந்து இங்கு பல ஆண்டுகள் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்திலும் மற்றும் பல மன்றங்களிலும் தொண்டாற்றிய சச்சி அண்ணாவின் மணிவிழா கண்டு நான் பெருமிதம் கொள்கின்றேன்.

சச்சி அண்ணா பல்துறை வேந்தர். தன் பேச்சு ஆற்றலாலும் குரல் வளத்தாலும் பல மக்கள் மனதில் இடம்பிடித்து இருக்கும் அவர் எம் மண்ணிற்கும் இனத்திற்கும் கிடைத்த அரிய பொக்கிஷம்.

சச்சி அண்ணாவின் சேவைகள் மேலும் பல ஆண்டுகள் தொடரவும், அவர் பல ஆண்டு காலம் வாழவும் வாழ்த்தும்

அன்புத்தம்பி
கதிரவேலு கருணா


**Kathiravel Karunananthan** BSSO, RRO, CET
Project Mangager
IRC Building Science Group
Ex Institute of Engineering Technology of Ontario Conuncillor for Central Region
Ex Director of Roof Consultant Institute of Ontario



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## உத்தமனே ஓங்கி வாழியவே!



தக்க நண்பர் சோம சச்சி
தானந்தர் தமக்கு மணிவிழவோ
மிக்க மகிழ்ச்சி மகிழ்ச்சி நண்ப
மேன்மைகொண் டிலங்கி வாழிவே!

உந்தன் சிரிப்பும் உற்சாகமும்
ஊருக் குழைக்கும் உயர்ந்த குணச்
சிந்தை நலமும் செந்தமிழர்
சிறந்த பண்பின் சின்னமன்றோ?

உறுமும் நாற்பதென் றுரைப்பார்கள்
ஊன்றும் ஐம்தென் றுணர்வார்கள்
அறுபது நல்லற வயதென்பார்
ஆறும் அதன்பின் மனமென்பார்!

அணியாய் நண்பர் அணிவகுத்தே
ஆர்வுடன் எடுத்தார் நின்றனுக்கு
மணியார் மணிவிழா வாழ்கவென்று
மகிழ்வுடன் வாழ்த்துவன் கந்தவனம்!


வாழி வாழி கூடியுன்றன்
மனைவி மக்கள் தம்முடனே
ஊழி யுள்ள வரையும் எங்கள்
உத்தமனே ஓங்கி வாழியவே!

**வி. கந்தவனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சி அண்ணா! வாழ்க வளமுடன்!



தமிழ் இனப் பணி என்பது சச்சி அண்ணாவின் குருதியோடு கலந்த ஒன்று. அவரோடும் அவரது உயிர் மூச்சோடும் கலந்திருக்கின்ற சமுதாயப் பணி என்பது அவர் இளைஞராக இருந்த காலத்திலேயே சமுதாயத்திற்குப் பயன்பட்டது. ஈழத்தமிழர்களுக்குப் பயன்பட்டது. தமிழரசுக்கட்சிக்கும் பின்னாளில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பயன்பட்டது.
அவருடைய மனிதநேயச் செயற்பாடுகள் தாயகத்தில் போரின் போது நலிவுற்ற மக்களுக்குப் பயன்பட்டது. அவருடைய தொழிலான கிராமசேவையாளர் பணி சொந்த ஊரில் பலருக்கும் பேதமின்றிப் பயன்பட்டது. அவரது சொந்த பந்த பாசங்கள் சொந்த ஊரின் எல்லைகளையும் கடந்து பயன்பட்டது.
தனி ஒரு மனிதன் தன் உயர்வுக்காக உழைப்பானாயின் அவனை எதிர்கால சந்ததி நினைவு கொள்வது கிடையாது. சச்சி அண்ணா தன்னுடைய பொதுநலப் பணியால் தாயகத்தில் மதிப்போடு பவனி வந்தார். இன்று கனடா மண்ணில் நிகரற்ற சமூக சேவையாளராகக் கருதப்படுகின்றார். அவரது சமூகப் பணியும் வாழ்வுப் பணியும் எதிர்காலத்தில் இந்த மண்ணில் தமிழர் பண்பாட்டின் வரலாறாகவும் பேசப்படும்.

ஒருவரது தனித்தன்மை அவரது குணநலத்தால் விளங்கும். ஆனால் குணமென்னும் குன்றேறி நின்றார் எல்லாம் பண்பாளர்களாக முடியாது. சமூக சேவையாளர்களாக முடியாது. கனடியத் தமிழ் சமூகத்தில் பலர் குணமென்னும் குன்றேறி நிற்கின்றார்கள். ஆனால் அவர்களை நமக்குத் தெரியாமல் போனதற்குக் காரணம் அவர்களிடத்தில் குணம் இருந்தது. ஆனால் பொதுநல உழைப்பும் சமூகப் பார்வையும் இல்லை.

கனடிய மண்ணில் சமூகப் பணியாளர்கள் என்போர் கால வெள்ளத்தில் இழுத்து வரப்பட்டவர்கள். போலி முகமூடி அணிந்தவர்களாகவும் எம் கண் முன்னே காணப்படுகிறார்கள். ஆனால் சச்சி அண்ணாவைப் பொறுத்தவரை காலம் எமக்குத் தந்த சேவையாளர் அவர். அவரது சேவை எங்கே இல்லை? உறவுகளின் இன்ப துன்ப நிகழ்வா? ஊர் ஒன்று கூடலா? தாயகத்திற்கான போராட்டமா? ஆர்ப்பாட்டமா? ஊர்வலங்களா? ஆலயங்களில் அறப்பணிச் சேவையா? நலிவுற்றோருக்கு ஆறுதல் கூறலா? அனைத்திலுமே அவரது பங்களிப்புப் பதிந்திருக்கும்.
காலங்கள் உள்ள மட்டும் கனடிய மண்ணில் சச்சிஅ ண்ணாவின் பணிகள் தொடர வேண்டும். அந்தப் பணிகள் நாளைய தமிழ்ச் சமூகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்.
சச்சி அண்ணாவின் அறுபதாண்டு பிறந்தநாள் மலர் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. ஒரு மரத்துப் பறவைகளின் குரல்கள் ஒரு பதிவாக ஒலிக்கிறது! அவரை நாற்பது ஆண்டுகளாக அறிந்தவன் என்ற வகையில் என் சிறு பதிவே இது.
புங்கையூர் பெற்றெடுத்த திருமகனே! தமிழீழம் கண்டெடுத்த சமூக சேவையாளனே! அகவை அறுபது காணும் இந்நாளில் வாழ்த்தி வணங்குகின்றேன்! வாழ்க வளமுடன்!


நன்றி

T.K. **பரமேஸ்வரன்**
(ஆசிரியர் – ஈழநாடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தேவாரச் செம்மல்" சோமசுந்தரம் சச்சிதானந்தன் வாழ்க!



இன்றைய காலை எழுந்து நின்றது. அதன்
கண்ணசைவில் நாமும் கண்விழித்தோம்.
என்னதான் நிகழ்ச்சிகள் இன்று என்றே எண்ணிப்பார்த்தோம்
எத்தனையோ!.. எத்தனையோ!.. வரிசையாய் நின்றன

முன்னிலை வகித்தது ஒரு மணிவிழா அழைப்பு
சமூகத்தை விட்டு என்றுமே விலகி நிற்காத சோம
சச்சிதானந்தனை வாழ்த்தி நண்பர்கள் சேர்ந்தெடுக்கும்
நற்றமிழ் விழா நயம் மிகு கூடமொன்றில்..

தேவாரச் செம்மலுக்கு பூமாலை அணிவித்து
மேடைக்கு அழைத்து வந்து துணைவியார் அருகிருக்க
ஆசனத்தில் அமர்த்தி அழகு பார்க்கும் அரை வட்ட நண்பர்கள்
அமர்க்களமாய் அரங்கம் அதிர்கிறது

மண்டபம் நிறைந்து வழிய வாசலில் இன்னும் வந்து குவியும்
ஊரவர் உறவினர் அவரது கீதக்குரலை கேட்டுக் களித்தவர்
பங்கெடுப்பது தம் கடமை என்று உள்ளே திரளும்
அவையோர் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டுகிறது

வார்த்தைகளைக் கோர்த்து ஒன்றாய் வாயாரப் புகழ்ந்து நிற்க
வரிசையாய் வரும் நண்பர்கள் அறிஞர்கள்
காட்சியாய் தோன்றி நின்றனர்.
எல்லோர் கண்களும் "சச்சி" அணிந்திருக்கும்
வண்ணச் சட்டை மீதே வலம் வந்தன

கொண்டாட்டம் ஒன்றை மட்டும் குறியாகக் கொள்ளாத நட்பு
காலம் நேரம் பாராமல் துயரத்தில் பங்கெடுக்க ஓடிவரும் பண்பு
உதட்டளவில் இல்லாமல் உள்ளத்தால் உருகிப் பாடி
கன்னத்தில் வடியும் கண்ணீரை காயவைக்கும் நேயம்

அண்ணா என்று அழைக்கையில் அவர்
அருகில் இருந்திடவே ஆவல் தோன்றும்
ஐயா என்று விழிக்கையில் அத்தனை முகங்களும்
அவர் பக்கம் தலை திருப்பி புன்னகைக்கும் பண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சியின் பிரசன்னம் துன்ப துயரத்தை
தூர விலக்கிவிடும் நேரம் கூட இடரின்றி நகரும்
கச்சிதமாய் காற்று தரும் இதம் போல குரலில்
கலந்து வரும் தெய்வீகம் கீதங்களில் துலங்கும்

இன்றைய விழாவும் இனிதே நிறைவுறும்
இரவு கழிந்து நாளையும் மறுநாளும்
நின்று கதைகள் சொல்லும் நினைவுகள் விலகா
நிர்மலன் பார்வை நிலையாய் அவர்மீது படியும்

**ஆர். என். லோகேந்திரலிங்கம் –கனடா உதயன்**

Honorable Soma Satchithanandan, congratulations on turning 60 with such grace. Despite being 60, your heart and looks tell us otherwise. It's incredible how you still look as fit as and as fresh as you did decades ago. Happy Birthday, to a beloved friend! Your loyalty has meant everything to me! I hope that your 60th Birthday contains all that means the world to you! I hope that the Tamil Nation around the world who are fortunate enough to be in your presence appreciate you! Your 60th Birthday is only the beginning! May this time in your life be the start of new experiences! May you dream as big as you have, in the past, and look forward to the future! May you know what a great example you have been to our Tamil community! May you continue to set goals that change lives! May you continue to be a shining example of hope and determination! You have lived six decades of an exemplary life. This is something you should be extremely proud of. I know that you'll keep inspiring and motivating our Tamil community with your life for the next decades to come. Happy 60th birthday. Have a very, special day!



**Langes Tharmalingam,** FCPA, FCGA

Senior Staff, Government of Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத் தொண்டர் சோம சச்சிதானந்தம்



இனிய நண்பர் சோம சச்சிதானந்தம் அவர்கள் பலரும் அறிந்த அறிமுகம் தேவை இல்லாத ஒருவர். ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவராக நான் இருந்த போது தான் முதன் முதலாக அவரது அறிமுகம் எனக்குக் கிடைத்தது. சிறந்ததொரு சமூகத் தொண்டரான அவர் தமிழ் சிறுவர் நலன் கருதி, நாங்கள் தமிழ் மாணவர்களுக்காக நடத்திய பரீட்சைகளுக்கு மேற்பார்வையாளர்களில் ஒருவராக வந்திருந்தார்.
ஏற்றுக் கொண்ட பொறுப்பை சிரத்தையோடும், மிகவும் ஆர்வமாகவும் செய்து முடித்ததை அப்போது நான் அவதானித்தேன். அதன் பின் பல இலக்கிய கூட்டங்களிலும், ஜே.ஜே. பிரின்ரேஸிலும் பல தடவைகள் அவரைச் சந்தித்து உரையாடி இருக்கின்றேன். இவர் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத் தலைவராக இருந்து சமூகத்திற்குப் பல சிறந்த சேவைகளை ஆற்றியவர்.

புங்குடு தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நண்பர் சோம சச்சிதானந்தம் அவர்கள் பழகுவதற்கு இனிமையானவர். புங்குடுதீவு மகா வித்தியாலயத்திலும், வேலணை மத்திய கல்லூரியிலும் கல்வி பயின்றவர். சிறந்த அறிவாளியான, சைவ சமயத்தின் மீது அதிக பற்றுக் கொண்ட இவரை திருத்தலத் தொண்டர் என்றும் பெரியோர் அழைப்பர். இறைபக்தி கொண்ட அவர் சைவத்திற்கும், தமிழிற்கும் ஆற்றும் சேவை பலராலும் பாராட்டத் தக்கதாகும். புலம் பெயர்ந்த கனடிய மண்ணில் எங்கள் தமிழ் மொழி அழிந்து விடக்கூடாது என்பதை மனதில் கொண்டு சமுகத் தொண்டராக அவர் கடமையாற்றுகின்றார். பழைய மாணவர் சங்கம், ஊர் ஒன்றியம், மற்றும் பல்வேறு சங்கங்களிலும் சமூக நலன் கருதித் தன்னார்வத் தொண்டராக அவர் கடமையாற்றுவது பாராட்டுக்குரியதே!

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தினர் எனது 25 வருடகால கனடிய இலக்கிய சேவைப் பாராட்டு விழா எடுத்த போது புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினர் ஒன்றாக வந்து என்னை வாழ்த்திய போது, எனக்காக மன்றத்தின் சார்பில் வாழ்த்துப்பா பாடி என்னை மகிழ வைத்ததை இன்றும் என்னால் மறக்கமுடியாது. சிரித்த முகத்தோடு என்றும் காட்சிதரும், மணிவிழாக் காணும் நண்பர் சோம சச்சிதானந்தம் அவர்களும், அவரது குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்.

அன்புடன்
**குரு அரவிந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மணிவிழா வாழ்த்துமடல்

மணிவிழா காணும் சோம சச்சிதானந்தன். அகவை (6X10) அறுபதை அடைந்திருக்கும் இவ்வேளையிலே, இன்னும் நால் பத்தாண்டுகள் நோய் நொடி இன்றி உடலாலும், உள்ளத்தாலும் இன்புற்றிருக்க வேண்டும். ஆன்மீகவாதியே, பாடகனே, அதிசிறந்த அறிவிப்பாளனே, சிறப்பு பேச்சாளனே, கலைஞனே, சகலகலாவல்லவனே, பெருமைக்குரிய வித்தகனே, எல்லாத்திற்கும் மேல் சிகரம் வைத்தால் போல் பழகிடும் பண்பாளனே, நண்பனே, வாழ்த்துகிறோம்.

நீங்கள் பிறந்த மண்ணில் நாங்களும் வாழ்ந்தோம் என்பதில் மனம் மகிழ்கிறது. உங்களின் பணிகள் என்றும் சிறப்புற்று விளங்கிட நல்வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகட்டும். ஆண்டுகள் பல கடந்தாலும் என்றும் உங்கள் இளமை துலங்கட்டும். முதுமை என்றும் உங்களை வந்தடையாது இறைவன் என்றும் துணைபுரிந்திடுவார்.

வாழ்க பல்லாண்டு! வாழ்க நூறாண்டு!


வாழ்த்துவோர்
**கலைஞர் செல்வரத்தினம் ஆசிரியர் குடும்பம் சார்பாக,**
**கலைஞர் செல்வரத்தினம் தேவசீலன்**
சுவிஸ்இல் இருந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சச்சி அண்ணாவிற்கு நிகர் சச்சி அண்ணாவே"



திரு. சோம சச்சிதானந்தன் அவர்களின் 60வது பிறந்ததினத்தில் (மணிவிழாவில்) அவரை எங்கள் ஊரார்கள் சார்பிலும் எங்கள் குடும்பத்தார்கள் சார்பிலும் என் சார்பிலும் வாழ்த்தி வணங்குவதை பெருமையாகக் கொள்கிறேன். அவர் என்றும் பல ஆண்டுகள் நீடூழி வாழ்வது என்பது எங்களுடைய சமூகத்திற்கு இன்றியமையாதது. அவரின் சமூக, சமய, கலாச்சார பணிகள் பாராட்டவல்லது. அவர் தானாக வந்து முன்னின்று செய்யும் செயல்கள் மனிதாபத்திற்குரியது மட்டுமன்றி எங்களை அகமகிழச் செய்யும்.

சச்சி அண்ணாவின் தமிழ்குரல் என்பது கம்பீரமானது, அவர் பாடும் பாடல்கள் அனைவரையும் கவர்ந்திழுக்கும், என்றும் புன்னகை பூத்த முகத்திற்கு உரியவர். சச்சி அண்ணா ஒரு சபை நின்றால் அனைவரையும் அவர்பால் இழுக்கும் வசீகரத்திற்கு உரியவர் என் வாழ்நாளில் சந்தித்த மனிதர்களில் சச்சி அண்ணா மாதிரி ஒரு நேர்மையான, பாசமான, மனிதாபிமான சமூக அக்கறை கொண்ட மனிதரை நான் இனி என் வாழ்நாளில் காண்பேன் என்பது தெரியாது. அவர் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறேன்.

புலம் பெயர் சமூகத்தில் எவ்வளவோ இடர்கள் பிரச்சனைகள் உள்ளன. ஒரு மனிதன் தன்னால் வீட்டை மட்டுமே பார்க்க நேரமல்லாத ஒரு வாழ்வில்... தன்னை சமூதாய மேம்பாட்டிற்காக காணிக்கையாக்கி அனைத்து வைபவங்களிலும் நேரம் காலமின்றி கடுமையாக உழைக்கும் எங்கள் அண்ணனை மீண்டும் வாழ்த்தி வணங்கி, இவை அனைத்திற்கும் ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் மிக்க நன்றியை கூறிக்கொண்டு, இப்படியான ஒரு சமூக அக்கறையுள்ள ஒரு மகனைத் தந்த அவரின் தாய் தந்தை மற்றும் சகோதரர்களுக்கும் மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"சச்சி அண்ணாவிற்கு நிகர் சச்சி அண்ணாவே"

என்றும் பாசமுடன்
**சண். சசிகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. சோமசுந்தரம் சச்சிதானந்தம் (சச்சி) அவர்களின் மணிவிழாச் செய்தி



திரு. சோம சச்சிதானந்தன் அவர்களை முதல் முதலாக வவுனிக்குளம் பாண்டியன் குளத்திலே அவரின் அன்புமிகு மைத்துனரும் அப்பகுதி கி.சே.உத்தியோகத்தருமாகிய திரு. பாக்கியநாதன், சகோதரி தேவியின் வீட்டிலே சந்தித்தேன். இவரும் யாழில் ஓர் கி.சே.உ. என அறிமுகம் செய்யப்பட்டேன். அதே நேரம் இவரின் தந்தையார் திரு. சோமசுந்தரம், அன்னை, சகோதர சகோதரிகளையும் அங்கு சந்தித்தேன்.

அவர்களின் முகங்களிலும் அகங்களிலும் ஒரு தேஜை ஒலிப்பதைக் கண்டு காந்தம் போல் அவர்கள் பால் ஈர்க்கப்பட்டேன். இப்படியான ஓர் நல்ல குடும்பத்துடன் நான் சேர்ந்துள்ளேன் என்று அப்போது நான் உணரவில்லை.

இவரின் தந்தை திரு. சோமசுந்தரம் அவர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்த போது அவரின் பண்புகளையும் உயரங்களையும் அறிந்தேன். சிரித்த முகமும், பண்பான போக்குக்கும் மேலாக ஓர் அரிய இனமானமுடைய போராளி என்பதையும் அறிந்தேன். இப்படியான ஒரு பாரிய சமூக சேவையாளருடனும் குடும்பத்துடனும் நட்புப் பூண்டது எனது ஓர் அரும்பெரும் பாக்கியம். திரு. சோமு அவர்கள் அரசியலாயினும் சரி, சமூக விடயங்கள் சார்பாகச் சரி வெண்டொன்று துண்டொன்றவாது அழுத்தி உறுத்திக் கதைப்பதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தேன். ஆண்டவனின் சோதனையோ, துர்பாக்கியமோ அறியேன் சிறிது காலத்தின் பின் இப்படிப் பண்பான பெருந்தகை வாயால் பேச முடியாது, சைகையிலேயே கதைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது கண்டு யாவரும் பெருந்துயரம் அடைந்தோம். திரு. S.J.V செல்வநாயகம் அவர்களின் காலத்துப் பிந்திய அரசியல்வாதிகள் யாவர்க்கும் இது ஓர் பேரிழப்பாக இருந்ததை நான் அறிவேன்.

இவரின் மைத்துனர் திரு. பாக்கியநாதன் கிராமசேவை உறுப்பினர் குடும்பமும் பாண்டியன்குளத்திற்கு ஒரு சொத்தாக இருந்தது. இவரின் மனைவி தேவி, மாமியார் குடும்பத்தினர்களும் அவர்கள் வீட்டுக்கு வந்தவர்களை அன்புடன் வரவேற்று சுவையான அன்னம் அளிக்கத் தவறியதில்லை. இவர்களின் ஊரிலும் இவர்கள் கொடுத்துக் கெட்டவர்கள் என அறிந்தேன். இவர்களின் கிராமசேவை விடுதி உ.அ.அ. பணிமனைக்குப் பக்கத்தில் இருந்தபடியால் அங்கு வரும் கிராமசேவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அன்னசத்திரம் அதுவே தான்.

இறுதியாக திரு. சச்சியைப் பற்றிக் கூறுவதாயின் இவர் தாயைப் போல் பிள்ளை மாத்திரமன்றி தந்தையைப் போல் தனையன் என்பதைக் காண முடியும். தனது அன்பாலும், பண்பாலும் மாத்திரமன்றி அறிவாலும் எங்கள் எல்லோரையும் கவர்ந்துள்ளார். முக்கியமாக ஊரில் ஆற்றிய தொண்டைத் தொடர்ந்து கனடாவிலும் ஆற்றுகின்றார். மரணச்சடங்கு, கலியாணம், பூப்புனிதவிழா ஆகிய சமூகக் கடமைகளில் ஈடுபடுவதுடன் எமது இனம் சார்ந்த, விடுதலை சார்ந்த கைங்கரியங்களிலும் ஈடுபாட்டுடன் செயற்படுகின்றதை நாங்கள் எல்லோரும் அறிவோம். இன்று அரசியல் அநாதைகளாயிருக்கும் எமது இனத்திற்கு இவர் போன்றவர்களால் ஆறுதலாயிருக்கின்றது. இவர் தன் தந்தையின் வழிச்சென்று இப்பாரிய ஜனநாயகக் கடமையைச் செய்வார் என்பது திண்ணம்.

இதற்காக இவர் இங்கே கனடாவிலே எல்லாவிதத் தேர்தல்களிலும் முன்னின்று பங்குபற்ற வேண்டும் என்று எல்லோர் சார்பிலும் நான் கேட்டுக் கொள்கின்றேன். எங்கள் எல்லோருடைய உதவி ஒத்தாசைகள் உங்களுக்கு உண்டு என்று கூறி இன்னும் பல்லாண்டு நீங்கள் பேரோடும் புகழோடும் வாழவேண்டுமென வாழ்த்துகிறேன். உங்களது வெற்றி நிச்சயம்.

தங்கள் அன்பன்


**சி. சுந்தரன்**

இளைப்பாறிய அரசாங்க அதிபர் – முல்லைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகன் தம்பி சோம. சச்சி பற்றி அன்புடனும் உரிமையடனும் சில வார்த்தைகள்...



சமுதாயத்தில் என்றுமே மேற்தளமில்லை. அடித்தளம் மாத்திரமே உண்டு என்பதனை தமது கிராம சேவையாளர் பணி மூலம் பலருக்கும் உணர்த்திய உன்னத சேவையாளன்.

பூவரசம் பொழுது மூலம் புலம்பெயர் புங்கைநகர் மக்களை ஒருங்கிணைத்து நம் தாய் மண்ணிற்கு அளப்பரிய சேைவகள் பலவற்றை வழங்கும் முன்னணித் தலைவர்களில் ஒருவன்.

தந்தை வழி நின்று பல தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுடன் தொடர்புகளைப் பேணிவரும் ஓர் நற்செயலாளன்.

தமிழ்மொழியையும் சைவத்தையும் தமது இரு கண்களாக மதித்து தமது முழு நேரத்தையும், உழைப்பையும் தொடர்ந்து வழங்கி வருவதில் இன்பம் காணுபவர்.

அறுத்து உறுத்தி ஆணித்தரமாக அழகு தமிழில் உரையாற்றுவதில் தனக்கென ஒரு இடத்தைப் பேணி வருகின்ற ஒரு தலைமைத்துவன்.

வாகன வசதி இருந்தும் இறப்பு நிகழ்வுகளில் கலந்து கொள்ளாத பலர் வாழ்கின்ற இந்த கனடிய மண்ணில் எந்தவொரு இறப்பு நிகழ்வையும் தவிர்க்காது கலந்து தமது இரங்கலைத் தெரிவிக்கும் மனப்பக்குவம் கொண்ட ஒரு முழு மனிதன்.
தினம் தினம் பல சாதனைகளுக்கும் வேதனைகளுக்கும் முகம் கொடுக்கும் இப்பிரபஞ்சத்தில் அன்பு எனும் ஆயுதம் மூலம் உங்கள் முகம் மலர்ந்த சேவைகள் தடையின்றி தொடரிட என் அன்பு ஆசிகளும் வாழ்த்துக்களும்.

நன்றியுடன்
**ஆ.செந்தில்வடிவேல்**
முகாமையாளர்
வருமான வரித்திணைக்களம் – கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்பது ஆண்டு நட்பினை எட்டி நிற்கும் இனிய நண்பன்!



கனடா நாட்டில் 2017-09-23ம் திகதி நடைபெற இருக்கும் மணிவிழாவின் கதாநாயகன் திரு. சோமசுந்தரம் சச்சிதானந்தன் அவர்கள் எனது நண்பரும் என்னுடன் சக உத்தியோகத்தராகவும் கடமையாற்றியவர். இவரை 1980களிலிருந்து நன்கு தெரியும்.

1981ம் ஆண்டுகளில் யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலில் இவரின் தந்தையார் திரு. வே.க. சோமசுந்தரம் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு பிரதி நிதியாக ஊர்காவற்றுறை தொகுதி சார்பாக தெரிவு செய்யப்பட்டார்.

அக்காலப் பகுதியில் நானும் தந்தையாரின் வெற்றிக்காக களத்தில் ஈடுபட்டேன். பின்பு 1982.02.10ல் விசேட சேவை உத்தியோகத்தராக இருவரும் தெரிவு செய்யப்பட்டோம். பின்பு 1987ம் ஆண்டு கிராம உத்தியோகத்தராக சச்சிதானந்தன் அவர்கள் புங்குடுதீவுப் பிரிவிலும் நான் வேலணைப் பிரிவிலும் கடமையாற்றி வந்தோம். அதன் பிற்பாடு நண்பர் சச்சிதானந்தன் 1990, 1991களில் தீவகத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் தீவக மக்கள் முற்றாக தீவகத்தை விட்டு இடம் பெயர வேண்டிய சூழ்நிலையில் இவரும் இடம் பெயந்தமையால் அந்தக் காலப்பகுதியில் இலங்கை நாட்டை விட்டு கனடா நாட்டிற்கு சென்று குடும்பத்துடன் தஞ்சம் அடைந்தார். அன்று தொடக்கம் இன்று வரை கனடா நாட்டிலேயே குடும்பத்துடன் வசித்து வருகின்றார்.

புங்குடுதீவுப் பகுதியில் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றிய பொழுதுகளில் 1988களில் இந்திய இராணுவம் ஆக்கிரமித்து இருந்த காலப்பகுதியில் புங்குடுதீவு வாழ் மக்களுக்கு சுயதொழில்கள் பாதிப்படைந்திருந்தது. இந்த பாதிப்புக்களுக்காக வேலணை பிரதேச செயலகத்தினால் சுயதொழில் முயற்சி நன்கொடை குடும்பங்களுக்கு தலா 4000 ரூபா வீதம் வழங்கப்பட்டது. அக்காலப் பகுதியில் இந்தக் கொடுப்பனவு இவரது விடாமுயற்சியின் காரணமாக புங்குடுதீவில் இவருடைய பிரிவுக்கு மாத்திரமே பல குடும்பங்களுக்கு கிடைக்கப் பெற்றது. இதனால் அக்காலப் பகுதியில் பொதுமக்களின் நன்மதிப்பை பெற்றிருந்தார்.

இவர் அந்தக் காலப்பகுதியில் இருந்து தேவார பண்ணிசைகளில் ஈடுபட்டு வந்தார். புங்குடுதீவில் நடைபெறும் தேவார பண்ணிசைகளில் இவரை அப்போது காணமுடியும். ஆனால் இலங்கை நாட்டை விட்டு கனடா நாட்டிற்கு சென்ற பொழுதும் அவர் அந்த தேவார பண்ணிசையை அந்த நாட்டிலும் இசைத்து வந்தார். அத்துடன் நிற்காமல் சில வருடங்களுக்கு முன்பு இலங்கைக்கு வந்திருந்த பொழுது கொழும்பில் இன்னிசை கானம் நடாத்தி அதில் "பன்னிரு திருமுறை அமுதம்" என்ற இறுவட்டினை வெளியீட்டிருந்தார்.

இவருடைய திருமணத்தில் பங்குபற்றிய நாங்கள் கனடாவில் நடைபெறும் மணிவிழாவில் (60வது கலியாணம்) கலந்துகொள்ள வாய்ப்பு இல்லா விட்டாலும் இவரது மணிவிழா சிறப்புற நடைபெறவும், இன்னும் நீண்டகாலம் இவர், மனைவி, பிள்ளைகள் நீடூழி வாழவும் மனதார வாழ்த்துகிறேன்.

**காராளசிங்கம் கணேசலிங்கம்**
கிராம உத்தியோகத்தர் – வேலணை வடக்கு J/12
சமாதான நீதிபதி, தேசோதயதீபம், "தேசாபிமானி சமூகதீபம்", கலைமாமணி
271/3 நாவலர் லேன்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
0778449687



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைக்கு வரைவிலக்கணம் வகுத்தவர்



இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் இலங்கைத் திருநாட்டில் தமிழீழத்தின் சொத்தாக விளங்கும் யாழ் குடாநாட்டில் சப்த தீவுகளில் தெய்வீக ஒளி பரப்பும் புண்ணிய பூமியாக விளங்குவது புங்கை நகர் என்னும் புங்குடுதீவு ஆகும். இத் தீவானது ஆன்மீக சிந்தனையாளர்கள் அறிஞர்கள் இலக்கியவாதிகள் என பலரையும் தன்னகத்தே கொண்டு நாற்புறமும் சைவப்பெரும் ஆலயங்களினால் சூழப்பட்டு மக்கள் வாழ்கின்ற பூமியாதலால் இதனைச் சிவபுமி எனவும் அழைப்பதுண்டு.

இச்சிவபுமியில் சோமசுந்தரம் சின்னத்தங்கம் தம்பதிகள் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் செய்த நற்செயல்கள் நற்பணிகள் நற்காரியங்கள் என்பவற்றினாலும் தெய்வீக அருளினாலும் தசபுத்திரர்களைப் பெற்று அவர்களை சீரோடும் சிறப்போடும் வளர்த்து வந்தனர். அவர்களுடைய பிள்ளைகளில் மூன்றாவதாகவும் ஆண்களில் மூத்தவனாகவும் கடமை நிறைவேற்றும் சற்புத்திரனாக பிறந்தவர்தான் திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள்.

இவர் சிறுவனாகவும் மாணவனாகவும் இருக்கும் போதே நல்லொழுக்கமும் பண்பும் ஆன்மீக செயற்பாடும் சேவை மனப்பாங்கும் உடையவராகவும் காணப்பட்டார். காரணம் அவர் வளர்ந்து வந்த பாதையும் பாசறையும் அவரை ஒரு சமூக சேவையாளராகக் கொண்டு வந்தது. அதுமட்டுமல்லாமல் திரு. சோமு சச்சிதானந்தன் அவர்கள் தமது தந்தை திரு.வே.க.சோமசுந்தரம் அவர்கள் தீவுப்பகுதி மக்கள் சார்பாக யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு அனுசரனையாக இருந்ததுடன் பிற்காலத்தில் தமிழ்த்தேசியத்துக்கும் தமிழ்விடுதலைக்கும் உரிமைக்கும் குரல் கொடுக்கும் கொள்கைப்பற்றுடையவராக விளங்கினார்.

திரு.சச்சிதானந்தன் அவர்களுடைய செயற்பாடுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் அவருக்கு வழங்கப்பட்ட விசேட சேவை உத்தியோகத்தர் பணியும் கிராம உத்தியோகத்தர் பணியும் மக்களுக்கான சேவை வழங்குவதற்கு உந்துசக்தியாக விளங்கியது. அதுமட்டுமல்லாமல் இவர் கிராமத்தின் பலதரப்பட்ட சமூக அமைப்புக்களான சண் ஸ்டார் விளையாட்டுக்கழகம் கலைமகள் மன்றம் மதுஒழிப்புக் குழு, இளைஞர் கழகம், கூட்டுறவுச்சங்கக் கிளைக்குழு மற்றும் நெறியாளர் சபை போன்ற பல தரப்பட்ட நிறுவனங்களூடாக சிரமதானம் கல்வி அபிவிருத்தி விளையாட்டு அபிவிருத்தி அரசியல் விழிப்புணர்வு வாழ்வாதார முயற்சிகள் போன்ற மக்களுக்கான சேவைகளை வழங்கியதனால் மக்கள் மத்தியில் மிகவும் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவராகவும் கிராமத்தில் சிறுவயதினிலே பிரபல்யம் மிக்கவராகவும் விளங்கினார்.

கடந்த காலங்களில் இலங்கை நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இவர் 1993 ஆம் ஆண்டு புலம்பெயர்ந்து சென்று வெளிநாட்டில் வசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் எங்கு எப்படி இருப்பினும் தான் கொண்ட கொள்கை சற்றும் விலகாது அங்கும் புங்குதீவு பழைய மாணவர் சங்கம் இந்து மாமன்றம் கனடா தமிழ் சைவ ஆன்மீக சேவை அமைப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பு கனடா கிளை போன்ற சமூக அமைப்புக்களில் தன்னை உறுப்பினராகவும் பணியாளராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்துக்கொண்டு இன்றுவரை தனது தாய் மண்ணுக்கும் மக்களுக்குமான சமூக பொருளாதார ஆன்மீக அரசியல் செயற்பாடுகளில் செயற்பட்டு வருவது எமக்கு மிகவும் பெருமை அளிக்கின்றது.

இன்று பட்டத்தாலும் பதவிகளாலும் தமக்கு பெருமை சேர்க்கின்றவர்கள் மத்தியில் தனது சேவையினாலும் நடவடிக்கையினாலும் கொள்கைப்பற்றினாலும் சேவைக்குப் பெருமை சேர்த்தவர் என்பதனால் பலராலும் மதிக்கவும் போற்றவும் விளங்குகிறார்.வாழ்க்கை பற்றிய அனுமானம் வாழ்க்கை பற்றிய பிடிமானம் தெரியாத இளவயதிலேயே "மக்கள் சேவையே வாழ்வு வாழ்வுதான் மக்கள் சேவை" என பல பெரியோர்களும் அறிஞர்களும் பாராட்டும் வகையில் வாழ்ந்து காட்டியவர்.

இவரது இந்த சமூக வாழ்விற்கு பெற்றோரும் பிற்காலத்தில் இல்லாலும் பின்புலமாக இருந்து ஆதரவு வழங்கியமையினால் இவரது சமூகப்பணி இடையராது தொடர்வதற்கு உந்துசக்தியாக விளங்கிய இவரது குடும்பத்திற்கு இந்நேரத்தில் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அகவை அறுவதில் மணிவிழாக் காணும் என் அன்புக்குரிய நண்பன் திரு.சோம சச்சிதானந்தன் அவர்களுக்கு கிடைத்த நல்ல பெற்றோர் நன் மனைவி நல்ல கல்வி நல்ல நட்பு நற்சமூகம் என்பன ஒரு இலட்சிய வாழ்க்கையை வாழக்கூடியதாக இருந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அன்புக்குரிய திரு.சோம சச்சிதானந்தன் அவர்கள் அகவை அறுவதில் மணியோசை சத்தத்தின் பின்பும் தனது சந்தம் மாறாது மக்களுக்கான பணிகளை தொடர வேண்டும் என வேண்டியும் குடும்பத்தினரோடு எல்லாச் செல்வங்களும் சிறப்பாகப் பெற்று ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சியாக வாழ இறை ஆசியை வேண்டி மனதார வாழ்த்திப் புங்கைநகர் மக்கள் சார்பாக ஆசிகூறி நிற்கின்றேன்.


"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"
(குறள்)

**நாகலிங்கம் சுந்தரராஜா**
ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்.
தலைவர்.
புங்குடுதீவு அரசடி ஸ்ரீ ஆதிவைரவர் ஆலய பரிபாலன சபை.
உப தலைவர்
தீவகம் தெற்கு பிரதேச இந்து ஆலயங்களின் சமூக மேம்பாட்டு ஒன்றியம் – வேலணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்



திரு. திருமதி. சோமசுந்தரம் சின்னத்தங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் பொன்கொடு தீவைச் சேர்ந்த திருவாளர். சோமசுந்தரம் சச்சிதானந்தன் (சச்சி) முன்னாள் கிராம சேவையாளர் அவர்கள் இன்று 22-09-2017 சனிக்கிழமை தனது அறுபதாவது அகவை தினத்தை ரொரன்றோ மாநகரில் பண்ணிசையோடு பலநூற்றுக்கும் மேலான மக்கள் அணிதிரள கொண்டாடும் மணிவிழா நாயகனை எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் அருளாசி பெற்று சகல செல்வங்களோடும் நீடூழி காலம் சீரும் சிறப்போடும் பண்ணிசையோடு சேவையாற்றி பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.


வாழ்க வளமுடன்!

இங்ஙனம்
**உழுவலன்பன்**
**சோ. சந்திரசேகரம்**
ஓய்வுநிலை கிராமசேவையாளர் – நயினாதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா காணும் சோம. சச்சிதானந்தனின் "நற்பணிகள் நாளும் மிளிர்ந்தது"



அறத்திலேயும் புறத்திலேயும் தமிழையும் சைவத்தையும் தன் மூச்சாகக் கொண்டு தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் பல்லாண்டுகளாக நற்பணிகள் ஆற்றிவரும் பல்துறை சிறப்புக்கள் பொருந்திய சோம சச்சிதானந்தன் அவர்கள் பழகுவதற்கு மிக இனிமையானவர். 1982ம் ஆண்டு நாங்கள் இருவரும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் கீழ் புங்குடுதீவு கிழக்குப் பகுதிக்கு நானும் மேற்குப் பகுதிக்கு சோம சச்சிதானந்தன் அவர்களும் விசேடசேவை அலுவலகராக பதவியேற்றுக் கொண்டோம்.

பின்னர் 1987ல் கிராம அலுவலராக பதவியேற்றுக் கொண்டோம். அன்றிலிருந்து நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து ஊரின் அபிவிருத்திக்காக மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து பலதரப்பட்ட சேவைகள் புரிந்து வந்தோம். 1991ல் இடப்பெயர்வு காரணமாக ஊர்மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் சேவையை தொடர்ந்தோம். பின் சோம சச்சிதானந்தன் அவர்கள் நாட்டின் போர் சூழல் காரணமாக தனது பதவியை விட்டு இடம் பெயர்ந்து கனடா நாட்டிலே கால் பதித்தார்.

இடம் பெயர்ந்த மண்ணில் தாயகப் பற்றும் பிறந்த அகத்தின் மண்ணையும் மக்களையும் நேசிக்கும் சிறந்த பண்பாளர். சமூகசேவை மன்றங்களிலும் இணைந்து செயற்படும் தொண்டு மனப்பான்மையுடையவர். தீவக சமூகத்திற்கு அன்று முதல் இன்று வரை சமூக நலனுக்காக இன மத மொழி வளர்ச்சியை தன்னகத்தே கொண்டு பொதுச் சேவைக்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்து எளிமையும் இனிமையும் வாய்ந்த அன்பர். ஒரு சிறந்த பன்முக சமூக சேவையாளர். அவரது சேவைகளும் சமூக சேவையும் பலதரபட்டவை. அவர் தமிழ் சமூகத்துக்கு ஆற்றிவரும் சேவைகள் மகத்தானவை. அவரது தேசியப்பற்றும் மொழிப்பற்றும் அளவிட முடியாது.

"ஒள்ளும் வகையெல்லாம் ஓயாது" சைவத்திற்கும் தமிழ் பண்பாட்டிற்கும் தமிழ் சமுதாயத்திற்கும் ஆற்றிவரும் அரும்பணிகள் யாவரும் அறிந்த ஒன்றாகும். அவருடைய அறிவும் அனுபவமும் நற்பணிகளும் என்றும் ஈழத்திலும் இடம் பெயர்ந்த மண்ணிலும் தமிழ் மக்களுக்கு தேவை. தொய்வின்றி தொடரும் தங்களின் அரும் தொண்டால் ஊர் மக்களும் தமிழ் சமுதாயமும் மென்மேலும் மேன்மையுற நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு அகவை அறுபதை தொடும் சோம சச்சிதான்நதன் அவர்கள் குடும்பத்தினரோடு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

**கு. சந்திரா**
ஓய்வுநிலை கிராம அலுவலர்
புங்குடுதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்து

தீவகம் தந்து செல்வம் சச்சி!
பூமருவு பொன்னகராம் புங்கை நகர்தனில்
புகழ்துலங்க பெருங்குடியின் வழிவந்து
பாவலன், நல் இசையால்,
நற்றமிழ் வளர்த்த நாவலன்
சோமசுந்தரம் சின்னத்தங்கம் தந்த
ஆற்றல் பலவுள அரும்பெறல் மைந்தன்
அன்பும், பண்பும், அடுத்தவர்க்கு
உதவிடும் தன்மையும், துணிவும்
நேர்மையும் கொண்ட வல்லவர், நல்லவர்
நடாறிந்த கிராம சேவையாளர், அத்துடன்
கனடாவில் சைவத்தமிழ் ஆன்மீக சேவாயளன்
தேடாது மனிதரில்லை நேசமே இவரின் சொந்தம்

பொன் கொடுதீவகம் புனிதமாகுடும்ப
தம்பிஐயா மகேஸ்வரி தம்பதிகாள் பெற்ற
பூவையாம் மாதர்குல மாணிக்கம்
மகாலட்சுமியை மணந்தே இல்லற
வாழ்வு இன்புற்றோங்கிட இணைந்து
மூன்று செல்வங்களை நன்மக்கட்
பேறாய் பெற்றெடுத்து அடக்கம், அன்பு
ஆடம்பரம் இல்லா புனித வாழ்வினைப்
புவியினில் கொண்டு வள்ளுவர் சொல்
இல்லற இனிய வாழ்வு கண்டு
மணிவிழாக் காணும் தம்பதியினருக்கு
உள்ளம் மகிழ்ந்து உளமார வாழ்த்துகிறோம்.

இன்று கனடாவில் தமிழுக்காக உழைக்கும் பெரும் தொண்டன் எப்போது வந்து எவர் அழைத்த போதினிலும் தப்பாது உதவுகின்ற தனிச்சிறப்பு உந்தனுக்கு எல்லோரையும் வியப்போடு பார்க்க வைக்கும் அஞ்சா நெஞ்சம் கொண்ட குரல்வளம் நிறைந்தவர் தனது அறுபதாம் பிறந்ததினத்தில் மணிவிழாக் காணும் நாயகனையும் அவர்கள் குடும்பமும் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்தி நிற்கும்

முன்னைநாள் கிராமசேவை உத்தியோகத்தர்
**திரு. திருமதி. இராசரெத்தினம் குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான மனிதனுக்கு மணிவிழா

இவ்வுலகில் கலை கலாசார தமிழ் பண்பாட்டு வளர்ச்சிக்கு தனித்துவமான பங்களிப்புச் செய்தோர் அநேகர். இவர்களுள் ஈழத்திருநாட்டின் சமூக வரலாற்றில் தனக்கென தனித்துவமான இடத்தை பிடித்து தற்பொழுது கனடாவில் வசித்து வருகின்ற செப்டெம்பர் 22ல் அகவை அறுபதை சந்திக்கும் புங்குடுதீவிற்கு பெருமை சேர்க்கின்ற தவப்புதல்வர் திருவாளர். சோம சச்சிதானந்தன் அவர்கள் எமது சமூகத்திற்கு கிடைத்தது ஒரு வரப்பிரசாதமாகும்.

கல்விமான்களை சமூகத்தில் கௌரவப்படுத்துகின்ற இவரது பண்பு போற்றுதற்குரியதாகும். கற்றாரை கற்றோரே காமுறுவல் என்ற வள்ளுவர் இலக்கணத்திற்குமைய இலைமறை காயாக எத்திசைகளிலும் இருக்கின்ற கல்விமான்களை சமூகத்திற்கு வெளிக்கொணர்ந்து அவர்களை கௌரவப்படுத்தி புகழ்பெற வைப்பதில் தன்னிகரில்லா தவப்புதல்வராக திகழ்கின்றார்.

2004ம் ஆண்டில் தமிழ் சைவ ஆன்மீக ஆதரவுச் சேவையாளர் பயிற்சித்திட்டம் என்ற தலைப்பில் இவர் பெற்றுக்கொண்ட பயிற்சியினால் இன்றும் இவர் ஆற்றிவரும் பணிகள் இவரது சமூக சமய ஆன்மீகச் சேவைக்கு எடுத்துக் காட்டாகின்றது. எதிர்கால சந்ததியின் மனதில் சைவ சமய உணர்வை ஊற்றெடுக்கச் செய்யும் முயற்சியாக இவரது "பாக்கியநாதம்" இசைத்தட்டின் வெளியீட்டை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். பகுதி 2 பாக்கியநாதம் வெளியீடும் இவரது தொடரான சேவையின் முயற்சியை எடுத்துக் காட்டுகின்றது. முகம் மலர்ந்து இனிமையுடன் நோக்கி உள்ளம் கவர்ந்த இனிய வள்ளுவரின் வார்த்தைகளை தனதாக்கிக் கொண்டுள்ள இவர் ஈழத்தமிழ் மக்களின் வாழ்வின் மட்டுமன்றி புலம்பெயராது வாழ்ந்திடும் மக்களின் வாழ்விலும் ஏற்படுத்திய தாக்கத்தை வெறும் வார்த்தைகளால் வடித்தெடுக்க முடியாது. இவரின் வாழ்வு எதிர்கால சந்ததிக்கு வழிகாட்டும் ஓர் நற்பாதையை அமைத்து பலர் பயணிப்பதற்கு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவரது சேவை மணிவிழாவோடு மட்டுமன்றி நூற்றாண்டு விழா வரை தொடருவதற்கு எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகள் நிறைவாய் கிடைத்திட வேண்டுமென வாழ்த்தி மகிழ்கிறேன்.

**திருமதி. ஸ்ரீரதிதேவி கமலராஜன்**
முன்னாள் இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர்
(யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
"தமிழ் சைவ ஆன்மீக சேவையாளர் பயிற்சித்திட்டம்" விரிவுரையாளர் (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதையடையும் பிறந்தநாள் வாழ்த்தும் மணிவிழாவும்

உளம் மகிழும் ஒரு விழா
ஊர் கூடித் திருவிழா
பெருந்தகை தமக்கு ஒரு மணிவிழா
பெரும் சிறப்பொடு நிறைக்கும் பெருவிழா
திரு. சோமசுந்தரம் சச்சிதானந்தம் அவர்கட்கு

அவர் பெரும்பணி பண்பு பணிவு ஆளுமை
அறிவு அர்ப்பணிப்பு அத்தனையும்
நிறைந்து, பார் ஆளும் இவ்வேளை
சீராளும் சிறப்புமிக்க பேரரிய தருணமிது
இனிதென இல்லற நல்வாழ்வினில்
மகாலெட்சுமியே மனையாளாய் மனதாள
தலைமுறையை தலை தாங்க
செல்லமகள் ஷாலினி, அன்புமகன்கள்
கவாஸ்கர், கபில்ஸ்கர்
எழில் கொஞ்சும் அழகிய இல்வாழ்வு
கொஞ்சிக் குதூகலிக்கும் குவலய வாழ்வு
இறையருளால் இணைந்த நல்லற வாழ்வு

தாயக மண்ணிலே உதவி ஆசிரியராய்
கிராம சேவையாளராய் சர்வோதயம்,
செஞ்சிலுவைச் சங்கம் மது ஒழிப்புக் கழகமென
இணைந்து, இயைந்து கிராம அபிவிருத்தி
நோக்கிய மண்ணின் மைந்தனாய்
இவர் தம் பணி – சளைக்காது பெரும் சேவை
தோளணைத்து தொண்டாற்றும்
தோழமை கொண்ட பெரும் தோழன்
தோற்றிடாத முயற்சிகள், முனைப்பொடு
முழுமனதாளும் பெரும் சேவை மனது.

தாயக மண்தனை விட்டகன்ற போதும்
புலம்பெயர் வாழ்வினை புதிதாக்கி
சைவ, ஆன்மீக சேவைகளில்
இளைய தலைமுறைக்கும் எடுத்தாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறை தாண்டிய பெரும் பார்வை
கலாச்சாரம் கலையாத போற்றுதல்
விரிவான பார்வையுள் தோள்தாங்கு
தொடர் பணியாய் நீண்ட பெருநடை.

ஆதரவு எங்கெல்லாம் கரம் இணையக் காத்து
வாஞ்சிக்கிறதோ – அங்கெல்லாம்
அன்போடு இசையும் இரு கரங்கள்.

நோய்தனில் நொடிந்த போதும் நேசமாய்
பரிந்திணையும் பேரன்பு
வைத்தியசாலையிலும் கரம் காக்கும்,
உடன் காக்கும் உற்றவனாய் பெரும்பணி
உறவுகள் உயிர் இழந்து தவிக்கையில்
தோள் கொடுக்கும் தோற்காத தொடர்சேவை

எத்தனையாய், ஏதுதனை வாழ்த்துவோம்
இத்தனை மகத்தான மனிதனாய் தோழனாய் ஆரத்தழுவி
அன்பிணைய ஊர்கூடி வாழ்த்துகின்றோம்.
வாழும் நொடிகளெல்லாம் வசந்த
வைகறைகள் உங்கள் சொந்தமாக
நோய் நொடியற்ற அன்பும்
அமைதியம் அரசாள
எங்கள் மண்ணின் மைந்தனை
மணிவிழாத் திருநாளில் தோள் அணைத்து
வாழ்த்துகிறோம்.

வாழ்க பல்லாண்டு வளமுடன் பலமுடன்
நலமெலாம் நிறைய வாழிய, வாழிய நீவீர்
வாழ்க வளமுடன் என வாழ்த்தும்

**அருளலிங்கம் (விதானையார்) குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்ல நண்பர் சோம சச்சிதானந்தன்



மக்கள் சேவையை மகேசன் சேவையாக ஆற்றும் முன்னோடி
வாழக்கை அவர் பணிகள் வளரட்டும் இவரின் சேவை

குறள்
குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

**விளக்கம்**

என் குடியையும் நாட்டையும் மேன்மை அடையச் செய்வேன் என்று செயல் செய்யும் ஒருவனுக்கு தெய்வம் தன் ஆடையை இறுக உடுத்திக்கொண்டு உதவ முன்வந்து நிற்கும் அண்மைக் காலத்தில் தெய்வத் திருவள்ளுவர் குறள் சொல்லியே நிறைய விடயங்களை சொல்ல ஆசைப்படுகிறேன். நான் இங்கே குறிப்பிடடது 1023 வது குறள் பாடல்.

இந்தக் குறளில் அய்யன் வள்ளுவர் கூறும் விளக்கம். ஒரு மனிதன் மற்றவர்களுக்காக நல்ல விடயங்களை செய்ய துணிகின்ற போது தெய்வங்கள் எல்லாம் துணை நிற்பார்கள் என்பது விளக்கமாகும்.

இந்த உலகில் தன்னை மட்டும் எண்ணாமல் தான் பிறந்த மனித குலத்தின் நன்மைகளுக்காக அரும்பாடுபட்டு உழைக்கும் மனிதர்கள், மனிதரில் மாணிக்கம் என போற்றப்படுவார்கள், அப்படி ஒரு மாணிக்கம், நண்பர் சோம சச்சிதானந்தம்.

**ஊருக்காக உழைக்கும் உத்தமர்:-**

மக்கள் திலகம் MGR என் வாழ்வில் மிக விருப்பமான மனிதர், அவருடைய வாழ்க்கையை உற்றுக் கவனிப்பது அவரது உற்சாகமான பாடல்களை அடிக்கடி கேட்பது, அவர் விட்டுச் சென்ற சாதனைகளை பின்தொடர்வது எனக்கு உற்சாகம் தரும் விடயங்களாகும். அவரது படத் தலைப்புகள் கூட நம்பிக்கை தருவதாகவே இருக்கும்.

அவற்றில் ஒன்று ஊருக்கு உழைப்பவன், அவ்வாறு ஒரு ஊருக்கு உழைப்பவன் என் இனிய நண்பர் சச்சிதானந்தன். அவர் பிறந்த பொன்கொடு தீவு என்று நான் கொண்டாடுகின்ற புங்குடுதீவு மண்ணின் ஏற்றத்துக்காக உழைக்கும் நண்பர்கள் பலரில் சோம சச்சிதானந்தன் முதன்மையானவர். பலருக்கு இவர் முன்னுதாரணமாக விளங்குகிறார். இவர் முயற்சியால் பல நல்ல திட்டங்கள் அவரது ஊரிலும் கனடாவிலும் தாயகத்தின் வேறு பல இடங்களிலும் நிறைவேறி வருகின்றன அவர் பணி தொடரட்டும் இறை அருள் நிறையட்டும்.

**கனிவான பேச்சு காண்பவரைக்கவரும் தோற்றம்:-**

இதையும் அய்யன் திருவள்ளுவர் தனது இனியவை கூறல் என்ற அதிகாரத்தில் 93 வது குறளில்

முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

என்று கூறுகிறார். அதாவது, முகத்தால் விரும்பி – இனிமையுடன் நோக்கி – உள்ளம் கலந்து இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தோடு வாழ விருப்பும் எவரும் எவர் மீதும் மனம் நோகக் கூடிய சொற்களை சொல்ல மாட்டார்கள், எவரும் மனம் பிசகப் பேசக் கூடாது என எனது தந்தையார் அடிக்கடி எங்களுக்கு கூறுவார். அதை சிறு வயது முதல் கடைப் பிடிக்க பாடுபடுகிறேன். அவ்வாறு இயல்பு கொண்டவர் நண்பர் சோம சச்சிதானந்தன். இவ்வாறு நல்ல மனிதர்களை காண்பதே நன்மை தரும் விடயமாகும்.

ஔவை அம்மா சொல்கிற மூதுரை பாடல்களில் 8வது பாடலில்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று
என்று குறிப்பிடுவார்

நல்லவர்களை காண்பது நல்ல விடயம், அவர்களுடைய நல்ல பயனுள்ள சொற்களை கேட்பது இன்னும் நல்ல விடயம், நல்லவர்களுடைய குணங்களை பற்றி பேசுவது இன்னும் நல்ல விடயம், இவை மட்டுமில்லாமல் இத்தகைய நல்ல நண்பர்களை வாழ்க்கையில் பெற்று வாழ்வது இவை எல்லாவற்றையும் விட இன்னும் நல்ல விடயம். ஆகவே நண்பர் சோம சச்சிதானந்தனை நண்பராக கொண்ட அவனைவரும் நல்லவர்களே என்று கூறி, நானும் அவர்களில் ஒருவராக இருப்பதற்கு இறை அருளுக்கு நன்றி சொல்லி இந்த கட்டுரையை இப்போது நிறைவு செய்கிறேன்.


நட்போடு
**நடா ராஜ்குமார்**
அதிபர்
கிழக்கு எப் எம்
EAST FM





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்–சித்–ஆனந்தம்



சச்சியை "நம்ம சச்சி" என்றழைப்பதில் பெருமைப்படுபவன் நான். நமது ஊரில் பிறந்திருந்தாலும் கனடாவில் அவர் எல்லைகளற்றவர். எந்த ஊர்க்காரரும் அவரை " நம்ம சச்சி" என்று தம்மூர்க் காரராகவே நினைப்பதுண்டு. அது சச்சியின் பழக்கத்தால் வந்தது. எல்லோருக்கும் அது முடியாது.

எந்த நிகழ்வாக இருந்தாலும் அங்கு சச்சியின் பிரசன்னம் இல்லாதுபோனால் தான் ஆச்சரியப்பட வேண்டும். எமது கலாச்சாரம், பண்பாடு என்பவற்றை அனுசரித்துப் போகும் சடங்குகள் சம்பிரதாயங்கள், நியமங்களை அறிந்து வைத்திருக்கும் முதியோர் அருகி வரும் இக்காலத்தில் சச்சி போன்ற சிலராலேயே இத் தொடர்ச்சி பேணப்பட முடியும்.

சச்சியை எனக்கு கடந்த 20–25 வருடங்களாகத் தெரியும். அதற்கு முன் அவரது தந்தையார் சோமசுந்தரம் அவர்களை என் சிறு வயதில் சந்தித்திருக்கிறேன். அவரும் ஒரு சிறந்த அரசியல், சமூக செயற்பாட்டாளர்.

சச்சியின் மீது விமர்சனங்களும் இல்லாமல் இல்லை. நடக்காத காலில் முள் குத்தாது. அதற்காக அவர் ஒதுக்கப்பட வேண்டியவர் அல்ல. சச்சியை விமர்சிப்பவர்கள்கூட அவர் இல்லாது ஒரு நிகழ்வை நடத்த சங்கடப் படுவார்கள். அது தான் சச்சியின் குணாம்சம். அது அவரது உழைப்பின் பெறு பேறு. இது தான் சச்சி என்றறிந்து பழகும் போது விமர்சனத்துக்கான அவசியம் ஏற்படாது.

உங்கள் கருத்துடன் சச்சி உடன்படாவிட்டாலும் அது ஒரு சிரிப்பினாலேயே பதிலளிக்கப்படும். அந்த சிரிப்புத் தான் அவரது பலம். அதுவே அவரது வெற்றியின் இரகசியமும் கூட.

புங்குடுதீவு கிராமத்துக்கு அவர் பல சேவைகளை ஆற்றியிருக்கிறார். அதே போன்று புங்குடுதீவின் நாமத்தைப் பறைசாற்றும் அடையாளமாகவும் இருந்து வருகிறார். அந்த வகையில் அவர் கொண்டாடப்பட வேண்டியவரே.

சத்–சித்–ஆனந்தம் என்பதற்கு ஒரு பொருள் – பரமானந்த நிலையை அடைந்தவருக்கு எது சொன்னாலும் கேட்பதுமில்லை. எதுவும் புலன்வழி செனறு அவரை அடைந்து விடவும் முடியாது– என்றொரு கருத்தும் உண்டு.

"நம்ம சச்சி" யும் ஒரு வகையில் நித்திய பரமானந்த நிலையில் இருப்பவர்தான். அவர் கவலைப் பட்டு நான் கண்டதில்லை. அவருக்கு நீங்கள் எதைச் சொன்னாலும் ஒரு சிரிப்போடு ஏற்றுக்கொள்வார். செயற்பாடு அவர் வழியில் தான் இருக்கும். முடிவும் நன்மையாகவே முடியும்.

மணி விழாக் காணும் நம்ம சத்–சித்–ஆனந்தம் நோய் நொடியின்றி நீடூழி வாழ என் வாழ்த்துக்கள்.

அன்புடன்

**ராம் சிவதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், மக்கள் மருமக்களின் வாழ்த்துக்கள்

**தாய்:**

எனது மூத்தமகன் சச்சிக்கு வயது அறுபதா? நம்பித்தான் ஆக வேண்டும். நான் பெற்ற பிள்ளையல்லவா. நான் விவாகமான காலத்தில் சோமஅண்ணரின் மனைவி என்று அழைத்த உறவுகள், சச்சி வளர்ந்து விரித்தெரிந்த காலந்தொட்டு இன்று வரை சச்சியின் அம்மா என்று தான் உறவுகள் அழைக்கின்றனர். அப்பெயரை நாம் பெறுவதற்கு சச்சியின் பண்பு, பரிவு, பாசம், மற்றும் சமூகத்தை நேசிக்கும் நற்பழக்கமுமே ஆகும் என்றால் மிகையாகாது. சகோதரர்களின் எதிர்காலம் கருதி மதுவை மட்டுமல்லாது, மாமிசத்தையும் தொடாது வாழ்ந்துவரும் மகனின் நற்பண்புகளை என்னவென்று அழைப்பது. மணிவிழாக்காணும் மகனே பல்லாண்டு காலம் வாழ்ந்து உறவுகளுடன் வாழ ஆசீர்வதிக்கின்றேன்.

எங்கள் அருமைச் சகோதரனே, எங்கள் குடும்பத்து மூத்த சகோதரனாகப் பிறந்து எங்களை நல்வழிப்படுத்தியது மட்டுமல்லாது எங்களுக்கான சரியான வாழ்க்கைப் பாதையினைக் காட்டிவருவது மட்டுமன்றி எங்களின் இல்லங்களில் நடைபெறும் எல்லா நிகழ்வுகளிலும் முன்னின்று நடாத்தி உதவிடும் மனப்பாங்கு அண்ணாவிற்கு மட்டுமே உண்டு. உங்களின் மணிவிழா சிறக்கவும், சீரும் சிறப்போடும் நீண்ட ஆயுளோடும் வாழவும் வாழ்த்துகிறோம்.

சச்சி மைத்துனருக்கு வயது அறுபதா? வாழ்த்துக்கள். பல்லாண்டுகள் வாழ்ந்து கூட்டுக்குடும்ப வாழ்க்கையை பலப்படுத்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

எங்கள் குடும்பத்தில் அன்போடு பெரியமாமா, பெரியப்பா என்றழைக்கின்ற உங்களின் மணிவிழா சிறக்கவும் எங்களின் வளமான எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டியாக இருந்து தீர்க்க ஆயுளுடன் வாழ வேண்டுமென ஆண்டனை வேண்டுகிறோம்.

அன்புடன்
**அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், பெறாமக்கள், மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புச் சகோதரிகளது வாழ்த்துச்செய்தி

எங்கள் அருமை பெரியதம்பி, எங்கள் பெரியமாமா அவர்கள் தனது அறுபதாவது அகவையை எட்டிவந்த போது அவர் ஆற்றிய பொதுப்பணி, அரசியல், சமயப்பணி இவைகளைக் கண்டு கனடா வாழ் தமிழ் மக்கள் அவருக்கு எடுத்திருக்கும் இந்த மணிவிழாவில் எங்களுக்கும் இந்த நூல் வெளியீட்டு விழாவில் எங்களுக்கும் அவர் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்து கொள்ள இடமளித்த மணிவிழாக் குழுவினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எங்கள் குடும்பத்தில் தம்பி அவர்கள் மூன்றாவது பிள்ளையாக வந்து எங்களோடு பிறந்தவர் தான் தம்பி சச்சிதானந்தன் அவர்கள். நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக இங்கு வெளிநாடுகளில் வந்து ஒன்றாக வாழ்ந்து வருகின்றோம்.

எனது தந்தையார் ஆற்றிய விடுதலை பணிகள் எங்களுக்கும் விடுதலை உணர்வுகளை ஏற்படுத்தியது. தந்தையாரும் மலேசியாவில் வாழ்ந்த காலத்தில் சுபாஸ் சந்திரபோஸ் அவர்களுடன் சேர்ந்து விடுதலைக்காக போராடியவர். தாயகம் வந்தும் தமிழரசுக் கட்சியில் தந்தை செல்வாவோடு இணைந்து தமிழின விடுதலைக்காக அயராது உழைத்து வந்தவர். அதுபோன்று எனது தம்பியும் தந்தையார் வழிநின்று அரசியல், பொதுப்பணி, சமயப்பணியென ஆற்றி வருகின்றார்.

எனது பிள்ளைகளுக்கு பெரியமாமா என்றால் அளப்பரிய பாசம். அன்று தொட்டு இன்று வரையும் சச்சி மாமாவிற்கு என்றும் மரியாதை. பிள்ளைகள் மீது அவரும் அதே பாசப்பிணைப்புடன் இருக்கிறார்கள். அவர் செய்யும் தொண்டு இன்றும் நாட்டில் செய்தது போல் செய்து வருவது கண்டு எண்ணமற்ற மகிழ்ச்சி அடைகிறோம். அக்கா என்றால் தனிமரியாதை செய்து கொண்டு இன்றும் இருக்கின்றார்.

எங்கள் குடும்பத்தில் நானும் அவரும் எந்தக் காரியம் செய்வதென்றாலும் இவரின் ஆலோசனை கேட்டுத்தான் செய்வோம். மருமக்களின் மீது வைத்த பாசம் இன்றும் பார்க்க சந்தோஷமாக உள்ளது. தந்தை போல் இவரும் உற்றார் உறவினர் நண்பர்கள் எல்லோரிடமும் கனிவான பேச்சு இன்றும் தொடர்கிறது.

அவர் அறுபதாவது அகவை அடைந்திடும் நாளை மனம் மகிழ்ந்து வாழ்த்தி மகிழ்வதோடு பல்லாண்டு காலம் சுகதேகியாய் வாழ்ந்தி இறைவனை வேண்டுகிறோம்.

அன்புச் சகோதரனை, மாமாவை, மைத்துனரை, தாத்தாவை வாழ்த்தி மகிழும்
**அருமைச் சகோதரிகள், பிள்ளைகள், மருமக்கள்**
**பாக்கியநாதன் யசோதா – கனடா**
**கிருஷ்ணகுமாரி பாலசுப்பிரமணியம் – ஜேர்மனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகன் சங்கீத சாகரம்
# சோம சச்சிதானந்தன்

புகழ்கொண்ட பழம்பதி புனைசூழ் புங்குடுதீவின் புகழ்மிகு மைந்தன்
தரணியறிந்த தந்தை தமிழரசு சோம சுந்தரம் தந்த நற் புதல்வன்
மணிவிழா நாயகன் மங்காத புகழ் கொண்ட மங்கல சச்சி தானந்தன்
தேன் கலந்த தென்றலாய் தெய்வீக இசை பொழியும் சங்கீத சாகரம்.

பள்ளிப் பருவமதில் பலரும் வியக்க வித்துவங்கள் பல அரங்கேற்றி
தரணி பேசும் தமிழ்த் திறன் பாஓதுதல் போட்டிகளில்
ஜெயம் பல பெற்றுப் புங்குடுதீவுப் பூமகளுக்குப் புகழ் ஆரம் சூட்டினாய்.

பாடசாலைக் கல்வியை பாங்குடன் நிறைவு செய்து
நல் ஆசிரியனாய் அரும்பெரும் சேவை புரிந்தாய்.
புண்ணியம் மிகு புங்குடுதீவின் கிராம சேவகனாய்
அதன் உயர்ச்சிக்கு அயராது உழைத்தாய்.

நீ ஒருமுறை திருமுறை ஓதினால்
மறுமுறைக்காகக் காத்திருப்பர் இறை பக்தர்கள்.
பெருங்காடு கிராஞ்சியம்மன் முருகன்
மீனாட்சி சுந்தரர் திருக்கோவில்களில்
நீ நிகழ்த்திய திருமுறை ஓதல்கள்
பூங்காவன விழாவில் பாடிய ஊஞ்சல் பாடல்கள்
இன்றும் புங்குடுதீவின் புகழ்கொண்ட பேசுபொருள்.

போர்க்காலப் புயலில் சிக்கிப் புலம்பெயர்ந்தாய் கனடாவுக்கு.
புகுந்த மண்ணில் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தை
வித்திட்டு வளர்த்து ஆலவிருச்சமா உருவாக்கி
அதன் தலைவருமாய் ஆண்டுகள் பல பணி புரிந்தாய்.

கனடாவில் சிவன் சமயம் ஆழமாய் வேரோடி நிலைக்க
புனித தேவார திருவாசக அருந் திருமுறைப் பாடல்களை
இசைத் தட்டில் ஆவணமாக்கி இந்து சமய வளர்ச்சிக்கு
சகலரும் ஒருங்கே வாழ்த்தும் சமயப் பெரும் பணிபுரிந்தாய்.

அறிஞர் பெரு மக்கள் அறம் புரி பெரியோர்கள்
பந்தங்கள் சுற்றங்கள் மனங்கனிந் துருகி வாழ்த்த
சிந்தனைகள் செயல்கள் சிறகடித்துப் பறக்கும்
எம் சங்கீத சாகரம் சச்சிதானந்தன் பல்லாண்டு வாழியவே!
பல்லாண்டு பல்லாண்டு வாழியவே!

**கதிர் பாலசுந்தரம்**

ஓய்வுநிலை அதிபர் — தெல்லிப்பழை யூனியன் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். புங்குடுதீவு சோமசுந்தரம் சச்சிதானந்தன் அவர்களின் 60 அகவை நிறைவையொட்டி அவருக்குத் "தொண்டுச் சூரியன்" எனும் விருதுப்பட்டம் சூட்டி இணுவில் இளந்தொண்டர் சபை, இணுவில் கலை இலக்கியக் கழக நிறுவுநர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்கள் பாடி வழங்கிய

# மணிவிழா வாழ்த்துப்பா

**வெண்பா**

சோமசச்சி என்பான் துடிப்பு மிகுதொண்டன்!
பூமிவந்த தேவனிவன் பூணுகிறான் – சேம
மணிவிழா இந்நாள்! மகிழ்கனடா மக்கள்
அணிஆசி சொன்னோம் அணைத்து!

**கலிப்பா**

பூங்குடித் தீவு பொன்கொடு தீவென்று
தாங்கர்த்த நாமங்கள் சாற்றும் ஊரின்கண்
தந்தைசோம சுந்தரம் தாய்சின்னத் தங்கம்
தந்த தவப்பேறே சச்சிதா னந்தமிவன்!
ஆண்டைம்பத்தேழின் அப்புரட்டா தித்திங்கள்
ஈண்டுவந் துதித்தஇந்த நீல ஒளிநிலவு
புங்கைச்சுப்பி ரமணியா புகுந்துகல்வி, கலைகளிலே
துங்கமிகு திறன்தோய்ந்து, தடப்போட்டி பலவற்றில்,
பாவோதல் சொற்பொழிவில் பலபரிசில் ஈட்டியது!
நாவாலும், கையாலும் நல்லவைசெய் வோனென்று
மெச்சியூர் போற்ற விளங்கிட்ட வாலிபத்தில்,
சச்சிஇவன் "சன்ஸ்ரார்" விளையாட்டுக் கழகத்தின்
கலைமகள் மன்றத்தின் கடுகதிச் செயற்பாட்டுத்
தலைவனாய் மது ஒழிப் புக்கழகம், விழிப்புக்
குழு,இளைஞர் கழகம் கொண்டாடும் தொண்டனுமாய்
ஒளிர்ந்தான்! புங்கை பராசக்தி உயர்பள்ளி
ஆசிரியப் பணியின்பின், அப்புங்கை வடமேற்கு
தேசுறுத்துங் கிராம அலுவலராய்த் திகழ்ந்திட்டான்!
மண்கொள்ளைச் ஸ்ரீலங்கா வன்கொடுமைப் போராலே,
தொண்ணூற்று நான்கில் சோகமுடன் புலம்பெயர்ந்து,
கனடாமண் வந்துறையும் காலத்தும் சோம சச்சி
மனிதாபி மானத்தால் மாண்பணிகள் புரிகின்றான்!
தொண்ணூற் றாறினிலே தொடங்குபுங் குடுதீவு
நண்ணும் பழைய மாணவர் சங்கச்
செயலாள ராக,பின் நான்கு தடவைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தலைவ ராக உழைத்தான்! தமிழீழப்
புனர்வாழ் வுக்கழகம், புங்கை பள்ளிகட்குக்
கனிவோடு சேர்த்த காசனுப்பி வந்திட்டான்!
இங்குள்ள கோவில்களில் இசைத்தான் திருமுறைகள்!
அங்இந்தி யாவில் "பாக்கியநா தம்"என்னும்
தன்குரலில் திருமுறைகள் தாங்குபேழை ஆக்கிவந்தான்!
இன்னும்பல சங்கங்கள் ஏத்துதொண் டுறுப்பினனாய்,
அரசமருத் துவமனைநோ யாளர்க்குச் சேவையுடன்
மருவுவெள்ளிக் கூட்டுவழி பாடங்கு செய்கின்றான்!
இத்தகைய சோமசச்சி ஈழத்தின் விடுதலைக்காம்
எத்தனையோ முன்னெடுப்பில் இணைந்தும் உழைக்கின்றான்!
இன்றுவய தறுபதெய்தும் இவன்மணி "விழாபோன்றே
நன்றாய்ப் பவளவிழா நண்ணமுத, நூறாண்டு
நல்விழா தமையும் நண்ணிநின்று வாழி" என
எல்லோரும் வழ்த்துவோம் ஈங்கு!

"தொண்டுச் சூரியன்" சோமசச்சி
மண்டும் வாழ்விக்கும் பணிகளால் வாழி!

இங்ஙனம்
வாழ்த்துபவர்
**ச. வே. பஞ்சாட்சரம்**

இணுவில், கனடா
22-09-2017





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணங்குகின்றேன்



உலகமே பெருமை கொள்ளும்
சமூகசேவகராய், திறமையாளராய்
என் குடும்பம் சார்ந்தவர் இருப்பது
எனக்கும் என் குடும்பத்திற்கும் பெருமை...

எனக்கு வழிகாட்டியாகவும்
முன்னுதாரணமாகவும்
நல்லாசானாகவும் இருந்து
நெறிப்படுத்துதல் என் பாக்கியம்...

சகமனிதர்களுடன் பழகும் விதம்
ஒழுக்கசீலனாக உங்கள் பயணம்
எல்லாவற்றையும் அறியும் ஆர்வம்
உங்களிடம் நான் பார்த்து வியப்பவை...

தமிழ் மொழி மீதான காதல்
பிறந்த தேசத்தில் கொண்ட அக்கறை
அனைவருக்கும் உதவும் தூயமனம்
உங்களிடம் நான் அதிகம் ரசிப்பவை...

எந்தச் சந்தர்ப்பத்திலும் பொறுமை
எப்பேர்ப்பட்ட சபையிலும் ஆளுமை
எதையுமே செய்து முடிக்கும் திறமை
உங்களுக்கு மட்டுமே கைவந்த கலை...

உங்களைப்போல் ஒரு முழுமை
அத்தி பூத்தாற்போல் நடக்கும் அதிசயம்
உங்கள் உறவு நானென்று சொல்கையில்
மெய்சிலிர்க்கும், அகம் நிறையும்.....

அன்புச் சித்தப்பாவிற்கு
ஆசைமகளின் அன்பு முத்தங்களும்
வாழ்த்துக்களும்....

அன்புடன்,
**டர்ஷிகா கிருஷ்னானந்தம்**
கவுன்சிலர் சோசலிய ஜனநாயகக்கட்சி Thun Swiss



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா நாயகனுக்கு மனம்மகிழ் வாழ்த்து



மணிவிழாக் காண்கின்ற என் அண்ணன் சோம சச்சிதானந்தன்
அணியாக அடுக்கடுக்காய் அர்ப்பணிப்போடு செய்த தொண்டின்
பணிவிழாமல் வாழும் வாழ்க்கைக்கு திருவிழா காண்கின்றார்
பிணிவிழா வண்ணம் மீனாட்சியும், முருகனும் அருள்புரிவார்களாக.

வங்கக் கடலோரப் புங்கை நகர்தனில்
மங்காப் புகழ் கொண்ட சோமசுந்தரம்
அங்கமென வந்துதித்த பத்திரமாத்து
தங்க மகன் சோம சச்சிதானந்தம்
எங்கள் தந்தைநிகர் அண்ணன் வாழீ.

அரும்பும் பிஞ்சுக்கும், உதிரும் பழத்திற்கும்
கரும்பாய் இனிக்கும் கார்முகவண்ணன் சச்சி
சீரும் திருவும் பேரும் புகழும் பொலிய
காரும் முகிலுமாய் நீரும் குளிருமாய் என்றும்
ஊரும் உலகும் போற்ற வாழ்க பல்லாண்டு.

பள்ளிப் பருவத்தில் பாடசாலையிலும்
துள்ளி விளையாடி தமிழ்த்திறன் போட்டியிலும்
கில்லி எனக் காசினி போற்றிப் புகழ
அள்ளி முகர்ந்தனர் கல்விமான்கள்
சொல்லில் அடங்காக் காட்சியன்றோ.

காளைப் பருவத்தில் தமிழ் காதல்மேவ அவ்
வேளை எந்தை செய் தந்தை செல்வா வழியில்
நிலவும் அமிர்தலிங்கம் மங்கையர்கரசி சேனாதியோடு
பலமேடை ஏறித் தமிழ்ப் பணியாற்றிய அண்ணல் வாழீ.

உலகத்தில் உயிர் மூச்சே தமிழென வாழ்ந்து
விலகட்டும் தமிழர் துன்பம் துலங்கட்டும் தமிழென்ற
முழக்கத்தோடு சிறை சென்று மீண்ட சேனாதிராசா
திளைக்காத காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன்
திலகமிட்டாய் உன் உதிரத்தால் உணர்ச்சிக் காட்சி.

நல்வாழ்வில் கிராம சேவகராய் பணிபுரிந்தாய்
சொல்வளமும் செயல் நடையும் சிறந்தோங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதவர்க்கும் உள்ளார்க்கும் பேதமின்றி
எல்லோர்க்குதவி உள்ளங்களில் இடம்பிடித்தாய்
செல்வாக்கும் நல்வாழ்த்தும் பெற்றுயுயர்ந்தாய்.

உடன் பிறந்தார்க்கும் உற்றார்க்கும் ஊரார்க்கும்
திடமான தந்தைபோல் தரமான வாழ்க்கையில்
தடம் பதிக்க வைத்து தரணியில் எல்லார்க்கும்
வடம் பிடித்து வாழ்க்கைத் தேருக்கு வழிசமைத்த
விடமுண்ட சிவனென்றே வணங்குகின்றோம் உனை.

புலம்பெயர்ந்து கனடிய தேசத்தில் வாழ்ந்தாலும் தாய்
நில மக்களுக்கு நன்மைகள் பல ஆற்றுகின்றாய்
இறைகீதம் பாடி இறுதட்டில் வடித்து சைவமும்
நிறைதமிழும் நிலைக்க கலைகள் வளர்க்கின்றாய்
கறையின்றி வாழ தமிழ் சிறார்க்கு சீர்மிகு தமிழ்
மறை புகட்டி மக்கள் உள்ளத்தில் உயர்ந்தாய் வாழீ.


சுவிஸ் மாநகரிலிருந்து
**பத்மா தர்மராஜா குடும்பத்தினரும்**
**சகோதர சகோதரிகளும்**
சுவிஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவுப்பகுதிக்கு பெருமை சேர்த்தவனே வாழ்க நூறாண்டு!



தீவுப்பகுதியின் வரலாற்றில் லைடன்தீவைத் தாண்டி முதன் முதலாக எமது மண்ணைச் சேர்ந்த வே.க. சோமசுந்தரம் அண்ணா அவர்கள் யாழ். மாவட்டசபையின் தீவுப்பகுதியின் உறுப்பினராகத் தெரிவானார். அவர் செய்த சேவைகளை கண்கூடாகக் கண்டவர்கள் நாங்கள். தமிழரசுக் கட்சியின் கூட்டங்கள் களைகட்டுகிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் சோமசுந்தரம் அண்ணாவின் விடாமுயற்சி தான். அவருடைய வீட்டில் எப்பொழுதும் மக்கள் கூட்டம் அலைமோதும். வருகிறவர்கள் அனைவருக்கும் சின்னத்தங்கம் அக்கா உணவு சமைத்துப் பரிமாறுவதைக் கூட இன்னும் நினைத்துப் பார்க்கின்றேன்.

ஊருக்குப் பெருமை சேர்த்த உறவின் தலைமகன் சோம சச்சிக்கு இன்று அகவை அறுபது என்று கண்டு மகிழ்கிறேன். தந்தையின் சேவைக்கு மிஞ்சிய சேவையாய் தனையனின் சேவை தளத்திலே கண்டு சந்தோஷப்படுகின்றேன். சச்சி இல்லாத எந்த நிகழ்வும் சிறப்பாய் அமைந்ததாய் நான் அறியவில்லை. அவ்வளவிற்கு ஊரோடும் உறவோடும் நண்பர்களோடும் தன்னுடைய வாழ்க்கையை இணைத்துக் கொண்டுள்ளார். இவர் இன்னும் இச்சேவையை தொடரவும் உடல்சுக ஆரோக்கியத்தோடு இன்னும் பல்லாண்டு வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்க பல்லாண்டு! வாழ்க நூறாண்டு

**ஆறுமுகம் அரியரட்ணம்**
ஓய்வுநிலை TTC ஊழியர்
முன்னாள் வேலணை, புங்குடுதீவு ப.மா.சங்க தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழகிட இனித்திடும் அன்பு மைத்துனர்



மணிவிழாக் காணும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய உலகம் போற்றும் புங்கையூர் மகன் உயர்திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் அறுபதாவது பிறந்தநாள் காணும் நாளில் அவரை வாழ்த்துவதில் மிக்க மனம் மகிழ்கிறோம். மேலும் பல ஆண்டுகள் சீரும் சிறப்புடன் வாழ்ந்து மக்கள் சேவை தொடர இறைவனை வேண்டுகிறோம்.

இவருடைய தந்தையார் உயர்திரு. வே.க. சோமசுந்தரம் அவர்கள் பிறந்த மண்ணின் மக்களுக்கு தொடங்கிய மக்கள் சேவை இன்றுவரை அவரது அருமைப் புதல்வரால் சிறப்பாக எடுத்துச் செல்லப்பட்டு இலங்கை மக்களுக்கும் உலகம் வாழ் தமிழ் பேசும் மக்களுக்கும் தொடர்ந்து வருகிறதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இவரது அருமை மைத்துனர் அமரர் நா. பாக்கியநாதன் அவர்களும் பாண்டியன்குளம் பகுதிக்கு கிராமசேவை அலுவலகராக இருந்து மக்களுக்கு அரும்பணியாற்றியவர். அவர் மறைந்தும் அவரது சேவையை இன்றும் மறவாது பேசிக்கொள்வதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

சோம சச்சிதானந்தன் அவர்கள் சமூகப் பணியோடு ஆத்மீக சேவையிலும் தன்னை ஈடுபடுத்தி வருபவர். இவரது மைத்துனரின் பெயரைக் கொண்டு பாக்கியநாதம் எனும் இசைத்தட்டினை கொழும்பு மாநகரில் வெளியிட்ட பொழுது நானும் அந்த நிகழ்வில் பங்குகொண்டதும் பெருந்திரளான உறவுகள் கலந்து சிறப்பித்ததும் இன்றும் மறக்க முடியாதது.


உங்களின் சேவை தனியே செய்யாமல் பல இளைஞர்களையும் ஒன்றிணைத்து பல கழகங்களை ஒன்றாக்கி செயல்ப்படுத்துவது மிகவும் சிறப்பான விடயமாகும். எனவே மேலும் இப்பணிகள் தொடர வேண்டும். இதைத் தொடர நீங்கள் நீடூழி வாழ்க வாழ்கவென வாழ்த்தி கண்ணகை அம்மனை வேண்டி நிற்கிறோம்.

**சி. சிவராசா**
ஓய்வுநிலை பிராந்திய முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறத்தமிழ் சோம சச்சிதானந்தன்
# மணிவிழா வாழ்த்து (அகவை அறுபது)



மணியான தம்பி சோம சச்சிதானந்தன்
பணிவிழாமல் வாழ்ந்த பண்புக்கு இன்று
மணிவிழா காண்கின்றார் என்றும் அவர்மேல்
பிணிவிழா வண்ணம் பிறைசூடனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

முத்துக்கடல் முரசொலிக்க புங்கைநகர்
சொத்தென வந்துதித்த செந்தமிழ் புதல்வன்
பெத்தவர் மகிழ தமிழ்மறை வழி வாழ்பவர்
பத்தியால் பாவடித்து பதிவேட்டில் நிலைத்தவர்.

பிறக்கும்போதே பிதா சோமசுந்தரம் பொதுத்தொண்டில்
பிறந்தவன் சோம சச்சிதானந்தன் எனும் பண்பாளன்
சிறப்புக்கள் பல செய்தவன் சிந்தனையில் சிறந்தவன்
மறக்கமுடியுமா மானில மாந்தர் இவர் தொண்டினை.

மண்ணின் மைந்தன் மாண்புமிகு சோம சச்சிதானந்தன்
"கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம்" தமிழ்மறை
வள்ளுவன் கூற்றுக்கு அமைய வாழ்பவர் என்றும்
தெள்ளுதமிழ் போல் தெவிட்டாது வாழ வாழ்த்துகின்றோம்.

தேன்தமிழ் சுவையுண்டு முத்தமிழ் கூத்தாட
நற்தமிழ் நயம்பாட செந்தமிழ் செழிப்போடு
பைந்தமிழ் பாரினில் அன்னைத்தமிழ் வளர்த்து
பூந்தமிழ் மணம் பரப்பி பூவுலகு போற்ற வாழீ.

பண்ணும் பதமேழும் இணைந்த தமிழிசையோன்
விண்ணும் மண்ணும் போற்றும் வித்தகன் நீடுவாழ – முக்
கண்ணோன் மைந்தன் கஜமுகன் அருள் சுரக்க
வேண்டுகிறான் ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்.


**வேலுப்பிள்ளை மைந்தன் செல்வயோகநாதன்**

சுவிற்சர்லாந்து பாசெல் "செந்தமிழ் சோலை" செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து
# அகவை 60
# உயர்திரு சோம சச்சிதானந்தன் (கனடா)



இறைவனிடம் இராவணேஸ்வரன் வரம்வாங்கி கனிமவளங்களும்
கற்பக விருட்சமும் நிறைமிகு பொன்னும் பொருளும் செழித்த சிவ
நெறிதழைத்தோங்க நல்லதோர் அரசோச்சிய எழில்மிகு
இலங்காபுரியில் அழகும் அறிவும் துலங்கும் பூங்குடில் கிராமத்து
பெருங்காடு
கிராஞ்சியம்பதி மண்ணில் வந்துதித்த சச்சிதானந்தனே உனை மெச்சி
எம் ஊர்கொள்ளும் என்றும் பேரானந்தமே !

உயர்குடித்தோன்றலில்
திரு. வே. க. சோம சுந்தரம் சின்னத்தங்கம் தம்பதியினரின் மூத்த தலைமகனே
"இளமையில் கல் சிலையில் எழுத்து" எனும் வாக்கியத்திற்கொப்ப சீர்பெறு கல்விகற்று
சிந்தையெலாம் தமிழும், சமயமும், நல்லொழுக்கமும், நற்றொண்டும் ஆற்றி
மக்கள் பணியே மகேசன் பணியென
தந்தைவழியே தனயனும் சேவைகள்
புரிந்திடக் கண்டோம் ! அதனால் பெற்றமண் செழுமைகள் நிரம்பிடக் கண்டோம்!

எம் ஈழமணித்திருநாடு புண்பட்டவேளையெலாம் எழுந்து
செயற்பட்ட பண்பட்ட பணியாளன்
கதர்சட்டை காந்தியின் கண்ணியக்
காவலன், இவன் பண்ணிசைத்தால்
பரமனும் பார்வதியும் பக்தியில் கரைவர்
கந்தனும் கணபதியும் கசிந்துருகக் காத்திருப்பர். அன்று அல்லும் பகலும் மக்களுக்காய் உழைத்த
கிராமசேவகர் இன்றும் எங்கள் கிராமத்துச் சேவையாளர்

இவர் நட்பு வேண்டிட நோன்புகிடப்பர்பலர்
இவரையின்று தெரியாதோர் யாருமிலர்!
மக்களுக்கு என்னவேண்டுமோ ..? உற்றம், சுற்றம், நட்புக்கு ஏது வேண்டுமோ அத்தனைக்கும் விரல்
நுனியில் விபரம்வைத்திருக்கும் நடமாடும் பல்கலைக்கழகம் திரு. சோம. சச்சி
"தோன்றிற் புகழொடு தோன்றுக" என எம்பொய்யா மொழிப்புலவன் ஐயன் வள்ளுவன்
எழுதிய குறளுக்கு சொந்தக்காரன்

இவரிட்டு வளர்த்த மண், இன, சைவ, மொழி, தாய்ப்பற்றும்
இவர் கட்டிவளர்த்த
அன்பு, பண்பு, பாசம், நட்பு, கருணையும்
இவர் நட்டு வளர்த்த
சேவை, தொண்டு, கல்வி, ஞானம் அத்தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்காப் புகழொடு மாரன் இவன் யாரோவெனக்.. ?  காற்று மரிக்கும் வரை
கை குவித்து உலகு கேட்கும். இவர்தம் மணிவிழா மணவிழா ஆன்றோர் சான்றோர் வாழத்தொலிக்க
மங்களவாத்தியம் முழங்கஆயிரம் உறவுகள் மலர்சொரிய கூடிய நட்பெலாம் கூத்திட்டுக்
கொண்டாடிமகிழ இனிது நடைபெற வேண்டுகிறேன். அவர்பாசமொடு பற்றிய பராசக்தி மைந்தன்
பங்காரு அடிகளாரின் ஆசியோடு தூரத்தில்இருந்தாலும் அன்பில் அருகிருந்து வாழ்த்துப்பூக்களை
தூவிமகிழ்கிறேன். மனைவி மக்கள் உற்றம் சுற்றமுடன் சகலசெல்வங்களும் பெற்று
திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழவேண்டுமென பேராசைப்படும்

அன்புப் பெறாமகன்
**"வித்தகன்"**
**சுவிஸ் சுரேஷ்**

## அகவை அறுபதை பூர்த்தியடையும் தம்பி சச்சியே! நீங்கள், நீண்ட பல ஆண்டுகள் நிறைவுடன் வாழ மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்!


சைவநெறி வளர்க்கும் ஊர்! எங்கள் ஊர்! தமிழ் மொழியை காத்து நிற்கும் ஊர்! எங்கள் ஊர்! தாயகத்தின் விடுதலை உணர்வோடு செயற்பட்ட ஊர்! எங்கள் ஊர்! அப்படிப்பட்ட பெருமைமிக்க ஊராம், புங்குடுதீவில், பிறந்து, வளர்ந்து, பல பணிகள் புரிந்து, புலம்பெயர் நாடாகிய கனடா மண்ணிலும், சமூக, சமயப்பணிகள் செய்துவரும் தம்பி சச்சியே! அகவை அறுபதைப் பூர்த்தி செய்தாலும், உனது பணிகளுக்கு எல்லைகள் கிடையாது. நீங்கள் இன்னும் பல்லாண்டுகள் இந்தப் பூமியில் வாழ்ந்து, புலம்பெயர் நாட்டிலும், தாயக நிலத்திலும் சேவைகள் பல புரிந்திட வாழ்க! வாழ்க! என மனம் மகிழ்ந்து வாழ்த்தி நிற்கின்றேன். உனது நலத்துக்கும் சேவைக்கும் இறையருள் என்றும் கிடைக்க வேண்டி நிற்கின்றேன்.

என்றும் உடன்பிறவாத அண்ணன்
**சு.குணரத்தினம்** C.O.
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணியான மனிதருக்கு இன்று மணிவிழா



எனது அன்பிற்கும் மிகுந்த பாசத்திற்கும் உரியவரான தம்பி சோம சச்சிதானந்தன் அவர்களது மணிவிழாவிற்கு வாழ்த்து தெரிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையோர்
என்பும் உரியர் பிறர்க்கு"

அன்பிலார் எல்லாப் பொருளையும் நமக்குத் தாமே அனுபவித்து வருவர். ஆனால் அன்புடையவர் தன்னுடைய எழும்பு முதல் எல்லாப் பொருளையும் பிறர்க்கு கொடுத்து உயிர் விடவும் காத்திருப்பர்.

இந்த வள்ளுவர் உடைய குறளுக்கு மிகவும் பொருத்தமானவர் தம்பி சோம சச்சிதானந்தன். ஏனெனில் கனடாவின் கால நிலமையோ, போக்குவரத்து வசதியையோ அல்லது தனது உடல் துன்பத்தையோ பொருட்படுத்தாது பொதுத் தொண்டு செய்பவர்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அ∴து இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

ஒருவன் தன் எண்ணம் செயல் ஆக்கல் முதலிய எவையெல்லாம் தன்னிடம் இருந்து தோன்றுமோ அவை எல்லாம் புகழுடையனவாக தோன்றச் செய்ய வேண்டும். அவை இல்லாதவர்கள் புகழ் இல்லாதவற்றைத் தோற்றுவிப்பதைவிடத் தோற்றுவிக்காமல் இருப்பது மிகுந்த நன்மை பயக்கும்.

பல நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளில் அவரை நான் பார்த்திருக்கிறேன். அவர் தலைமையேற்று செய்யும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் மிகவும் அற்புதமாகவும், பார்ப்பவர்கள் அவரை பாராட்டி புகழ்வதையும் பார்த்திருக்கிறேன். பலர் என்னிடம் சச்சிக்கு நிகர் சச்சி தான் என்று அவரை புகழ்வதை கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன்.

"நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

இல்லற நெறியிலிருந்து மாறாது மனம் அடங்கியவன் அடக்கத்தின் தோற்றம் மலையை விட மிக பெரியதாகும்.

தம்பி அவர்கள் தனது சொந்த வாழ்க்கையிலும் மனவிக்கு அன்பான கணவனாகவும், பிள்ளைகளுக்கு ஒரு பொறுப்பான தந்தையாகவும் வாழ்பவர் அவர். மலையை விட மிகப்பெரியவர்.

அவர் மிகுந்த மனிதநேயம் உள்ளவர். அவர் மனைவி, மக்கள் மகிழ்ந்திட மாநிலத்தோர் போற்றிட நீண்டகாலம் வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**பிரபு பொன்னம்பலம்**
முன்னாள் தலைவர் வேலணை மத்திய ம.வி.ப.மா.ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் ஒரு பண்பாளன்



எல்லோரையும் தன் அன்பாலும் சிரிப்பாலும், அடிமனத்தில் இருந்து வருகின்ற பண்பாட்டாலும் புடம் போட்ட தங்கம் போல் மிளிர்பவர் தான் இந்தப் மணிவிழாக் காணும் கதாநாயகன் சோமசுந்தரம் சின்னத்தங்கம் தம்பதிகள் பெற்றெடுத்த ஆன்மீகத் தொண்டன் சச்சி அண்ணா ஆவார். இவர் புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலும் வேலணை மத்திய கல்லூரியிலும் கல்வியைக் கற்று முடித்த பின் கிராம சேவையாளராக பதவியேற்றிருந்தார்.

அந்த நேரம் இலங்கையில் யுத்த சூழ்நிலை காரணமாக அனைவரும் அடையாள அட்டையின்றி எங்கும் பிரயாணம் செய்ய முடியாத சூழ்நிலை. அந்நேரத்தில் அனைவருக்கும் விரைவாக அடையாள அட்டை எடுத்துக் கொடுத்து உதவி நின்றவர்.

வேலணை மத்திய கல்லூரியில் பயின்ற காலம் தொட்டு இன்றுவரை அண்மித்த அயல்கிராமங்களில் தன்னோடு கல்வி பயின்றோர் மட்டுமல்லாமல் கனடாவிற்கு புலம்பெயர்ந்து வந்தும் தனது ஆன்மீக ஆதரவுச்சேவையின் மூலம் அனைவரின் அன்பையும் பெற்று மிளிர்கின்றார். தனிமையில் பிள்ளைகளின் உறவுகளின் அன்பிற்காக ஏங்கித் தவிக்கும் முதியோர்கள் தங்கியிருக்கும் மருத்துவ மனைகளுக்குச் சென்று தனது ஆன்மீக சேவை மூலம் அவர்களை ஆறுதல்ப்படுத்துவதோடு சைவத்திருமறைப் பாடல்களையும் பாடி அவர்களை மகிழ்வித்து வருகின்றார்.

தங்கள் இறுதிக்காலத்தை அமைதியாக கழித்திட பெரும்பங்கை இவர் செய்து கொண்டிருப்பது பல முதியவர்களுக்கு நன்மை பயக்கின்றது. மற்றும் இங்குள்ள பழைய மாணவர் சங்கங்களினதும் ஒன்றுகூடல்களில் முன்னின்று முழுப்பங்கை வகிப்பதும், திருவிழாக்களுக்கும் ஏனைய நிகழ்வுகளிலும் தவறாது சமூகமளித்து தேவார திருவாசகங்களைப் பாடியும், சொற்பொழிவுகளைச் செய்தும் வருவது இவரின் சேவைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். தன்னை இந்த பணியில் ஈடுபடுத்திய காலம் தொடக்கம் சைவ உணவுகளையே உட்கொண்டு தன்னை மாற்றிக் கொண்டவர்.

இலங்கை கொழும்பு மாநகரில் 1983ம் ஆண்டிற்கு முன்பு வியாபாரத் துறையில் சாதனை படைத்த தமிழர்களை இனவாத அரசாங்கத்தினர் திட்டமிட்டு பல இன்னல்களை ஏற்படுத்தி தமிழர்களின் பொருளாதாரத்தையே அழித்தபோது அங்கு வியாபாரத்தில் ஈடுபட்ட எத்தனையோ பேர் புலம்பெயர்ந்து இங்கு வந்து வயது முதிர்ச்சி காரணமாக அறைகளிலேயே தன் கஷ்டங்கள் எல்லாம் தாங்கிய வண்ணம் பொழுதை கழிப்பதைப் பார்த்த இவர் பல முன்னாள் வர்த்தகர்கள் எல்லாரையும் ஒன்றுகூட்டி இலங்கை முன்னாள் வர்த்தக சங்கம் என்ற அமைப்பினை நிறுவி, ஒவ்வொரு ஆண்டின் இறுதிப் பகுதியிலும் ஒன்றுகூடல் நிகழ்வுகளை நடாத்தி அவர்களை துக்கத்திலும் சந்தோஷமாக வாழவேண்டும் என்ற ஏற்பாட்டை செய்த பெருமைக்குரியவர். புங்குடுதீவு மண்ணில் பிறந்திருந்தாலும் நட்புக்காரணமாக வேலணை மத்தியகல்லூரி, சரவணை சேவா மன்றம், வென்ஸரன் தமிழர் சங்கம் ஆகியவற்றின் ஒன்றுகூடல்களுக்கு எல்லாம் வருகை தந்து நிகழ்வை சிறப்பிப்பது இவரது சிறந்த பண்பாடாகும். அதிகாலையில் எழுந்து 3, 4 நிகழ்வுகளிலும் பங்குபற்றி சிறப்பிக்கும் ஒரு இளைஞராகவே இவரை நாம் பார்க்கிறோம். ஒரு சிறந்த பொதுநல சேவையாளன், பண்பாளனை வாழ்த்துவதில் எங்கள் மனங்கள் நிறைகிறது.

தோன்றிற் புகழொடு தோன்றுக!

நன்றி வணக்கம்


**வி.கே. கலியானசுந்தரம்**

இலங்கை முன்னாள் வர்த்தக சங்கம் – கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக மகிழ்ந்து வாழ்த்துகிறேன்



தந்தையின் வழியைப் பின்பற்றி புங்குடுதீவு ஓர் உன்னதமான இடமாக மிளிர வேண்டும் என்றும், முற்போக்கு கலை கலாச்சாரமும், கல்வியும் நாகரீகமும், வளமும் புகழும் கொண்ட பூமியாக மிளிர்ந்திட புலம்பெயர் தேசத்தில் புத்துணர்வோடு செயற்பட்டு வருபவர் சோம சச்சி அவர்கள். தான் வாழ்கின்ற காலத்தில் தன் குடும்பம் என்று பாராமல் அனைவருக்கும் உதவி செய்கின்ற பரி பக்குவம் உள்ளவர்.

நான் இவரோடு நீண்ட கால நண்பராக இருக்கிறேன். அதாவது இவர் பையன்களாக பள்ளிக்கூடத்தில் படிக்கிற காலம் தொடக்கம் இன்று வரை நண்பராக இருக்கின்றேன் என்ற பெருமையும் என்னைச் சாரும்.

"நவில் தொறும் நூல் நயம் போலும் – பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு" - வள்ளுவர்

படிக்கும் தோறும் சிறந்த நூல்களில் உண்டாகும் (உள்ளார்ந்த) இன்பம் போல, பழகும் தோறும் பண்பு மிக்கவர் நட்பு. இன்பத்தை உண்டாக்கும். வள்ளுவன் குறளுக்கு ஏற்ப வாழ்கின்ற தன்மையை இவரிடம் காண்கின்றேன். எங்கள் நண்பர்கள் வட்டத்தில் இவருடைய பெருமை எல்லோரையும் ஒன்று சேர்த்து அன்பு செய்து, அகமகிழ்ந்து நண்பர்கள் எல்லோருக்கும் பிறந்தநாள் விழா கொண்டாடி பெருமையும் இவரையே சாரும்.

பிறந்த மண்ணிற்கு பெருமை சேர்க்கும் வகையிலும், அங்கு தொப்பிள் கொடி உறவை தொலைத்து விடாது, அதன் மீது கொண்ட துல்லியமான அன்பின் நிமித்தம் ஊர் மக்களுக்கு உதவி செய்தவற்கு "புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தை ஸ்தாபித்த பெருமையும் இவரையே சாரும்.

புங்குடுதீவு மக்கள் புலம் பெயர்ந்து (இராணுவ கெடுபிடி) அந்த மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து தன் உயிரின் பாதுகாப்பை கூட கருதாது, இரவு பகல் என அந்த மக்களுக்கு உதவி செய்ததை அந்த மக்களே சொல்ல கேள்விப்பட்டிருக்கின்றேன். அவ்வளவு தூரம் அவருடைய சேவையை பாராட்டாத மக்களே இல்லை. அவருடைய சேவை கனடாவிலும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. அது எல்லோரும் வெளிப்படை, இவருடைய சேவையை எழுத்தில் வடிக்க முடியாது. அவ்வளவு தூரம் இந்த இதழ் காணாது.

இவருடைய கணீர் என்ற பேச்சு எல்லா மக்களையும் கவர்ந்துவிடும், சிறந்த குரல் வளம் மிக்கவராய், சிறந்த பாடல்கள் (தேவார திருவாசக இசை) இரண்டு இசைதட்டுகளை வெளியீடு செய்தவர் என்ற பெருமையும் இவரையே சாரும். இவரை நல்ல நண்பராக கொண்டமை குறித்து நான் கொடுத்து வைத்தவன் என்றே எண்ணுகின்றேன்.


மணிவிழாக் காணும் இவரை பல்லாண்டு காலம் நோய்நொடி இல்லாமல், நல்ல ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்றும், எல்லா இறை ஆசிகளையும் பெற்று நிறைவான வாழ்க்கை கண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்
அன்பு நண்பன்
**எம். அரியராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக சேவையாளரும் நாட்டுப்பற்றாளருமான எனது ஆருயிர் நண்பனுக்கு மணிவிழாவாழ்த்து!



அந்த நாள் ஞாபகத்தை இரைமீட்டுப் பார்க்கின்றேன். பள்ளிப்பருவத்தில் துள்ளித் திரிந்தோம். படிப்பிலும் கவனம் வைத்தோம். அன்று தொடங்கிய நட்பு இன்றுவரை தொடர்கிறது. உமது படிப்பை முடித்து சேவை செய்ய வேண்டுமென்ற உயரிய நோக்கோடு கிராமசேவையாளர் பதவியை தேர்ந்தெடுத்தாய். அங்கு ஏற்பட்ட போர் சூழலிலும் ஊரில் இருந்து ஏழை எளிய மக்களுக்கு அதனூடாக வேண்டிய உதவிகளை எல்லாம் செய்தாய்.

நீ செய்த உதவிகளை அம்மக்கள் இன்றும் நினைவு கூறுகிறார்கள். சூழ்நிலை காரணமாக கனடா நாட்டிற்கு புலம்பெயர்ந்து இங்கு வந்தும் உமது சேவை நின்றுவிடவில்லை.

இறைவன் படைப்பிலே உம்மைப் போல் ஒரு சிலரே பிறக்கிறார்கள். அதில் நீரும் ஒருவனாய் ஆகிவிட்டாய். இங்கும் சச்சி என்றால் தெரியாத ஆட்களே இல்லையெனலாம். கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தை உருவாக்குவதில் முக்கிய பங்காளியானாய். அதில் சிலகாலம் தலைமை வகித்து அதனூடாக பிறந்த மண்ணிற்கும் சேவை ஆற்றிக்கொண்டிருக்கின்றாய். அத்தோடு இங்கு நடைபெறும் கைங்கரியங்களிலும் முன்னின்று நடாத்தி எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்து நிற்கின்றாய். என் மனதிலும் எல்லோர் மனதிலும் என்றென்றும் நீர் நிலைத்து நிற்பாய்.

நீவீர் நோய் நொடியின்றி எல்லா இன்பங்களையும் பெற்று இன்புற்றிருக்க வாழ்கவென்று அரியநாயகன்புலம் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றேன்.

வாழ்க வளமுடன்!


உங்கள் ஆருயிர் நண்பன்

**இ. விஜயகுமாரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான் உயர வாழ்த்துகிறேன்



"சச்சி" அண்ணா என்று செல்லமாக நாம் அழைக்கும் சோம சச்சிதானந்தனுக்கு மணிவிழா காணும் அவரது உறவுகள், நண்பர் குழாம் வட்டத்தில் நானும் ஒருவன் என்பதையிட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன்.

"சச்சி" அவர்கள் பேசுவதற்கும், செயற்படுவதற்கும், பண்போடு வாழ்வதற்கும் அவருடைய குடும்பத்தின் (தந்தையின் வழி சுற்றி வாழ்பவர்). இதனால் தான் இவ்வளவு சேவை மனப்பான்மை வந்தது என நினைக்கின்றேன்.

அவருடைய அருமைத் தாயாருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் நிறைய உறவுமுறைத் தொடர்பு உண்டு. அது மட்டுமல்ல நாங்கள் படிக்கின்ற காலத்தில் ஒன்றாக விளையாடுவது, சேர்ந்து போவது, இன்னும் பல அவரோடு ஒன்றியிருப்பதற்கு காரணங்கள்.

அவரைப் பற்றி சொல்லும் போது அவருடைய அன்பான வார்த்தைகள், கணீர் என்ற பேச்சு எல்லோரையும் தன் வசப்படுத்திவிடும். நண்பர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமாக இருந்தால் அதில் அவர்தான் முதன்மையான நபராக இருப்பார்.

அவர் இளமையில் சிறந்த முறையில் கல்வி கற்றதோடு அல்லாமல் சங்கீதம், தமிழ் இலக்கியம், விளையாட்டு போன்றவற்றிலும் மிகவும் திறமையான தேர்ச்சி கொண்டவர். இவருடைய சேவையை சொல்வதென்றால் நாளே காணாது என்று நினைக்கின்றேன். தான் வகித்த கிராம சேவையாளர் பதவி மூலம் தனது பகுதி மக்களுக்கு நிறைவாக பல உதவிகள் புரிந்தவர். கனடா வந்தும் இங்குள்ள கிராமத்து மக்களை எல்லாம் ஒன்றுகூட்டி புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தை ஸ்தாபித்தவர் என்ற பெருமை இவரையே சாரும்.

நாட்டில் பிரச்சனைகள் வந்த போதெல்லாம் அந்த மக்களுக்கு பெருமளவு நிவாரண உதவிகளை அரச மட்டத்தில் சென்று பெற்றுக் கொடுத்தவர். இவரது தந்தையார் தமிழரசுக் கட்சியை புங்குடுதீவு மண்ணிலே நிறுவுவதில் தீவிரமாக செயல்ப்பட்டவர். அது போல் இவரும் தமிழரசுக் கட்சியின் மீது நிறைந்த பற்றுதலும் தமிழின உணர்வு மிக்கவராகவும் இருந்து வருகிறார்.

கனடாவில் தனது குரல் வளத்தினால் இரு இசைத்தட்டுக்களை இந்தியா சென்று ஒலிப்பதிவு செய்து கொண்டு வந்து கனடாவில் மட்டுமன்றி எல்லா நாடுகளுக்கும் சென்று வெளியிட்டு பெருமை சேர்த்தவர். இவரைப் பற்றி இன்னும் பல நினைவுகள் என் மனதில் வந்து முட்டி மோதுகின்றன.


இவர் இன்னும் பல்லாண்டு காலம் நோய் நொடி இல்லாமல் வாழ்ந்து, பவளவிழா, நூற்றாண்டுவிழாக் கண்டிட வேண்டுமென எல்லாம் வல்ல கண்ணகை அம்பிகையின் பாதார விந்தங்களை வேண்டி வாழ்த்துகின்றேன்.

அன்பு நண்பன்
**நடா உதயகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அண்ணாவிற்கு என் வாழ்த்துக்கள்



கூவிக்குலவி குருவியினம் விளையாட
பூவிற் கிடந்த சிறை வண்டும் இசைபாட
அழகு மயிலினமும் தோகை விரித்தாட
புங்கை மண்ணின் மகனே நீ வாழி

மௌத்தை தாய்மொழியாய்க் கொண்டவனே
அன்பு என்னும் வடம் கொண்டு எம்மைக் கட்டிப்போட்டவனே
நீ தானே எம் ஊருக்கு அடையாளம் என்போம்
சச்சி அண்ணன் நாமம் உலகறிந்ததே வாழ்க நீ
கடந்த வந்த வாழ்க்கையின் தடங்களை
அகவை அறுபதில் திரும்பிப் பார்த்தால்
எதிலும் சாதனை அத்தனையும் புகழ்

வாழ்க நீ பல்லாண்டு வாழ்க வாழ்க

இசையா இதிகாசமா தமிழா மதமா
கற்றுக் கொண்டாய் எல்லா வித்தையையும் – ஆனால்
கார் ஓடும் விந்தையை மட்டும் ஏன் துறந்தாய்
வாழ்க நீ பல்லாண்டு வாழ்க வாழ்கவே!

அகவை அறுபது அது வருடக்கணக்கு
நீ வாழ்வாய் பல்லாண்டு பல்லாண்டு
புலம்பெயர் தமிழரின் புலத்தின் அதிர்வோடு
பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ
வாழ்த்துகிறேன் யானும்.

அன்புடன்
**குணா செல்லையா**
காப்புறுதி முகவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவின் புகழ்பூத்த குடும்பத்தின் மைந்தனுக்கு மணிவிழா வாழ்த்துச்செய்தி



புங்குடுதீவில் தோன்றிப் புகழோடு வாழ்ந்து மறைந்தவர்கள் வரிசையில் எங்கள் மாமா வே.க. சோமசுந்தரம் அவர்களை என்றும் தீவக மக்களும் நாங்களும் மறந்துவிட முடியாது. தமிழின உணர்வோடும் தமிழீழ விடுதலைப் பற்றோடும் இறுதிவரை அதற்காகவே வாழ்ந்து, தந்தை செல்வாவின் தமிழரசுக் கட்சியோடு தன்னை முழுமையாக அர்ப்பணித்து தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்காக மலேசியாவில் தேடிவந்த தேட்டங்களை எல்லாம் இழந்தவர்.

புங்குடுதீவு இளைஞர் கழகம் ஆல் போல் தளைத்து பெரும் சமூகப் புரட்சியை ஐந்து கண்டங்களிலும் உள்ள உலக மக்கள் தெரிந்து கொள்ள வழிவகுத்த பொற்காலத்தை உருவாக்கித் தந்த பெருமைக்குரியவர். சோமு மாமாவின் தமைமையில் நல்வழிகாட்டலில் வளர்ந்த பல ஆயிரம் தொண்டர்கள் உலகெங்கும் பரந்து பெருமை பெற்று வாழ்கின்றனர். அவர்களில் நானும் ஒருவன் என்பதில் என்றும் பெருமையாக இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு பெருந்தியாகியின் புதல்வனாக வந்துதித்த சோம சச்சிதானந்தன் அவர்கள் இன்று தனது அகவை அறுபதை அடைந்திடும் நாள் கண்டு உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது. சோமு மாமா அவர்களோடு தாயகத்தில் ஒன்றாக அரசியல் பணி புரிந்த காலத்தில் சச்சி அவர்களும் ஒன்றாக பயணித்த அந்த நாட்கள் இன்றும் பசுமையாக உள்ளது. தம்பி சச்சி அவர்கள் புங்குடுதீவிலுள்ள வீதிகள், குளங்கள், கிணறுகள் எல்லாம் புணரமைப்புப் செய்கின்ற பணிகளிலெல்லாம் எங்களோடு உடனிருந்து பணியாற்றி நின்றவர்.

தந்தை தாயாரிடம் நிறைந்திருந்த பண்புகளும், எந்த நேரம் சென்றாலும் எங்களை உபசரித்து உணவு தந்து அரவணைத்து மகிழ்வித்த அந்த நாட்கள் இன்றும் எங்கள் நெஞ்சங்களில் பசுமையாக நிறைந்திருக்கிறது. தம்பி சச்சி அவர்களுக்கு கிடைத்த கிராமசேவை அலுவலர் பதவி மூலம் புங்குடுதீவு மக்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுத்ததோடு இடம்பெயர்வினால் இடம்பெயர்ந்து பிற மாவட்டங்களில் வாழ்ந்த மக்களுக்கு அவர்களை நாடிச்சென்று உதவிகள் புரிந்ததை இன்றும் மக்கள் மறவாது இருப்பதையும் புலம்பெயர் தேசங்களிற்கு செல்லும் போது நான் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

கனடா வந்தும் அவர் ஆற்றிவரும் சமய சமூக தமிழ் பணிகளை அறிகின்ற போது எங்கள் நெருங்கிய உறவுமுறை சார்ந்தவர் என்ற வகையில் பேருவுகையடைந்து கொள்வதோடு மென்மேலும் அவரது பணி தொடரவும், நோய்நொடியின்றி மனைவி, பிள்ளைகள் குடும்பத்தாருடன் பல்லாண்டு காலம் வாழ்க வளமுடனெ எம்பெருமான் வரசித்தி விநாயகரை வேண்டி வாழ்த்துகிறேன்.

அன்புடன்
**ஜெயம் கனகசபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46 ஆண்டு கால நட்பு



மனம் நிறைந்திட்ட மணிவிழா நாயகனை
மனம் குளிர வாழ்த்துகின்றேன்

செங்கமலந் தன்னழகால் தேன்பால் நறுஞ்சுவையால்
பைங்கிளிகள் பாட்டால் பகர்ந்திடுமே — பொங்குபுகழ்
சோமசுந்தரம் பெற்றெடுத்த தெள்ளமுதம் சச்சியெனும்
அன்பன் அகவை அறுபதினைக் கண்டான்.

நன்நிலத்திலே தமிழ் இனத்தின் விடுதலைக்காய்
அன்னை தமிழின் தளைபோக்க ஈழத்திலே
அறப்போர் தானைநடத்திய மன்னும் தந்தை
நல்விருட்சமாய் வாழ்ந்து புங்கையூர்த் தாயின்
நற்புதல்வன் தமிழ் இனத்தின் தொண்டனாய்
நேசித்த கொள்கையால் நிறைந்து வழியும்
நேர்மை கொள்கைப் பிடிப்பாளர் வே.க.வின்
மைந்தன் வாழ்க இனிதே வாழி பல்லூழி.

அலை யெறியும் கடலினிலே புகழின்கீதம்
ஆர்ப்பரித்து நாற்புறமும் வாழ்த்தி நிற்கும்
கலைபொழியும் அழகுதமிழ் பேசும் புங்கையூரிலே
முத்தமிழில் முருகென்று பேர் படைத்து
அந்தத்தில் ஆதி ஆதியிலே அந்தமென
கிராஞ்சியம்பதி வந்த வடிவேலவன் பதியில்
கல்வியிலே மேன்மைபெற்று கிராம அலுவலராக நற்பணி
ஆற்றி வாழ்ந்த சச்சியெனும் செயல்வீரன் வாழி பல்லூழி.

ஒரே கலையகத்தே கல்வி பயின்றோன்
பள்ளியிலே பயிலும் காலம் தொட்டு
துள்ளு தமிழ் நடையினிலே எழுதிக்கற்றோன்
நாளும் சச்சியண்ணா என்றுனை அழைத்து
நாற்பத்தியாறு ஆண்டுகள் நட்பில் கலந்து
மண்ணின் வளர்ச்சிக்காய் நற்பணிகள் பலவாற்றி
மக்கள் மனம்மகிழ பல்கலையும் ஆற்றிவரும்
சோமசச்சிதானந்தன் என்றும் வாழி நீடூழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் மொழியும் நாம்பெற்ற கண்களெனக்
பாடும் பொழுதெல்லாம் பால்வார்க்கும் செந்தமிழை
அழகு தமிழில் அருமையாகவும் இனிமையாகவும்
மனதிலே தென்றல்வர வாக்கிலே அருவிவர
அழகாக அவையேறி பேச வல்லோன்
குணத்திலே குளிர்ச்சிவர கூடிவரும் நண்பர் குழாம்
அனைவருக்கும் பெருவிழா எடுத்து அணைத்து
நடத்தி வரும் சோமசச்சிதானந்தனே வாழி நீடுழி.

அகவை அறுபது என்னும் காலம்கனிந்து
சங்கை மிகுந்த தன்பதி சமூகச்
சங்கங்கள் வளரவும் தயங்காது யுதவும்
உன்னத தொண்டராய் மெல்லிய சிரிப்பினோடு
மனமார வாழ்வெல்லாம் பணிகள் செய்தோன்
ஊரின் பழம்பெரும் மாணவ சங்கத்தின்
தலைமைப் பதவியேற்று சாதனை படைத்தோன்
நானிலம் போற்ற பல்லாண்டு வாழிநீடுழி.

தமிழுக்கும் சைவத்திற்கும் அயராதுளைக்கும் இனிய
உளவாக இன்னாபேசாத இனியோனே வாழ்கநீடு
செந்தமிழ் தேன் பொழிந்து செவிகளை
நிரப்பும் சீரோனே என்றும் வாழ்க நீடூழி
அன்னை தமிழுக்கு அழகூட்டும் தேனின் சுவையாய்
திருமுறை தமிழின் பாவிசையாய் இசைத்து
இறையருளால் வளம்பல பெற்று நலத்தோடு
பணிபல புரிந்து குடும்பத்தினரோடு வாழ்கநீடூழி.

வாழ்க வளமுடன்

அன்புடன்
**குமார. மனோகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



இன்று அகவை அறுபதில் கால் பதிக்கும் எம் அன்புக்குரிய சோம சச்சிதானந்தன் எம் புங்கையூர் மண்ணின் புதல்வன். பாரம்பரியமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். தமிழரின் பண்பாடுகளில் ஒன்றான விருந்தோம்பல் பண்பை குடும்ப சொத்தாக கொண்ட குலத்தில் தோன்றியவர் அன்பு, அறம், பண்பு போன்றவற்றுக்கு இருப்பிடமாக வாழ்ந்த தந்தை, தாய்க்கு தலைமகனாய் பிறந்தவர், தந்தை வழியில் அன்றும் இன்றும் செயலாற்றி வரும் நல்லுள்ளம் கொண்ட மனிதர்.

தந்தை காந்தீய கொள்கையில் ஈர்க்கப்பட்டு அவர் வழி பின்பற்றி வாழ்ந்தவர். தன் ஆயுட்காலம் வரை தமிழ் தேசியத்தை கடைப்பிடித்து வாழ்ந்த உத்தமருக்கு மகனாகப் பிறந்து புங்கையூர் மண்ணில் கல்வி பயின்று கல்வியில் சிறந்து விளங்கியவர். கல்வி கற்கும் காலங்களில் சிறந்த மாணவனாகவும், பின் கிராம சேவகராகவும் தாய் நிலத்தில் கடமையாற்றினார். புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தாய்க்கிராமத்தை மறவாத மண்பற்றுக் கொண்டவர்.

தேசியத்தை நேசிப்பவர் தமிழனத்தின் பாரம்பரியங்களையும், பண்பாடுகளையும் தன் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்பவர். சிறந்த ஆன்மீகவாதி ஆன்மீகத்திலுள்ள நம்பிக்கையும், இறைபக்தியுமே அவரை இந்நிலைக்கு உயர்த்தியிருப்பது மறுக்க முடியாத உண்மை. அவரின் சிந்தனையும் செயலும் ஒரே கோட்டிலேயே என்றும் ஓடிக்கொண்டிருக்கும்.

அவரின் தெய்வ சிந்தனையும், அதன் மேல் கொண்டுள்ள நம்பிக்கையும் கொண்டே எம் புங்குடுதீவு சர்வோதய நற்பணி ஒன்றியம் "திருமுறைப் பாவலர்" என்ற பட்டதைக் கொடுத்து கௌரவித்தோம். பன்னிரு திருமுறைகளையும் ஒன்றாக தொகுத்தவர் "நம்பியாண்டார் நம்பி". அப்பன்னிரு திருமுறைகளையும் தம் வாயால் பாடி இறைவனைப் பரவசப்படுத்துபவர் நம் கிராமத்தில் பிறந்த சச்சிதானந்தன் என்ற தம்பி என்ற விடயம் அனைவரும் அறிந்ததே. அத்துடன் தன் கிராம வளர்ச்சிக்கு பழைய மாணவர்களை ஒன்றிணைத்து பழைய மாணவர் சங்கம் அமைத்து தலைவராகவும் விளங்கியவர்.

கனடிய மண்ணில் கால்பதித்து கனவுகள் பல சுமந்தபடி வாழும் நம்மினம் மண் பிரிந்து உறவுகளைத் தொலைதூரம் விட்டு வந்து மனச்சஞ்சலங்களுடன் வாழும் நேரங்களில் எல்லாம் அவர்களின் துயரங்களை அமைதியடையச் செய்வது ஆலயங்களே.

திரு. சோம சச்சிதானந்தன் ஆலயங்களில் அச்சேவையை ஆற்றிவருவது அவருக்கு மட்டுமல்ல, அவர் சந்ததிக்கும் தமிழினத்துக்கும் செய்துவரும் தொண்டாகும். இப்படிப்பட்ட நல்லுள்ளம் கொண்ட அன்புக்குரிய திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் மணிவிழா காணும் இந்நன்நாளில் தன் மனைவி, பிள்ளைகளுடன் நீண்ட காலம் நிறைவான வாழ்வு வாழ்ந்து நூற்றாண்டு விழாவும் கொண்டாட வேண்டுமென்று மனமகிழ்வுடன் இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

**கணேஷ் மகாலிங்கம்**
தொண்டர் திருநாவுக்கரசு
நற்பணி ஒன்றியம் ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புக்கினிய நண்பர் சோம சச்சிதானந்தன்



மணிவிழாக் காணும் என் இனிய நண்பன் "சிம்மக்குரலோன்", திரு. சோம சச்சிதானந்தன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆழ்ந்த இறைநம்பிக்கையும் ஆரவாரமில்லாத சமூகப்பணியும், பகட்டுகள் இல்லாமல் பளிச்சிடும் தோற்றமும், விரோதிகளைக் கூடத் தன்வசப்படுத்தும் புன்னகையும், அதற்கூடு வெளிப்படும் பக்குவமும், இசைஞானமும், அதற்காய் அமைந்து சிம்மக்குரலும் என்று இவ்வாறான பெருமைகளுக்குச் சொந்தக்காரனான சச்சிக்கும் எனக்குமான நட்புக்கும் அகவை ஐம்பது ஆகின்றது.

சிறுவயதில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் வகுப்பறைகளிலும், விளையாட்டுத் திடல்களிலும் பரிட்சீயமான நட்பு இன்றுவரை தொடர்கின்றதென்றால் பெரும்பாலும் இருவருக்குமான சமூகம் சம்பந்தமான தடங்களும், பார்வையும் ஒன்றாக இருப்பது மாத்திரமல்ல, மனதுக்கண் இருக்கக்கூடிய நம்பிக்கையும், தெளிவுமே காரணம். நட்பு என்பது ஒருவரது நிறைகுறைகளோடு ஏற்றுக்கொள்ளப்படுகிறதொன்று. குறை கண்டு திருத்துவதும், நிறை கண்டு வாழ்த்துவதுமே உண்மையான நட்பாக இருக்கிறது. இத்தகைய நட்புக்கே ஆயுள் அதிகமாக இருக்கும். இதுவே எமை பலர் வெட்டிச் சாய்த்துவிட சூழ்ச்சிகள் செய்த போதும் அதையும் தாண்டி ஆத்மார்த்தமாக நிற்கின்றது.

சச்சியவர்களோடு மட்டுமன்றி, அவரது தந்தையார் திரு. சோமசுந்தரம் ஐயா அவர்களுடனான அரசியல் செயற்பாடுகளிலும் நான் ஈடுபட்டமை சச்சி அவர்களை மேலும் அடையாளம் காண உதவியது எனலாம். நீண்ட நெடிய அரசியல் அனுபவமும், பின்னணியும் கொண்டிருந்த இந்தக் குடும்பத்திலிருந்து தந்தையின் வழி நின்று சமூக, அரசியல், ஆன்மீகப் பணிகளை செய்து வருகின்றவர் நண்பன் சச்சி என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தாயகத்திலிருந்து இந்திய இராணுவத்தினரின் தேடுதலுக்குத் தப்பி 1988ம் ஆண்டு நாடுவிட்டு நான் கண்ணீரோடு புலம்பெயர்ந்து வந்தபொழுதும், சச்சி அவர்கள் புங்குடுதீவின் இடப்பெயர்வு வரை அம்மக்களுக்கு தன்னாலான தொண்டுகள் செய்தமை, அவரின் கிராம சேவகர் பதவி அதற்கு மிகவும் ஒத்துழைப்பாக இருந்தமை பற்றியும், தாம் பட்ட துன்பங்கள் பற்றியும் பல சந்தர்ப்பங்களில் என்னோடு பகிர்ந்துள்ளார். எனினும் தாய் மண்ணை விட்டு நீங்க வேண்டிய சூழல் அவருக்கும் நேர்ந்தது.

விதி வசத்தால் மீண்டும் நாம், பிறந்த மண்ணுக்கு ஈடான, அல்லது அதற்கு மேலாக எமக்கு அன்பு காட்டி, மடிதந்த, தெய்வப் பூமியாம் கனடா மண்ணில் 1994களில் சந்திக்கின்றோம். புங்குடுதீவு மகாவித்தியாலய முன்னாள் அதிபர், எமது ஆசான் வீ.வ. நல்லதம்பி அவர்கள் தலைமையில் கனேடிய மண்ணில் சிதறுண்டு கிடந்த எம்மூர் மக்களை ஒன்று திரட்டி "தாயகம் நோக்கிய அபிவிருத்தியையும்", புலம்பெயர் தேசத்தில் "எமது ஒற்றுமையையும்", கட்டியெழுப்பும் நோக்கோடு அமைக்கப்பட்ட "கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்" 1996ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி உருவாக்கப்பட்டது. இதில் ஆரம்பகாலத் தலைவராக நானும், செயலாளராக சச்சி அவர்களும், எமது இன்னுமொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடசாலை நண்பன் ச. சந்திரகுமார் பொருளாளராகவும், இன்னும் பல நண்பர்களோடு பாரிய பொறுப்பை தலைமேல் சுமந்து செயற்பட்டு மாபெரும் வெற்றியும் கண்டோம். இவ்விடத்தில் சச்சியின் ஒத்துழைப்பு பெரும்பங்காக இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனேடிய மண்ணில் ஊர்சார்ந்த பணிகள் மட்டுமன்றி, இனம் சார்ந்த பணிகளிலும் முன்னின்று உழைத்துக் கொண்டிருப்பவர் திரு.சச்சி. ஆன்மீகப் பணிக்கான ஒன்றாரியோ அரசின் விருதினை வென்றவர். ஆலயக் கைங்கரியங்களில் அக்கறை காட்டுபவர். மரணச் சடங்குகளில் திருமுறை ஓதும்போது இவரின் குரலில் இருக்கும் சோகத்தோடு கூடிய கணீரென்ற ஓசை பலரின் கண்களையும் கலங்கச் செய்யும். நான் ரசித்த பாடகர்களில் இந்தியப் பாடகர்கள் உள்ளடங்கலாக உச்சஸ்தாயியில் பிசிர் இல்லாமல் பாடக் கூடியவர்களில் என் மனதில் இடம் பிடித்தவர். இவரிடமிருந்து நான் வியந்து போனது இவரின் குரலுக்கு அடுத்ததாக இவரின் "பொறுமை". எந்தளவிற்கு உச்சமாக நாங்கள் குரல் எழுப்பி கோபித்தாலும் மறுநிமிடமே அதை மறந்து தானாகவே வந்து அன்பாக உரையாடக்கூடிய மிகச்சிறந்த நற்பண்பு இவருடையது. அதனால் தானோ என்னவோ விரோதிகளோ, எதிரிகளோ இல்லாத, எல்லோருக்கும் இனிய நண்பனாக, உறவினனாக, ஆபத்பாந்தவனாக விளங்குகின்றார் சச்சி அவர்கள்.

இவரின் சமூப்பணி தொடர இறைவன் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வழங்க வேண்டி, வாழ்த்துகிறேன்!

நன்றி

அன்புடன்
**எஸ். எம். தனபாலன்**
முன்னாள் தலைவர் பு.ப.மா.ச





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புக்கு இனியவன்

தம்பி சோம. சச்சிதானந்தனை ரொரன்றோவில் அறியாத தீவுப்பகுதி அன்பர்கள் யாரும் இருக்க முடியாது. அதேவேளை இங்கும் ஈழமண்ணின் பல அன்பர்கள் அவரை அறிவார்கள். இவர் இங்கு ஒரு சமூகத் தொண்டனாக வலம் வருபவர். இவரை நான் புங்குடுதீவு மண்ணிலேயே அறிந்தவன். என்னைப் போன்ற நயினாதீவு அன்பர்களை இவர் தாய் மண்ணிலும் இங்கும் அறிந்தவர். புங்குடுதீவில் புகழ்பெற்ற ஒரு உண்மையான தமிழ் பற்றாளனின் புதல்வன். இவரின் மைத்துனர் திருமிகு. பாக்கியநாதனை நான் கிளிநொச்சியில் சட்டத்தரணியாக தொழில் புரிந்த காலத்தில் அறிந்தவன். அவரும் அங்கு ஒரு கிராம சேவையாளராக மட்டும் அல்லாமல் ஒரு சமூகத் தொண்டராகத் தான் வாழ்ந்து மறைந்தார். எனக்கு இவரின் குடும்பம் சமூகத்திற்கென்றே தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்கள்.

தம்பி சச்சி இனிய பாடகர், பேச்சாற்றல் மிக்கவர், ஒரு வித்தியாசமான குரல் வளம் கொண்டவர், மேடையில் நிற்கும் போதே அவர் கம்பீரமான தோற்றத்துடன் நிற்பதே பார்ப்பதற்கு அழகாக இருக்கும். மேடையும் பொலிவாக இருக்கும். தம்பி சச்சி அவர்கள் தமது பிறந்தநாளையும் மணிவிழாவையும் கொண்டாடுவது மனதுக்கு இனிமையாக உள்ளது. தீவுப்பகுதியின் பண்பாட்டுக் கோலங்களை பறைசாற்றும் தம்பி சோம சச்சிதானந்தன் என் அன்புக்கு இனியவன். இவர் தம் மனையாளோடும் மக்கட்செல்வங்களோடும் நீடூழி நிறைவோடு வாழ எல்லாம் வல்ல அன்னை நயினை நாகபூஷணியை வேண்டி என் வாழ்த்துச் செய்தியினை நிறைவு செய்கிறேன்.

சுபம்

என்றும் அன்புடன்
அண்ணர்
**தம்பையா ஸ்ரீபதி**
கனேடிய சட்டத்தரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட பொன்மனச் செம்மல் ஐம்பது ஆண்டு கால நண்பர் சோம சச்சி

தோன்றிற் புகழொடு தோன்றுக — அ∴திலர்
தோன்றலில் தோன்றாமை நன்று.



இன்று இனிய மணிவிழாவினைக் கொண்டாடும் என் இனிய ஆருயிர் பள்ளித்தோழன், அன்புக்குரியவர், எனது உடன்பிறவாச் சகோதரன் சோமசுந்தரம் சச்சிதானந்தன் அவர்கள் என்னுடைய ஐம்பது ஆண்டுகால ஆருயிர் நண்பன் என்று சொல்வதை விட எனது உறவினரும் கூட. எனது மூத்த அண்ணன் அவர்கள் இவரது சிறியதாயார் முறையானவரை திருமணம் செய்தவர். 1966ம் ஆண்டு நான் அண்ணர் வீட்டிலிருந்து படிப்பதற்காக புங்குடுதீவு குடி பெயர்ந்தேன்.
அன்று சுப்பிரமணிய வித்தியாசாலையில் எனது மூன்றாம் கல்வியாண்டு ஆரம்பமானது. அதே பாடசாலையில் எனது நண்பன் சச்சி அவர்களும் என்னுடைய வகுப்பறையில் ஒரு மாணவனாக இருந்தார். அன்று தொடக்கம் எனது நட்பு ஒரு விருட்சம் போல் வளர்ந்தது. அதற்கு மூலகாரணமாக பாடசாலையில் அதிபராக இருந்த பெரிய சபாரத்தினம் அவர்களின் மிகவும் கட்டுப்பாடான கடமையுணர்வுடன் வழிநாடத்தியமை குறிப்பிடத்தக்கது.

எனது வகுப்பு ஆசிரியை திருமதி. தனலெட்சுமி அவர்களிடம் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் கல்வி கற்கின்ற வாய்ப்பு பெற்றேன். பள்ளித் தோழனான சச்சி அவர்கள் நான் செய்கின்ற அனைத்து பொது நிகழ்வுகளுக்கும் உறுதுணையாகச் செயற்பட்டவர். காரணம் நாங்கள் 1967ம் ஆண்டு தொடக்கம் கலைவிழாக்கள், சிவராத்திரி விழா போன்ற சமய நிகழ்வுகளையும் விளையாட்டு போட்டிகள் போன்ற பொது நிகழ்வுகளையும் செய்து வந்திருக்கின்றோம். அங்கே இருக்கின்ற புளியடியிலும் வேம்படியிலும் விமரிசையாக பல விழாக்களைக் கொண்டாடியவர்கள்.

அக்காலத்தில் உறவுகள் பெரும் பங்களிப்பைச் செய்வார்கள். காரணம் அத்தனை பேரும் உறவுகள் என்பதால் அந்த நாட்களில் நண்பர் அவர்களும் உற்ற வலக்கரமாக செயற்பட்டு அன்றே தனது பொதுச்சேவைக்கு வித்திட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்றிலிருந்து எமது உறவு மிகவும் நெருக்கமானதாகவும் பாசமானதாகவும் இன்று வரை தொடர்கின்றது.

"ஒளியார் முன் ஒள்ளியர் ஆதல் வெளியார் முன்
வான் கதை வண்ணம் கொழல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கிணங்க வாழ்ந்து காட்டுபவர் எனது நண்பன் சச்சி அவர்கள். அதாவது படித்தவர்கள் மத்தியில் படித்தவனாகவும், படிக்காத மத்திய அறிவுடையோர் மத்தியில் அவர்கள் போற்றும் தமது சேவையினை செய்வார். அதனால் தான் இன்று மக்களோடு மக்களாக நின்று தனது தொண்டினை செய்து வருகின்றார். அதற்கு குடும்ப பின்னணியும் ஒரு காரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது தந்தையார் வே.க. சோமசுந்தரம் அவர்கள் தனது வாழ்நாள் பூராகவும் தமிழரசுக் கட்சிக்கு பொதுப்பணி ஆற்றியவர். பின்பு தீவுப்பகுதி அபிவிருத்திச்சபை உறுப்பினராகவும் பொறுப்பேற்று பல பொதுத்தொண்டுகளைச் செய்த பெருமைக்குரியவர். அத்தகைய தந்தையின் வழிவந்த மகனாரும் பொதுப் பணிகளை பொறுப்பேற்றுச் செய்வதில் மிகவும் உற்சாகமாக தனது சேவையை செய்து வருபவர். அத்தோடு பாக்கியநாதம் என்ற இறுவட்டினையும் தனது அத்தானின் ஞாபகார்த்தமாக வெளியீடு செய்து பெருமை சேர்த்தவர்.

தொடர்ந்து சமயப்பணிகளையும் தமிழ்ப்பணிகளையும் கனடாவில் செய்து வருகின்றமை போற்றுதற்குரியது. ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் நன்கு அறியப்பட்டவர் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். சிறுபிள்ளைகளும் வயது முதிர்ந்தோருடனும் அன்பாகவும் கலகலப்பாகவும் இனிமையாகவும் பேசி மகிழ்வர்.

இப்படியான பல பெருமைகளை தன்னகத்தே கொண்ட எனது இனிய நண்பர் அவர்கள் இன்று தனது மணிவிழாவினை சிறப்பாக கொண்டாடும் இவ்வேளையில் ஐம்பது ஆண்டுகால உற்ற நண்பன் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு பல நூறாண்டு காலம் வாழ வேண்டி எம் இறைவி நயினை நாகபூஷணித் தாயாரை வணங்கி வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்க பல்லாண்டு வளமுடன்!

**ஆருயிர் நண்பன், நயினை நாவலர்**
**வே.த.க.சு தவம் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகன் வாழி!



பொற்புடை சோமசுந்ரம் பெற்ற
பொது மகன்
விற்புடை வேந்தன் செந்தமிழ்
வல்லோன் புங்கை
நற்பதி பிறந்து சேவை ஆற்றிய
நல்லோன் சச்சி
கற்றவர் சவையை களிப்புற வைக்கும்
காவலா வாழி! வாழி!

மணிவிழா காணும் நாயகன் இன்று
மாண்புடன் மகிழ்ந்திடும் மங்கை
அணியென வாழ்ந்து ஆண்டுகள் நூறு
பணிபல செய்ய வாழ்த்துகிறேன் நான்

நாகம்மை நல்லருளால் நாளும் வாழ
நற்பணியால் புங்கைநகர் ஓங்கி நிற்க
பாகமுறும் நாகம்மை பாதம் போற்றி
பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்திட வாழ்த்துகின்றேன்.

K.N. **ஜெயசிவதாசன்** B.com. Dipin Ed
கனடிய திருமண பதிவாளரும், கல்வி காப்புறுதி ஆலோசகரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகசேவையாளனே வாழ்க பல்லாண்டு!



எமது நல்ல நண்பர் சோம. சச்சிதானந்தன் அவர்களின் அகவை அறுபதையொட்டியாம் எடுக்கும் இம்மணிவிழா வரலாற்று முக்கியம் சாய்ந்த ஒன்றாகும்.

கனடியத் தமிழர் வரலாற்றை எழுதுவோர் எமது நல்ல நண்பர் சச்சியின் பெயரை விட்டுவிட்டு எழுத முடியாது என்பது திண்ணம்.

சமூகத் தொண்டனாக, ஆத்மீக சேவையாளனாக, செஞ்சொற் கொண்டவனாக, பாவலனாக, கலைஞராக சச்சி விளங்குவதையிட்டு யாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். தியாக மனப்பான்மையும், கருணை உள்ளமும், உயர்ந்த சிந்தனையும் கொண்ட சச்சி அவர்கள் தன்னலம் பேணாது பிறர் நலம் பேணும் பெருந்தகையாளர்.

உள்ளத்தால் பொய்யா தொழுகின் – உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க உயரிய மனித விழுமியங்களோடு வாழ்ந்து வருபவர். கடந்த சில வருடங்களுக்கு முன்பு இவர் பண்ணோடு பாடிய "பாக்கியநாதம்" என்னும் இசைத்தட்டும், பாராட்டுவிழா மலரும் எனது தலைமையில் கனடாவில் பெருந்தொகையான மக்கள் மத்தியில் வெளியிடப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்களின் பாராட்டினைப் பெற்றமையை என்றுமே எனது வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும்.

எமது தீவகமாம் நெடுந்தீவில் மக்கள் பயணித்த குமுதினிப் படகில் வந்தவர்களை அரச படையினர் வெட்டியும் கொத்தியும் குற்றுயிராய் கிடந்த வேளையில், காயப்பட்ட மக்களைப் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கும், யாழ். வைத்தியசாலைக்கும் உடனடியாக எடுத்துச் சென்றமையும், அவர்களின் நகைகளை எல்லாம் சேகரித்து உரியவர்களிடம் ஒப்படைத்தமையும் எண்ணும் போது சச்சியின் பெருந்தன்மை தெளிவாகின்றது.

சச்சியின் அகவை அறுபதையிட்டு யாம் எடுக்கும் இம்மணிவிழா சிறப்புறவும், மலர் மணங்கமழவும் நல்லாசிகளுடன் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வைத்திலிங்கம் இராஜேஸ்வரன்**
மேலாளர்
கனடா ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

புங்குடுதீவு மண் பூத்த மாவட்டசபை உறுப்பினர் அமரர் வே.க. சோமசுந்தரம் ஐயா அவர்கள் தமிழுக்கும் சமயத்திற்கும் என்று பெற்றெடுத்து தந்துள்ள பெருமகன் என் தம்பி "சச்சி".

நண்பர்களாலும் அன்பர்களாலும் உமக்கு மணிவிழா வரும் 2017 செப்டெம்பர் 23ல் எடுப்பதை அறிந்து மனம் மிகவும் ஆனந்தம் அடைகின்றது.

"உலகம் என்பது உயர்ந்தவன் மாட்டு" என்றும் பண்புடையார் பட்டுண்டு உலகு என்றும் கூறும் பண்டைத் தமிழ்ச் சான்றோர். மனிதன் தன் அகத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் பெறுவது பண்பு புறத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் வருவது பண்பாடு.

உள்ளத்தில் இறைவனை நிலை நிறுத்தி உதட்டினில் உண்மைகள் உரைத்து வந்து, உன்னத சேவைகள் புரிந்துவரும் இந்த உத்தமன் நூற்றாண்டுகள் கடந்து வாழ்ந்திடனும்! நீர் ஊர் ஊராய் ஆற்றிய சேவைகள் நான் சொல்லி விளக்கத் தேவையில்லை. மறுமலர்ச்சியை எம் மண்ணில் வளர்த்தவன் நீ ஐயா!

நீ குணசீலன் மேன்மை கொண்டவன் அரசியல் அறிந்தவன், மேடைப் பேச்சாளன், சமூக சேவையில் தனக்கென தனி இடம் பிடித்தவன், கலைஞன், கவிஞன், காவலன், இன்னிசை மன்னன், பண்ணிசை வேந்தன், அறிஞன், இலக்கிய சிந்தனை உள்ளவன். தீவகத்தின் பெருமை சொல்லும் உன் புகழ். எல்லாவற்றிலும் மேலாக மனிதப் பண்புடையவன் வள்ளலார் போல் சன்மார்க்க நெறியை கடைப்பிடிப்பவன். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார். நீரோ ஏழைகளின் கண்ணீர் துடைக்க வந்தவன். மக்கள் சேவையே மகேசன் சேவையெனும் உமது சேவையும் என்றும் பணி செய்து கிடப்பதே என் கடன் என்ற உமது பணியும் தமிழீழ மக்களுக்கும், கனடா வாழ் மக்களுக்கும் உமது சேவைகள் தொடரட்டும். உன் புகழ் ஓங்குக! என்று வாழ்த்துகிறேன்.

மணிவிழா காணும் நீர் பவளவிழா காண வேண்டுமென்று மண்டைதீவு மக்கள் சார்பிலும் என் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்
உமது அன்பான அண்ணா
A.S.**குமாரலிங்கம்**
மண்டைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தனமாய் மிளிரும் சச்சி அண்ணா..!



சத்தமாய்ப் பாடத் தெரிந்த உங்களுக்கு...
சத்தமாய் பேச மட்டும்–
சத்தியமாய்த் தெரியாது..!
சாந்தத்தின் மொத்த உருவம் உங்களது...!

எந்தச் சபையிலும் உங்கள் முகம்
எளிதாய் எவருக்கும் தெரியும்..!
ஏற்றத் தாழ்வு பாராது–
எட்டிய இடமெல்லாம் நிற்பவர் நீங்கள்..!

கருமை வெளியே தான்..
கள்ளமில்லா வெள்ளை மனம்–
கருணையுள்ள நல்ல மனம்–
கடவுள் தந்த பேறு உங்களுக்கு..!

அன்பைக் கொடுத்து அன்பை வாங்கி–
அது போல் மதிப்பைக் கொடுத்து –
அதை விட அதிகமாய் வாங்கி...
அழகாய் வாழ்பவர் நீங்கள்..!

இதை விட வேறென்ன–
இனியும் வேண்டும் என்று..
இன்பமுடன் எண்ண வைக்கும்..
இனிய வாழ்க்கை உங்களது...!



இன்னும் பல ஆண்டுகள் வாழவும்...
இதயம் நிறைவாக வாழவும் ...
இறைவனை வேண்டிக் கொண்டு..
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் அண்ணா..!

அன்புடன்,
**திருமதி. கோதை அமுதன்**
**குடும்பத்தவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " கனடா தமிழீழ தேசிய கலைஞன்."





அவனுக்கும் வயதில்லை...!
இவனுக்கும் வயதில்லை..! அவனெனும்
நாமம் கொண்ட, சோமசுந்தரனின் மகன்,
கச்சியப்பனுக்கும் வயதில்லை..!

தமிழீழ புங்குடுதீவு மண்ணில் பூத்த
சச்சியெனும் நாமம் கொண்ட
சோமசுந்தரத்தின் மகன்
சச்சிதானந்தனுக்கும் வயதில்லை..!

சங்கீதத்திற்கு நல்ல சாரீரம் (குரல்) வேண்டும்.
உயிருக்கு நல்ல சரீரம் (உடல்) வேண்டும்.
இரண்டுமே இறைவனின் கொடை இவனுக்கு..!

காற்றை கைது செய்துவிட்டு
கால்மணி நேரம் கூட உயிர்வாழ முடியாது..!
தமிழ் மொழியையும், மக்களையும் ஈழத்
தமிழ் தேசியத்தையும் தினம் தினம் நேசிப்பவன்...!

நீலவானத்தை அலட்சியப்படுத்தி விட்டு
நிலவு சிரிக்க முடியாது...? தென்றல் போகாத
இடமெல்லாம். தமிழர்களின் எந்த விழாவானாலும்..
அந்த விழாவில் சச்சியண்ணன் உலாவருவான்..!

மனித கற்பனையால் வகுத்த வருடங்களால்
அகவை அறுபதானாலும்..! சச்சியின் முகமென்றும்
இளமையே..! இளமையே..!! இந்த இளமையின்
மணிவிழா தினத்திலே நாம்தரும் கௌரவ பட்டமே..!

"கனடா தமிழீழ தேசிய கலைஞன்" எனும் பட்டம்.

மணிவிழா காணும் தமிழீழ தேசிய கலைஞன்
சோமசுந்தரம் சச்சிதானந்தன் அவர்கள் என்றென்றும்
தமிழ் கலையினை வளர்த்து இறைவனருள் பெற்று
பல்லாண்டு பல்லாண்டுகள் வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.

CENTRAL DRIVING SCHOOL. அதிபர் சுயகவி துரை குடும்பத்தினர்
E - Z DRIVING SCHOOL. அதிபர் சபாரத்தினம் குடும்பத்தினர்.

23-09-2017. கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசம் பகிர்கின்றேன்.



பூவரசுகளும் நாவரசுகளும்
பூத்துக்குலுங்கும் புனிதமான
புங்குடுதீவு மண்ணிலே.....

ஊர்ப்பெருமை காக்கும்
உன்னதமானவர்கள் பட்டியலில்...
எனக்கு நினைவு தெரிந்த
நாள்தொட்டு, இன்றுவரை...

சிறப்புச் சிம்மாசனம் போட்டு
கௌரவமாய் அமர்ந்திருக்கும்
என் அன்பு அண்ணனுக்கு...
மணிவிழா அகவை வாழ்த்துக்கள்...!!!!

சின்னச் சின்ன சபைகளையும்
சிறப்புச் சபையாக்கும் திறன்
முன்ன பின்ன தெரியாதோரையும்
அகமகிழ்ந்து அணைக்கும் பண்பு

சமூக சேவகனாய் உங்களை உலகறியும்
சத்தியம் தவறாதவனாய் நாமறிவோம்
அமெரிக்க அதிபர் தொட்டு
குக்கிராமத்து கூலிக்காரன் வரை
எப்படித்தான் அறிந்து வைத்துள்ளீர்கள் ?
அது எப்போதுமே எனக்கு வியப்பு....

அண்ணா,
எங்கள் ஊரவர்களுக்கு
நீங்கள் உறவுக்காரன்
வேறு ஊர்க்காரர்களுக்கு
நீங்கள் தான் அண்ணா "புங்குடுதீவே"


ஆளுமைகளை வாழ்த்த
வயது ஒரு தடையில்லையண்ணா....
என் அகம் நிறைந்த அன்பும், பாசமும் கொண்டு
பெருமிதத்துடன் வாழ்த்தி வணங்குகின்றேன்.....
வாழிய நீங்கள் பல்லாண்டுகள்..

நேசத்துடன், அன்புத்தம்பி,
**ஐங்கரன் கதிர்காமநாதன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்துச் சிரித்துச் சிறைபிடிக்கும் சிங்காரக் குரலோன்
# சோம சச்சிதானந்தன் அவர்கள்



மனிதன் பிறக்கின்றான் வாழ்கின்றான் மண்ணுக்குள் மறைந்து போகின்றான். இது உலகியல் நியதி. நாம் பிறந்தோம், வாழ்ந்தோம் என்று இல்லாமல் நாம் வாழும் சமுதாயத்திற்கு என்ன செய்தோம் என்று தன்னைத்தானே கேட்கும் மனப்பக்குவம் நம்மில் எத்தனை பேருக்கு உண்டு. கிரேக்க ஞானி சோக்கிறட்டீஸ் "உன்னையே நீ அறிவாய்" என்றான். ஆம் உன்னைப் பற்றி அறிந்து கொள் அதன் பின் நீ உலகையே அறிந்தவன் ஆவாய் என உணர்த்தினார்.
நண்பர் சோம சச்சிதானந்தம் அவர்களும் தனக்கென ஒரு நண்பர் கூட்டத்தையும் தனக்கென ஒரு கொள்கையையும் கொண்டு வாழ்ந்து வரும் பண்புமிக்க சமூகத் தொண்டனாக அவரைப் பார்க்கின்றேன். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதனை மனதிருத்திச் செயற்படும் ஒரு நல்ல மனித நேயன் அவர்.

சோம சச்சிதானந்தம் சிறியவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை அன்பு பாராட்டி உரிமை கொண்டாடத்தக்கவராக அன்புள்ளம் கொண்ட, எந்த இடத்திலும் பெருமை பாராட்டாத ஒரு நல்ல நண்பர். உணர்ச்சிகளுக்கு அடிமையாகாத எதனையும் இன்முகத்தோடு வரவேற்று ஏற்றுக் கொள்ளும் பெரும் இதயம் கொண்டவர். தமிழ் அரசுக்கட்சியோடு தன்னை இணைத்துக்கொண்டு தான் வாழ்ந்த மண்ணுக்காகப் பாடுபட்டு உழைத்தவர் சச்சி அவர்களின் தந்தை சோமசுந்தரம் அவர்கள். ஊரில் உள்ள பொதுவிடயங்களில் அவரின் பங்களிப்பில்லாமல் இருந்ததில்லை என்பதனை நான் நன்கு அறிவேன். அவ்விதமே சச்சிதானந்தம் அவர்களும் ரொறன்ரோவில் நடக்கும் அத்தனை சமூக நிகழ்ச்சிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் பண்பு கொண்டவர்.

திருமண நிகழ்வாக இருக்கட்டும், ஒருவரின் வாழ்வின் அந்திம நிகழ்வாக இருக்கட்டும், பூப்புனித நீராட்டு விழாவாக இருக்கட்டும் மற்றும் பொது நிகழ்வுகளாக இருக்கட்டும் அத்தனை நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளும் தன்மை அவருக்கு நிகர் அவரே தான் என்று கூறும் அளவிற்கு ரொறன்ரோவின் எந்தத் தொங்கலில் நடந்தாலும் அங்கு ஏதோ ஒரு வழியில் வந்து சேரும் மன வைராக்கியம் அவரிடம் குடிகொண்டுள்ளதைக் கண்டு நான் வியந்ததுண்டு. தனக்கென ஒரு வாகனம் இல்லாமல் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தி செல்வது என்பது எத்தகைய சிரமத்திற்குரியது என்பது அனைவரும் அறிந்ததே. இருப்பினும் அழைக்கப்பட்ட ஒரு நிகழ்வுக்கோ அன்றி அழைக்கபடாமலோ சென்று தன்னாலான உதவிகளைச் செய்து கொடுக்கும் மனிதப் பண்பினை அவரிடம் காணலாம்.

நண்பர்கள், முதியவர்கள், உறவினர்களின் பிறப்பு, திருமண விழாக்களில் அவரால் வாசித்து அல்லது பாடி மரணச்சடங்குகளில் அவரது கம்பீரமான குரலில் இசைக்கப்படும் தேவார பாராயணமாக இருந்தாலும், வாழ்த்துப் பாக்களாக இருந்தாலும், அறிவித்தல்களாக இருந்தாலும் அனைவரையும் கவர்ந்திழுக்கக்கூடிய வசீகரத்தை அவர் கொண்டிருப்பது அவருக்கு இறைவனால் அருளப்பட்ட வரம் என்றே கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகவீனமுற்று மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தமிழ் முதியவர்களுக்கு தானே தேடிச் சென்று ஆறுதல் கூறி அவர்களை ஆற்றுப்படுத்துவதோடு, அவர்கள் இறைவனை நாடித் தொழத்தக்கதாக தேவார திருமுறைகளை அவர்கள் செவியில் கிட்டத்தக்கதாக பாடி செய்யும் கைங்கரியம் யாராலும் செய்யமுடியாத ஒன்று. அதற்காகத் தன்னை, தனது நேரத்தை அர்ப்பணித்து வைத்தியசாலைகளுக்கு ஏறி இறங்குவதோடு, வீடுகள், முதியோர் இல்லங்களுக்கெல்லாம் அவர் சென்று வருவது உண்மையிலேயே அவர் மீது மிகுந்த பற்றையும் மதிப்பையும் ஏற்படுத்துகின்றது. என்னால் செய்யக்கூடியதை நான் செய்கின்றேன், பணம் பொருள் மட்டுந்தான் இவற்றிற்குத் தேவை அன்றல்ல மனம் இருந்தால் போதும் என்ற பொன்னான மனம் கொண்டவர் நண்பர் சோம சச்சிதானந்தம் அவர்கள்.

இத்தகைய உயரிய பண்புகளுக்கு சொந்தக்காரரான அவருக்கு மணிவிழா எடுக்கப்படுவதனை நான் யாழ்ப்பாணத்தில் இருந்தவேளை அறிந்து இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தேன். நான் வந்து சேரும் முன்னரே விழா நடந்து முடிந்துவிடுமோ என ஐயுற்றேன். ஆனால் அவரின் பிறந்தநாள் செப்ரம்பர் 22 என்பதனை நினைவுகூர்ந்து மனமகிழ்ந்தேன்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

என்றார் வள்ளுவப் பெருந்தகை. ஆம் அன்போடு இயைந்த நல்ல குடும்பம் சச்சி விதானையாரின் குடும்பம் என்பதனை நான் அறிவேன். அன்பு மாமியாருக்கு அனைவரும் வியக்கும் வண்ணம் பிறந்த தினத்தைக் கொண்டாடி அவரை வாழும்போதே மகிழ வைத்தவர் அவர். விழாக்கள் என்றால் அவருக்கு இருப்புக் கொள்ளாது. அனைவரையும் வாழும்போது வாழ்த்தி மனம் மகிழ வைக்கவேண்டும் என்பது அவரது பேரவா. அதற்காக அவர் நண்பர்ளை நாடி செய்யும் இத்தகைய சேவைகள் அவரை மனிதருள் மாணிக்கமாக, மற்றவர்களால் மதிக்கப்படும் மனமணி விளக்காக அவர் பழகும் ஒவ்வொருவரது உள்ளத்திலும் ஒளிர்கின்றார்.

உற்றார் உறவினர் நண்பர்கள் மட்டுமன்றி அனைத்துத் தமிழர்களின் மீதும் அன்பு பாராட்டிச் சகோதரத்துவத்தை வளர்த்துக்கொண்டு ஒரு பொது மகனாகத் தன்னை வரித்துக்கொண்டு வாழ்ந்து வருபவர் சச்சி என்றால் மிகையாகாது.

அமைதியும் அடக்கமும் அமரருள் உய்த்துவிடும் என்பார்கள். அமைதியும், சாந்தமும் கொண்ட நண்பர் சோம சச்சிதானந்தம் இன்று போல் என்றும் இன்பமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
**த.சிவபாலு குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபதைத் தொட்ட சோம சச்சிதானந்தன்



பண்பினிலே சிறந்த நல்ல
பாரினிலே போற்றும் வல்ல
எண்ணத்தில் சிறந்த வீர
சோம சட்சிதானந்தன்

பண்ணிலே சிறந்த பாடல்
பாடியே மயக்கும் தோழன்
அன்பினால் முதியோர் சேவை
ஆற்றியே மகிழ்ந்த தீரன்

கண்ணிலே பட்ட இடத்தில்
களிப்புடன் சிரித்து மகிழும்
அன்பிலே சிறந்த நண்பர்
ஆற்றலில் திளைத்த அன்பர்

அறுபதை தொட்ட நண்பர்
சோம சட்சிதானந்தன்
அத்தனை பேறும் பெற்று
ஆண்டாண்டு வாழ்க வாழ்க!



முனைவர் உதயகரன் துரைராஜா
றயர்சன் பல்கலைக் கழக விரிவுரையாளர்

**Dr. Uthayakaren Thurairajah, PhD, RSE, LC, PEng.**
**Lecturer, Ryerson University, Toronto**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லாண்டு வாழ்க வளமுடன்

பொருளாதார சமூக பண்பாட்டு விழுமியங்களில் புகழ்பெற்று விளங்கும் புங்குடுதீவு கிராமத்தில் புகழ்பூத்த சமூக அரசியல் பாரம்பரியத்தில் உதித்த அமரர் வே.க. சோமசுந்தரம் அவர்களை அறியாதார் எவருமிலர். தமிழர்களுக்கு அதிகார பரவலாக்கல் என மாவட்ட அபிவிருத்திச்சபை என்ற மாயைக் காட்டிய வேளை எவ்வித அதிகாரமற்ற சபையே அதுவென புறக்கணித்த தமிழ்த் தலைவர்களில் இவரும் ஒருவர். இத்தகைய தமிழ் தலைவரின் மகனான உயர்திரு. சோம சச்சிதானந்தன் அவர்களுக்கு அவர் தடம் பதித்து வந்த சிறப்பான சேவைகளை நினைவுகூரும் முகமாக எடுக்கவிருக்கும் மணிவிழா சிறப்புற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்கலைக்கழக சமூகத்தில் பேராசிரியர்களான சோ. செல்வநாயகம், வி. சிவசாமி, கா. குகபாலன், ந. பேரின்பநாதன் போன்றோரின் நட்பின் பயனாக புங்குடுதீவுக் கிராமத்தினைப் பற்றி அறியும் வாய்ப்புக் கிட்டியது. அத்துடன் இக்கிராமத்தில் என்னுடன் நெருங்கிப் பழகிய பல இலக்கிய கர்த்தாக்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், மேடைப் பேச்சாளர்கள், இசைமேதைகள், வர்த்தகர்கள் என பலரின் நட்பு எனக்கிருந்து வருகின்றது. அந்த வகையில் அரச நிர்வாகியாக இருந்து நாட்டுச் சூழ்நிலை காரணமாக கனடாவிற்கு புலம்பெயர்ந்து தனக்கு இயற்கையிலேயே இருந்த பல் திறமைகளினால் சமூகத்தில் சிறப்பிடம் பெற்றவர்கள் வரிசையில் தம்பி சோம சச்சிதானந்தன் அவர்களும் ஒருவராக திகழ்கிறார். இவர் ஆன்மீக வாதியாகவும், கவிஞராகவும், இசைக்கலைஞராகவும், தொகுப்பாளராகவும், சமூக சேவகராகவும், நோயுற்றவர்களையும் நலிவுற்றவர்களையும் ஆற்றுப்படுத்துபவராகவும், சிறந்த பேச்சாளராகவும் விளங்குகின்றார்.

திரு. சோம சச்சிதானந்தனின் "பாக்கியநாதம்" என்ற இறுவட்டினை தரிசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. அது மிகச்சிறந்த ஆளுமைப் படைப்பாகும். அவர் மேலும் பல ஆன்மீகப் பாடல்களை எமது புலம்பெயர் உறவுகளுக்கும், தாயக உறவுகளுக்கும் வழங்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகின்றேன்.


சோம சச்சிதானந்தன் அவர்களின் சேவை மேலும் மேலும் மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்ற பேரவாவினால் அன்னாருக்கு மணிவிழா எடுத்துக் கௌரவிக்க வேண்டுமென்ற மணிவிழா சபையினரின் முயற்சி வெற்றியளிக்க வேண்டுமெனவும் மணிவிழா நாயகனும் அவரது குடும்ப உறவுகளும் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து சமூகப்பணியாற்ற எல்லாம் வல்ல நல்லூர் முருகனை வேண்டுகின்றேன்.

பேராசிரியர்
**சி. சிவலிங்கராசா**
முன்னாள் தமிழ்துறைத் தலைவர்
யாழ். பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கீத சாகரம் என்ற வாழ்த்துப் பெற்ற செந்தமிழ்ப் பண்ணிசை மைந்தன் சோம சச்சிதானந்தன் அவர்களது அறுபதாவது அகவை மணிவிழாவில் பாடி மகிழ்ந்தளிக்கப்பட்ட வாழ்த்துப் பாமடல்



தீவகஞ் செறிந்த அன்புத்
தீந்தமிழ் நிறைந்த நெஞ்சம்
பாவகம் இசையிற் கூட்டும்
பண்ணிசை அமுதம் பொங்கும்
காவகம் பொன்கை மண்ணின்
கலைகளில் நாதஞ் செய்யும்
தேவனாம் சோம சச்சி
தானந்தத் தூயோன் அம்மா!

சங்கீத சாக ரம்என்
சச்சிதா னந்தப் பட்டம்
மங்காமற் புனிதம் பெற்றோன்
மாதவம் அறுப தாகுஞ்
சங்காக முழங்கும் இற்றைச்
சரித்திரம் உடைய நாவில்
தெங்காக வளரும் தென்றற்
கீற்றாக மலர்வோன் வாழ்க!

பாமழை தேவா ரங்கள்
பண்ணிடும் இசையோன்! மண்ணின்
கோமகன் விவசா யத்துக்
குலத்தினான்! விதானை ஆகப்
பூமகன் பாடம் பள்ளிப்
போதனாம்! படிப்பித் தோனாய்ச்
சோமசச் சிதானந் தம்ஆர்
சுந்தரன் பணிசெய் தானே!

சாய்மனம் வைத்தி யத்துச்
சார்ந்துமே இருப்போர் தம்மின்
நோய்மனம் ஆறு தற்காய்
தோத்திரப் பாடல் நெய்வான்!
வாய்மையாற் தமிழின் கட்சி
வரலாற்றை உடைய தந்தை
சோமரின் பிள்ளை யாகிச்
செந்தமிழ்க் கட்சி மீட்பான்!

தீவகம், தமிழின் சார்புத்
துருவிடும் நிகழ்ச்சி என்றால்
ஆவலில் உதிப்பான் ஆங்கே
அண்ணலாய்ச் சேவை செய்வான்!
தேவறை போகும் ஆவித்
தூயரைப் போற்றி நிற்போன்
நாவலன், அறுப தாகும்
நம்பனே வாழ்க! வாழ்க!

**கவிஞர் தீவகம் இராசலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமசச்சி என்னும் கானக்குரலோன் ஒரு சிறந்த சமூக சேவையாளர்

சப்ததீவுகளில் ஒன்றான புங்குடுதீவைத் தாயகமாகக் கொண்ட "சோமசச்சி" ஒரு சிறந்த சமூக சேவையாளர். அவர் புங்குடுதீவிலே ஒரு சிறந்த சமூக சேவையாளராகவும் கிராம சேவையாளராகவும் பணியாற்றியவர். அங்குள்ள இளைஞர்களை ஒன்று சேர்த்து ஒரு இளைஞர் சமூக அமைப்பை உருவாக்கி அங்குள்ள மக்களுக்குப் பல வழிகளிலும் சிறந்த சேவைகளை ஆற்றியவர்.

கனடா வந்தபின்னர் தன் தாயகமான புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தை ஆரம்பித்து அதன் மூலம் கனடாவிலுள்ள தனது ஊரவர்கள், வர்த்தகர்களின் ஆதரவையும் பெற்றுத் தனது பிறந்த ஊரான புங்குடு தீவிலுள்ள பாடசாலைகளுக்கும், வைத்திய சாலைகளுக்கும் அளப்பரிய பல சேவைகளையாற்றியுள்ளார். இவர் கனடாவில் "சைவத்தமிழ் ஆன்மீக ஆதரவுச் சேவை" என்ற அமைப்பில் இணைந்து அதன் மூலம் சைவத்தையும், தமிழையும், ஆன்மீகத்தையும் மக்கள் மத்தியில் வளர்ப்பதிலும் சிறந்த சேவையாற்றி வருகிறார்.

இவர் கனடா வாழ் சகல மக்கள் மத்தியிலும் தனது சேவைகளால் நல்ல மதிப்பைப் பெற்றுள்ளார். பெரும் பாலும் கனடா வாழ் தமிழ் மக்களின் மகிழ்ச்சியான நிகழ்வுகளாயினும் அல்லது துக்ககரமான நிகழ்ச்சி களாயினும் அங்கெல்லாம் இவரின் பிரசன்னத்தைக் காணலாம். அங்கெல்லாம் இவரின் தேவார திருவாசகங் களையும் இனிய பாடல்களையும் கேட்க முடிவதோடு சிறப்பான வழிநடத்தல்களையும் காணலாம். இவரின் இனிமையான குரலும், தேவார, திருவாசகங்களிலுள்ள அறிவும், இராகமும் மக்களை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது. இவரால் இசையமைத்துப் பாடப் பெற்ற தேவார திருவாசகங்களைக் கொண்ட CD ஒன்றும் இவரால் வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி தனது உதவி தேவைப்படுவோருக்கு விரைந்து சென்று உதவும் பண்பும் இவரிடம் நிறையவே காணப்படுகிறது
இவரின் மணி விழாவையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, இவர் தன்குடும்பத்தோடு சீரும் சிறப்புமாக நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது குடும்பத்தின் சார்பில் வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி. எஸ். சிவநாயகமூர்த்தி**
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளமான வாழ்வு, நலமோடு வாழ வாழ்த்துகிறேன்



சொல்லின் செல்வன்! இவன்
சோமசச்சிதானந் தம்!
பொங்கி யெழும் கடல் போன்ற ஓசை
பூரித்து மலர்ந்த மலர்போன்ற முகம்

நெஞ்சில் பயமில்லா நேர்மை! நிமிர்வு
கொஞ்சிப் பேசி கொஞ்சிக் கதைத்து — எதையும்
சாதித்துக் காட்டும் வல்லமை
பிஞ்சிலேயே நாட்டுப் பற்றாளர்களின் உறவு
பேச்சுத்திறனும் பேராற்றலும் கொண்ட
அன்னையின் வளர்ப்பு!

கதர் வேட்டி அணிந்த காந்தியவாதியான தந்தை
கருத்தோடு படிக்க வைத்து ஊட்டிய அறிவும்
செம்மையான வளர்ப்பும், செல்வச் செழிப்பும்
வளமான மனதை புடம் போட்டு வளர்க்க!
உருவான, உத்தச் செல்வன்

அன்னைக்கு அருமை மகனாய்
அருமைத் தம்பியாய், அண்ணனாய்
நற்றுணையாய், நல்ல தந்தையாய்
உற்ற நண்பர்க்கு உறுதுணையாய்
இருந்து சேவை புரிந்தாலும்
தமிழ்த் தாய் பெற்ற தவப்புதல்வனாய்
தரணியில் வாழ்ந்தகாலம் பெரிதெனக் கூறலாம்,

கலைஞனாய், கவிஞனாய், பாடகனாய்
காலம் கவர்ந்தவரை வழியனுப்பும் தொண்டனாய்
வயது முதிந்தவர்க்கு ஆறுதல் கூறும்
பல வேடம் தரிக்கும் பண்பாளனே!
அரும்புதல்வனாய்,

தொடரும் சேவைகள் தொடர
தொண்கெள் பலவும் ஆற்றும் இன்னவன்
எம்மவன்! புங்கைமகள் பெற்ற அன்புமகன்
அகவை அறுபது கண்டு
பவளவிழாக் காணும் இவ்வேளை!

உற்றார் உறவுகள் கூடி நிற்க
நண்பர்க்ளட வாழ்த்துரைக்க
நலம் பல பெற்று நல்வாழ்வு வாழ்க!
நூறாண்டு காலம் நோய்பிணியின்றி
அன்னை மாரியம்மன் அருள் பெற்று
அவனி போற்ற வாழ்க! வாழ்க! என
வாழ்த்துகிறோம் இவ்வேளை.

வாழ்க வளமுடன்

**அன்புச் சகோதரன், சகோதரி**
**பன்னீர்செல்வம் பூங்கோதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபது காணும் சமூகசேவையாளனே வாழ்க பல்லாண்டு...

அன்பு, பாசம், பண்பு, இரக்கம், அமைதி யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ஓர் உன்னத மனிதரே திரு. சோமசுந்தரம் சச்சிதானந்தன் அவர்கள். அன்னாரின் அகவை அறுபது காணும் மணிவிழா மலரிற்கு இவ்வாழ்த்துச் செய்தியை தருவதில் அகமகிழ்கின்றேன். இவர் ஆரம்பக் கல்வியை புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயத்திலும், உயர்கல்வியை புங்குடுதீவு மகா வித்தியாலயத்திலும் கற்றுத் தேர்ந்தவர்.

கல்விப் பருவத்திலேயே சமூகத்தின்பால் ஈர்ப்புக் கொண்டு புங்குடுதீவு மேற்குப் பகுதியில் கலைமகள் மன்றம், சண் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் போன்றவற்றினை உருவாக்கி இப்பகுதி இளைஞர்களை இதனுள் உள்வாங்கி கிராம வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர்.

இவற்றினூடாக வருடாவருடம் சிவராத்திரிவிழா, சித்திரை புதுவருட விளையாட்டு விழா போன்றவற்றை சிறப்பாக நடாத்தி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியர்.

புங்குடுதீவு சர்வோதய அமைப்பின் தொண்டனாகவும், இளைஞர் கழகம், பெருங்காடு சனசமூக நிலையம், பெருங்காடு கிராம முன்னேற்றச்சங்கம் போன்றவற்றில் முக்கிய உறுப்பினராகவும், புங்குடுதீவு – நயினாதீவு ப.நோ.கூ.சங்க நெறியாளராகவும், கிராமோதயசபை செயலாளராகவும் இருந்து சிறப்பாகச் செயற்பட்டவர்.

1982 காலப்பகுதியில் விசேடசேவை உத்தியோகத்தவராக (SSO) புங்குடுதீவு கிழக்கு, மத்தி ஆகிய பகுதிகளில் கடமையாற்றி மண்ணிற்காக உழைத்தவர். இப்பதவியைத் தொடர்ந்து 1987 காலப்பகுதியில் கிராம சேவையாளராக நியமனம் பெற்ற இவர் தொடர்ந்து இடப்பெயர்வு வரை இப்பகுதிகளில் ஓர் சிறந்த கிராம சேவையாளராக கடமையாற்றியதன் மூலம் மக்களின் மனங்களில் இடம் பிடித்தவர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இம்மனிதநேயன் புலத்தில் மட்டுமன்றி புலம்பெயர்ந்த கனடிய மண்ணிலும் எம் சமூகம் தாங்கிய நற்பணிகளில் முன்னின்று செயற்படுபவர். கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் ஆரம்ப காலத்திலிருந்து தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர் என பல்வேறு பதவிகளினூடாக இன்றுவரை சங்கத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருபவர்.

மேலும் கனடா இந்து மாமன்றம், கனடா ஐயப்பன் ஆலய நிர்வாகசபை, கனடா தமிழீழச்சங்கம், உலக சைவநெறிப் பேரவை என பல அமைப்புக்களில் உறுப்பினராக இருந்து சமூக வளர்ச்சிக்காக உழைப்பவர். தற்போது முதியோர் நீண்டகால பராமரிப்பு நிலையங்கள், அரச வைத்தியசாலைகள் ஆகியவற்றில் தங்கியுள்ள தமிழ்சமூகத்திற்கு ஆன்மீக ஆதரவுச் சேவையினையும் வழங்கி வருகின்றார்.

இத்தகைய சமூக சேவையாளனுக்கு இன்று மணிவிழா காண்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, இம்முயற்சிக்கு முன்னின்று உழைத்த விழாக் குழுவினருக்கும், அவர்தம் துணைவியார், பிள்ளைகளிற்கும் பாராட்டுக்கள் உரித்தாகுக.

**நல்லையா தர்மபாலன்**
முன்னாள் அதிபர், புங்குடுதீவு மகாவித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிய சகோதரன் சோம சச்சிதானந்தன்
## பல்லாண்டு, சொல்லாண்டு,
## பல நூற்றாண்டு வாழ்க!

நேசத்தின் பிறப்பிடமாய்
தேசத்தின் உயிர்ப்பிடமாய்
பாசத்தின் முதலிடமாய்
பார்போற்றும் நாள் வாழ்க.

ஒளி தந்து விழாமேடை உரையாற்றும்
ஒலி வாங்கி அதைவாங்கி மொழி பெயர்க்கும்
இயற்கைவளம் இசைத்தட்டாகி
கைதட்டும்,
மொழிவழி பிறந்த கலைஞன்
இவனென்னறே

பெற்றவர் உற்றவர்
கற்றவர், நட்புள்ளவர்
கவிபாடி மகிழ்ந்து நிற்க
ஒரு விழா இங்கு திருவிழா காணும்
ஒரு உலா இங்கு
பௌர்ணமி காணும்.

ஞாயிறு தந்த ஒளிச்சிறப்பும்
திங்கள் கண்ட சொல்வளமும்
செவ்வாய் மொழியும் தேன்தமிழும்
புதனாய் மாறும் எழுது கோலும்
வியாழன் என்ற குருவாழ்த்தும்
வெள்ளி சுமந்த பெருஞ்சிறப்பும்
கைபிடித்தே உங்களுடன் நடந்துவர
என் அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

வாழ்க பல்லாண்டு
வளர்க சொல்லாண்டு
நிறைக பல நூறாண்டு.

அன்புடன்
**யாழ்தமிழ்மகள் மணிமேகலை கைலைவாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சி அண்ணா வாழ்க நீ பல்லாண்டு!!

தேமதுரக் குரலுக்கோர் சொந்தக்காரன்,
செந்தமிழின் பற்றுக்கோ அன்புக்காரன்,
ஊரவர்கள் குறைகளுக்கு உறவுக்காரன்,
உண்மை அன்பு கொண்ட பாசக்காரன் ,

யாரிவன் என்றால் சோமசுந்தரம் பெற்றெடுத்த சுந்தரத் திலகமிது !

சேவைகள் செய்வதை நோக்கமாய்க் கொண்டவன்,
செந்தமிழ் மொழியிலே பற்றதை வைத்தவன்,
ஊரவர் நலன்களை உள்ளத்தில் கொண்டவன்,
உண்மை மனத்தோடு உறவை அழைப்பவன்,

யாரிவன் என்றால் சோமசுந்தரம் பெற்றெடுத்த சுந்தரத் திலகமிது !

அறுபது வயதில் மணிவிழா காண்பவன்,
ஆலயம் ஆன்மீகம் சேவைகள் செய்பவன்,
உறுதியாய் எம் ஊர்ச் சங்கம் வளர்ப்பவன்,
உற்ற கணவனாய் –தந்தையாய் குடும்பத்தை காப்பவன்,

யாரிவன் என்றால் சோமசுந்தரம் பெற்றெடுத்த சுந்தரத் திலகமிது !

ஊரிலே....
சமுக சேவை, சர்வோதய இயக்கம், இளைஞர் கழகம்
இந்துமா மன்றம், விளையாட்டுக் கழகம், விருந்துபசாரம்
சிரமதானம், சித்திரைப் புதுவிழா எதிலும் காணலாம் எங்களின் அண்ணனை

யாரிவன் என்றால் சோமசுந்தரம் பெற்றெடுத்த சுந்தரத் திலகமிது !


சச்சி அண்ணா வாழ்க நீ பல்லாண்டு! வளர்க உன் சேவை இன்னும் பல ஆண்டு!!

அன்புத்தம்பி
**Dr. Sivasamy Premjeyanth**
Ottawa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுகப்பிரவேச விழா!



பஞ்சாங்க கணிதம் பார்த்தேன்
அறுபது என்பது ஒரு யுகம் என்கிறது
அதன்வழி பார்த்தால் இது என் தோழனின்
புதுயுகப் பிரவேச விழா!
மணிவிழா!
மாண்புறு மனிதத்தின் புனிதன் இவனென்று
சான்றோர் போற்றும் நற்சான்றுடையான்
தேன்அடைபோல் உடற்கலங்கள் யாவிலும்
முத்தமிழ்க் கலைத்தேன் துளிகள் நிறைந்த
சகலகலா வித்தகக் கலைஞானி சோமசச்சி
இவன் பிறந்தநாள் ஒன்றே வருடத்தில்
மிகச் சிறந்தநாள் என்று வரலாறும் வாழ்த்துதுமே!

60பதை 20பது என்றால் எனக்கு
எண்கணிதக் கோளாறு என்பீர்கள்!
20பதின் இளமை குன்றா இவனைப் பார்த்து
60பது என்பது கண்கணிதக் கோளாறு அல்லவா!
முன்தோன்றி மூத்த தமிழ் இளமை அதிசயம்போல்
60பதிலும் 20பதாய் வாழும் அற்புதனே சோம சச்சி
உனது உடலெடை அளவில் அதிகம்
தமிழ்க்கலை அளபெடை என்றே அறிவோம்!
அழகிய தமிழ் மகனைக் காட்டுங்கள் என்றால்
சட்டென்று என் சுட்டுவிரல் உன்னையே காட்டும்!
பகவதர் சிகை அழகும் பால்வடியும்
சிறு மழலைபோல் முகத்தில் எப்போதும்
மலர்ந்தும் மலராத குறு நகையும்
முத்தமிழ் இனங்கள் மூன்றும் கலவா
சொற்பதம் ஏதும் இல்லை தமிழ்மொழியில்
நீ மட்டும் மெல்லினத்தில் சொல்செதுக்கி பேசுகிறாய்
உனது மொழி இனிமைதனைக் கேட்டால்
சொல் இலக்கணம் செய்த தொல்காப்பியரும்
வியப்பார்!

மண்ணுலகத்தினில் பிறவி மாசற
மீண்டும் பிறவா சொர்க்கம் வேண்டும் என்று
பரமனைப் பணிந்த மணிவாசகரும் இன்றிருந்தால்...
ஓர்நாளேனும் வீழ்நாள் நன்றி மண்ணில்
ஒவ்வொரு நாளிலும் வாழ்வாங்கு வாழ்ந்த
சோமசச்சிபோல் பிறவிப் பேறு பெற்றால்
மீண்டும் மீண்டும் பிறப்பதே சொர்க்கம் என்று
தன் திருவாசகத்தை திருத்தி எழுதியிருப்பார்!
பண்ணிசைக் குயிலே! முத்தமிழ் கலைப் புயலே!
உனது மணிவிழாப் பெருமை பாடுவது
என்தமிழ் பெற்ற பாக்கியம் என்பேன்!
தமிழ்போல் நீயும் தலைமுறை பல கடந்து
புகழொடு வாழ்க! வாழ்க! என
வாழ்த்துகிறேன்! வாழ்க!

**அன்பன் கலாராஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Somasundaram Satchithanantham is a Full Moon



Somasundaram Satchithananthamwho is well- known among the Tamil community as Kavinjar, Musician and Spritual Support Worker is an asset to Tamil community in the Diaspora. He is an ambassador of Tamil tradition and good-will for the Tamil diaspora. He is better known as Satchi among the mainstream and close relatives and friends. We, the Tamil Canadians consider him a man with wisdom and we graciously call him "Satchi Anna", giving great respect. Satchi serves as a spiritual leader in the Canadian Hospitals and Nursing Homes where Tamil vulnerables and elders are. He is kind and compassionate.
He gives hopes to people who are suffering and people who have no loved ones around. As a leader just like the Canadian 1st nation people respecting their elders, he gives great respect for Seniors.

Satchi is one of the Primary guests especially at cultural, literary and social functions. He is there in most of the times at such functions and on stages. Satchi's talent in music is coupled with his creative production of poems. He gives public speeches to guide the diasporic Tamil parents to help the children to be Tamils in the context of multi-cultural and diverse Ethnic population to keep their own Tamil identity intact. He is a talented master of ceremonies.

Kavi Satchi hails from Pungudutivu. He was a chief not only for his family but also to the entire island of Pungudutivu then and to Diasporic Tamils now. He has been a lucky person to go to Providence Centre under the guidance of Professor Chandrakanthan to get his Diploma certificate in Spritual Leadership at his age. After completing his diploma, he took to teaching and healing a career he continued very successfully. He became a great drama actor too. He promoted Saivite healing practices like what Kavinayakar does.

.

He has authored Poetry books and produced D.V.D.
Satchi is an industrious man like ants. He is known as a guardian of Saivaism. He organized and participated in many Thirumurai Conferences. He continue tossing in auspicious ceremonies and he is a god eulogy singer. He always look young in his appearance as well as in his heart. He does not have any vehicle, so he walks miles or takes public transit to attend meetings. This may be the underlying fact about his youthful voice, appearance and sprit.
He has travelled to many countries on lecture tour and Tamil poetry mission. He has been honored by his literary friends and cultural associations in Canada, England, Germany and Switzerland with presentation of awards and honorary titles for his outstanding contributions to Tamil language and Literature. He has been a Tamil cultural ambassador. He is a leader and a centripetal force to the young Tamil poets' association. He has an open mind . He is a man of high integrity and has a multitude of admirers and listeners.
He is also a responsible family man, being a loving husband and a wonderful father and a companion to his grand-children. He loves Tamil most and disseminates the glory of classical Tamil through his singing.
He is an "Anantham", a joy! He has a face like a blossomed Sunflower that is attracted by the humanity. I am glad to announce that Pungudutivu Association of Canada is honoring him with a Mani Vizha giving A Life Time Achievement Award today!

**Parvathy Kanthasamy , Ph.D**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்கை நகர் தந்த புதுமையாய், எப்போதும் தப்பாத எழில் புன்னகையோடு, எல்லோர்க்கும் நல்ல நண்பனாய், எம் மண்ணின் விடியலிற்கும் மனிதத்தின் நட்பிற்கும் என்றும் உழைத்து, எல்லோர்க்கும் ஓர் உதாரணமாய் விளங்கும் மதிப்பிற்குரிய நண்பர் சோம சச்சிதானந்தம் அவர்களின் பவளவிழா சிறக்க என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

## புங்கை நகர் தந்த புதுமை!!

தீவகம் தந்த செல்வம் தீந்தரும் கனியின் சாறு
பாவலன் பல இராகத்தால் பாரினைக் கவர்ந்த நண்பன்
நாவலன் நல் இசையால் நற் தமிழ் வளர்க்கும் ஆசான்
வல்லவர் சோம சச்சி வாழ்க நூறாண்டு காலம்!!

ஓயாத நயாகரா போல் ஓடி உழைப்பவர் தமிழ் வளர்க்க
வாடாத மலரைப்போல வாய்த்த நற் சிந்தையாளர்.
தேடாத மனிதரில்லை தேசமே இவரின் சொந்தம்
மாளாத மாண்பு கொண்ட மனித நேயனே நீடு வாழ்க!!

சுற்றும் கடல் சூழ்ந்த புங்கை நகர்தன்னுள்
அக்கினிக்குஞ்சாய் அவதரித்த அண்ணலே!!
தமிழர் ஐக்கியத்தின் அவசியத்தை, அன்பைப்பண்பை
அருந்தமிழின் ஆற்றலினை, அறிவின் மாண்பை
ஒப்புரவை, உண்மைதனை என்றும் போற்றும்
இனியவர்தான் சச்சி விதானையார் என்று எவரும் சொல்வர்!!
எப்போது வந்து எவர் அழைத்த போதினிலும்
தப்பாது உதவுகின்ற தனிச்சிறப்பு உந்தனுக்கு!
விண்ணாதி விண்ணர்களை வியப்போடு பார்க்க வைத்த
கனிந்த குரல் வளமே!! பாட்டுக்கு நாயகனே!!
கலைத்திறனால் கவித்திறனால், நட்புள்ளத்தால்
எல்லார்க்கும் இனியவனாய் சிறந்து
கனடாவைக் கொள்ளை கொண்டீர்!
அற்புதனே மணி விழாக் காணும் எங்கள்
அன்பு சோம சச்சிதானந்த இணையர்களே–நீவிர்
இன்னும் இன்னும் பல நூறாண்டு
பார் போற்ற வாழ்க சிறந்து.!!

நட்புடன்
**கவிஞர் மா.சித்திவிநாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம் எங்கள் நற்பண்பாளன் திரு. சோம சச்சி அண்ணரை

"அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு." திருக்குறள் 74

அன்பு ஆர்வமுடைமை ஈனும் – ஒருவனுக்குத் தொடர்புடையார் மாட்டுச் செய்த அன்பு அத்தன்மையால் பிறர் மாட்டும் விருப்பமுடைமையைத் தரும் அது நண்பு என்னும் நாடாச்சிறப்பு ஈனும் – அவ்விருப்பமுடைமைதான். அவற்குப் பகையும் நொதுமலும் இல்லையாய் யாவரும் நண்பு என்று சொல்லப்படும் அளவறந்த சிறப்பினைத் தரும். – பரிமேலழகர்

அன்பு பிறரிடம் பற்றுள்ளம் கொள்ளச் செய்யும் அந்த உள்ளம், நட்பு எனும் பெருஞ்சிறப்பை உருவாக்கும். –கலைஞர் மு.கருணாநிதி

அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும்: அஃது எல்லாரிடத்தும் நட்பு என்றுசொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும். –மு.வரதராசனார்

குடும்பம், உறவு என்பாரிடத்துக் கொள்ளும் அன்பு, உலகத்தவரிடம் எல்லாம் உறவு கொள்ளும் விருப்பை உண்டாக்கும். அதுவே அனைவரையும் நட்பாக்கும் சிறப்பையும் உண்டாக்கும். – சாலமன் பாப்பையா

மணிவிழா காணும் எங்கள் சச்சி அண்ணர் அறிமுகம் கிடைத்த காலத்தில் இருந்து பல்லாண்டு காலமாய் பண்புடனும் பரிவுடனும் நண்பனாய் பழகிவரும் பண்பாளர். கனடா நாட்டில் நாம் கண்டவர்களில் மனித நேயத்திற்க்காக தன்னை அற்பணித்துக் கொண்டு வாழும் உயர்ந்த மனிதன். தமிழ்தேசிய உணர்வின் ஊடே அவருக்கிருந்த இசையின் ஈடுபாட்டின் வாயிலாக அறிமுகம் கிடைத்த நாளில் இருந்து இன்று வரை எந்தவொரு தொய்வும் இன்றி அதன் வழியே வாழும் அன்பு நெஞ்சம்.

பல்லாண்டு பல்லாண்டுகாலம் இசையும் இனிமையுமாய் வாழ வாழ்த்தும்
**இசைத்தென்றல் இசைக்குழுவினர்**
**சிவஞானம் சிவபாதம் (இசைத்தென்றல் இசைக்குழ இசைநெறியாளர்)**
**சிவஞானம் சிவயோகர், சிவஞானம் சிவசோதி, ரி.எம்.எஸ். தனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழாக் காணுகின்ற பொன்மனச் செம்மல் வாழ்க!

பைந்தமிழர் பண்பாட்டின் சிந்துவெளி யாய்த்திகழும்
புங்கைநகர் பெற்ற புதல்வன் – அங்கு
புகழோடு வாழ்ந்த கலைஞன்!
தந்தைவழி யேயறிவும் தாயின்மடி யேதமிழும்
தான்கற் றுயர்ந்த தனையன் – பணி
தலையேற்றுக் கொண்ட தலைவன்!
விந்தையிது இருளுக்குள் வெளிச்சமது ஒளிந்தாற்போல்
வெள்ளைமனம் கொண்ட ஒருவன் – சிறு
பிள்ளைகுண முள்ள மனிதன்!
சிந்தையில் ஆன்மீகம் சந்ததம் கொண்டுசிவ
வழிபாட்டில் விழிவைத்தவன் – சச்சி
தானந்தன் பெயர் கொண்டவன்!

இன்தமிழ்க் கானங்கள் இசைக்கின்ற பொழுதிலே
இடிபோல் முழங்கி வருவான் – எமை
இறுகப் பிணித்து விடுவான்!
முன்நின்று பேசினால் மொட்டவிழ் மலர்போல
முறுவல் விரித்து நிற்பான் – மனம்
மெழுகாய் உருக்கி வைப்பான்!
மின்னலும் கார்மேக வண்ணமும் ஒன்றாக
வடித்துக் கொடுத்த உருவம் – இவன்
வதனம் கருணை வடிவம்!
பொன்விழாக் காணுமிப் பொன்மனச் செம்மலைப்
போற்றினோம் வாழ்க வாழ்க! — பெரும்
பேறுகள் பெற்று வாழ்க!

முட்டவரும் தடையெலாம் மோதித் தகர்க்கின்ற
மூர்க்கம் பிறக்க வேண்டும் — முழு
மூச்சில் உழைக்க வேண்டும்!
நட்டமரம் போல்வாழ்வோர் நடுவிலே
கனிகொடுக்கும்
நல்விருட்ச மாக வேண்டும் – பயன்
நல்குமொரு வாழ்வு வேண்டும்!
பட்டாக ஒளிவீசிப் பார்போற்றப் பல்லாண்டு
பணிசெய்து நீடு வாழ்க! – பிறர்
பிணிபோக்கப் பாடி வாழ்க!
எட்டாத தூரத்தைத் தொட்டாக வேண்டும்நீ
ஏறுபோல் வீறு கொள்க — பெயர்
கூறுமோர் வாழ்வு கொள்க!

**மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா**
(முன்னாள் தலைவர், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக்காணும் சமூக சேவையாளரும் சமூக சிந்தனைவாதியும்

இந்த வருடத்தில் (2017 Sept) மணிவிழா காணவிருக்கும் தலை சிறந்த சமூக சேவகரான திரு. சோம சச்சிதானந்தன் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் அதேவேளை, அவரது தந்தையார் திரு. சோமசுந்தரம் முன்னாள் மாவட்டசபை உறுப்பினர் அவர்களையும் நினைவு கூர்ந்து, தொடர்ந்து தந்தை வழி சேவையில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிவரும் சகோதரர் திரு. சோம சச்சி அவர்களின் கடந்த கால சேவைகளையும், தொடர்ந்து சேவையாற்றிவரும் அவரது ஆன்மீக பணிகளையும் குறிப்பிட்டு வாழ்த்துவது சரியென கருதுகிறேன்.

புங்கையூர் தந்த மைந்தனை இந்த கனடிய மண்ணிலும் இலங்கையிலும் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. இந்த கனடிய மண்ணில் வாழ்ந்த காலம் இக்கனடாவிலும், இலங்கை சார்ந்த சேவைகளையும், தன் கிராமம் (புங்குடுதீவு) சார்ந்த சேவைகளையும் நினைவு கூர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கையில் தமிழினம் அல்லற்படும் வேளையில் (அகதிகளாகவும், ஏதிலிகளாகவும், இழப்புக்களை சந்தித்தவேளை, கனடிய நாட்டில் ஆற்றிய சேவைகள் யாவரும் தெரிந்த ஒன்றே. தனது சொந்த மண்ணில் (புங்குடுதீவு) துன்பங்களையும் துயரங்களையும் போக்குவதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் சங்கம் அமைத்து ஆற்றிய சேவைகள் யாவரும் தெரிந்த ஒன்றே. அவரது கிராமம் சார்ந்த நண்பர்களோடு தாயகத்திலும் ஆற்றிய தார்மீக சேவைகள் யாவரும் தெரிந்த ஒன்றே.

அவரது தந்தையார் தீவக மக்கள் மத்தியிலும் தாயக மக்கள் மத்தியிலும், தமிழரசு கட்சியிலும் சிறந்த சேவையாற்றி யாழ். மாவட்டசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு சேவையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் வழித் தோன்றலில் வழிவந்த சகோதரர் திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் கனடிய மண்ணில் மிக பெரும் சேவையாற்றி கனடிய தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சிறந்த சேவையாளர் என்ற இடத்தை பெற்ற வருகிறார்.

அவர் குடும்ப, சமூக, அரசியல் வாழ்விலும் மக்களோடு இனிமையான சுபாவத்தோடு பலரும் பாராட்டும் வகையில் பண்பின் சிகரமாக வாழ்ந்து வருகிறார்.

அவரது தனிப்பட்ட திறமையை நோக்குகின்ற போது சிறந்த பேச்சாளர், சிறந்த பாடகர், தொகுப்பாளராக தலைமை தாங்கி நடாத்துவதில் சிறப்புப் பெற்று இருப்பதை கண்கூடாக காண்கிறோம். நண்பர்களோடு பழகுகின்ற போது இனிமையான சுபாவம் என்றுமே மறக்க முடியாது. புங்கையூர் மக்களின் தார்மீக, ஆன்மீக பணிகளுடன் சமூக பணிகளிலும் அந்த மண் மக்கள் தலைசிறந்து விளங்குவதைக் காண்கின்றோம்.

மணிவிழா காணும் நாயகன் திரு. சோம சச்சிதானந்தன் அவர்கள் என்றும் மதிப்புடன் ஆரோக்கிய வாழ்வும், நீண்ட ஆயுளும் பெற்று மனைவி, பிள்ளைகள், சமூகத்தினர் மத்தியில் சிறப்புற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

வாழ்க! வளர்க!

**S. Sivarajah** (J.P)
B.A, Ma(Soc)
திருமண பதிவாளர் (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவுதி நாட்டிலிருந்து...

வே.க. சோமசுந்தரம் சச்சிதானந்தன் அவர்களை வாழ்த்தி மகிழ்வதோடு அவர் பற்றிய வரலாற்றினை ஆரம்ப காலத்திலிருந்து அவரோடு ஒன்றாக பயணித்து வந்தவனென்ற வகையில் அவரின் சில துளிகளை பகிர்வதற்கு சந்தர்ப்பம் தந்தமைக்கு நன்றி கூறிக்கொண்டு

சோம சச்சிதானந்தன் அவர்கள் புங்குடுதீவு மேற்கில் பிறந்து புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தில் வர்த்தகத் துறையில் வர்த்தகத் துறையில் வளமோடு விளங்கிய அமரர் வி.எம். தம்பதிகளின் புதல்வியை மணம் முடித்து சிறப்போடு வாழ்ந்து வந்தனர்.

நாட்டில் உண்டான இடப்பெயர்வு காரணமாய் அவரையும் புலம்பெயர வைத்து விட்டது எனலாம். ஊரில் இருக்கும் பொழுது இவரோடும் இவரின் தந்தையார் சோமசுந்தரத்தோடும் இணைந்து அரசியல் பொதுப்பணி, சமயப்பணிகளை பாடசாலைக் காலங்களித்திலேயே இருந்து மேற்கொண்டு வந்தவர். அவரால் ஆரம்பிக்கப்பட்ட புங்குடுதீவு 3ம் வட்டார கலைமகள் மன்றம், சன் ஸ்ரார் விளையாட்டுக் கழகங்கள் மூலம் அந்த கிராமத்து பல இளைஞர்களை விளையாட்டுத் துறைகளிலும் சமூகப் பணிகளிலும் அவர்களை ஈடுபடுத்தி நல்வழிப்படுத்தியவர்.

1970ம் ஆண்டுத் தேர்தலில் தீவகத்தின் தமிழரசுக்கட்சி போட்டியிட்ட போது அவர் வெற்றிக்காக இவரது தந்தையார், தொண்டர் திருநாவுக்கரசு இன்னும் பலரோடு பணியாற்றிய அந்தக் காலங்கள் இன்றும் பசுமையாக நிறைந்துள்ளன.

பாடசாலைக் கல்வியினைத் தொடர்ந்து தொண்டர் ஆசிரியராக பணியாற்றி வருகையில் புங்குடுதீவு மத்தி கிழக்கு பகுதிகளின் விஷேட சேவையாளராகவும், பின்னர் புங்குடுதீவு மேற்கு கிராம சேவையாளராகவும் கடமையாற்றி புங்குடுதீவு அனைத்து மக்களின் அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரியவராய் திகழ்ந்து வந்ததோடு அப்பகுதி மக்களின் அனைத்துத் தேவைகளையும் மிகவும் நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில் துணிச்சலோடு பணியாற்றிமை இன்றும் அப்பகுதி மக்கள் மறவாது உள்ளனர் என்பதை நான் ஊர் செல்லும் போது அவர்கள் கூறக் கேட்டு மகிழ்ச்சி அடைந்ததுண்டு.

இவரது தந்தையார் சோமசுந்தரம் அவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினராக போட்டியிட்டு 21000க்கு மேற்பட்ட அதிகப்படியான வாக்குகளால் பெரு வெற்றியீட்டியதும் அதற்காக நாமும் துடிப்புடன் செயற்பட்டதும் இன்றும் மறக்கமுடியாத நிகழ்வுகளாகும்.

புலம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட நிலையில் கனடா தேசம் சென்று அங்கும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினை நிறுவி அதன் மூலம் தாயக மக்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றார். இலங்கையில் எப்பகுதியில் வாழும் மக்களையும் இவரின் பெயரைக் கூறினால் தெரியாதவர்கள் இல்லையெனலாம். அவ்வளவிற்கு தனது சேவையால் மக்களின் மனங்களில் நிறைந்து விளங்கி வருகின்ற எனது அன்புக்குரியவர் மணிவிழாக் காணும் இந்தநாளை மனமகிழ்ந்து வாழ்த்தி அவருக்கு என்றும் கிராஞ்சியம்பதி முருகனும் மீனாட்சியும் அருள்புரிய வேண்டித் தொழுகின்றேன்.

அன்புடன்
**குமார விவேகானந்தன்**
புங்குடுதீவு – 3
சவுதியரேபியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம்

Mr. Soma Satchithananthan

ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தால்
நடாத்தப்பட்ட மாணவர் திறன்காண் தேர்வுகளின்
போது பல வருடங்களாக நடுவர்களாக சேவை
ஆற்றியமைக்காக பாராட்டி கௌரவித்து
இவ்விருது வழங்கப்பெற்றது.

We present this award to our
humble judge who have take the
time to play a part in the
Ontario Tamil Teachers Association


May 23, 2015









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் க. பொ. இரத்தினம் கலந்துகொண்ட
இளைஞர்கழக புதிய கட்டடத் திறப்பு விழாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Volunteer Service Awards

Distinctions pour services bénévoles

Satchitahanandan Somasundaram

Sridurka Hindu Temple





Canada Saivite Council for Spiritual Support in Healthcare

Certificate Awarded

to

Somasundaram Satchithananthan

as

Saivite Spiritual Support Worker in Healthcare

In Recognition of the Successful Completion of the Course of Study and Training in Saiva Spiritual Support Work

Given in Toronto this seventeenth day of August 2007

Course Moderator

Dr. Joseph A. Chandrakanthan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிக்குரியவர்களை என்றும்

## நினைந்து கொள்கிறேன்

எனது மணிவிழாவிற்கு தலைமையேற்ற பேராற்றலும் பெருமதிப்புக்குமுரிய பேராசிரியர் கா. குகபாலன் அவர்களுக்கும், மணிவிழா சிறப்பாக அமைய வேண்டி அதற்காக மிகவும் கடுமையாக உழைத்த அனைத்து மணிவிழாக் குழுவின் அன்பு உள்ளங்களுக்கும், இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகள் இங்கும் இருந்து வாழ்த்துச் செய்திகளை தந்தும், வாழ்த்துரைகளையும் ஆசிகளையும் வழங்கிய அந்தணப் பெருமக்களுக்கும் பெரியோருக்கும் மணிவிழாக் குழுவினரின் அன்பான அழைப்பையேற்று இங்கே வருகைதந்து என்னை வாழ்த்திய அன்பானவர்களுக்கும், மணிவிழா மலர் சிறப்பாகவும், புதுமையாகவும் வெளிக்கொண்டு வந்திட வேண்டுமென கண்துஞ்சாது உழைத்த ஜே ஜே அச்சக அதிபர் திரு. சோதி, திருமதி. செல்வி அவர்களுக்கும், நடனங்களை வழங்கிய நடனக்குழுவினருக்கும், இரவு சைவ, அசைவ உணவுகளை சிறப்பாக தயாரித்து வழங்கிய விமிக்கா கிரி மற்றும் ஜஸ்மின் தேவன் அவர்களுக்கும், புகைப்படங்களை Quick snaps சங்கர் அண்ணாவிற்கும், DJ விக்கி அவர்களுக்கும், மற்றும் மணிவிழா சிறப்புற ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தாரின் இதயம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

**திரு. திருமதி. சோம சச்சிதானந்தன் குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசுடன் மனசு கலந்து
மகிழ்வுறு உறவுமுறை பகிர்ந்து
மயங்கிடு இதமான மாலையில்
மனப்பெருவெளி மண்டபம் நிரப்பியும்
மணிவிழா துலங்கச் செய்தும்
அன்பால் ஒன்றுகூடிய மனசுகளே
மிகுந்த நன்றி நன்றி
மணிவிழாக் குழுவின்
இதயம் நிறைந்த நன்றி!

## மணிவிழாக் குழுவினர்

பேராசிரியர் கா. குகபாலன், ஆறுமுகம் செந்தில் வடிவேல்,
வை. இராஜேஸ்வரன், சோதி செல்லா, மு. அரியராஜா,
கென் கிருபா, நடா உதயன், க. அழகன், சோ. சுந்தரகுமார்,
க. ஜெயம், கோ. தீபன், வி.கே. தனம், இ. விஜயகுமார்,
குமார மனோகரன், கு. கலியானசுந்தரம்,
ப. யோகேஸ்வரன், சி. சிவமோகன், வில்வ மோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Manivizha Malar**

**of**

**Mr. Soma Satchithanandan**

JJ Print 416.298.9322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org